# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 11, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 மார்ச் 25, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்*
*தான்கண் டனைத்திவ் வுலகு"*

எளிய மக்களிடம் இனிமையாகப் பேசி, தேவையானதைக் கொடுத்து உதவி செய்யும் ஆட்சியாளருக்குப் புகழ் தானாக வந்து சேரும். அவர் விருப்பம் போல் குடிமக்களும் அமைவார்கள்.

### 1. வினாக்கள் – விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள் - விடைகள். வினா எண் 61, திரு. ஜே. ஹேமச்சந்திரன், மாண்புமிகு* பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**61—**

**குளம் தூர் வாருதல்**

***5627—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**

*மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளங்களைத் தூர் வாரி ஆழப்படுத்த அரசுக்கு ஏதேனும் திட்டம் உள்ளதா?*

[2003 மார்ச் 25

*(ஆ) ஆம் எனில், அது எப்போது தொடங்கப்படும்?*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளங்களைத் தூர் வாரும் திட்டம் மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. நிதி நிலைமைக்கேற்ப பணி மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே நாஞ்சிநாடு என்ற பகுதியிலும் அதேபோல மற்ற பகுதியிலேயும் உள்ள நிலங்களில் கால்வாய்களையும், குளங்களையும் நம்பித்தான் அங்கே விவசாயம் நடந்துகொண்டு இருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். பெரிய குளங்கள்கூட சமீபத்திலே உடைக்கப்பட்டு — சரியாக பராமரிப்பு இல்லாததன் காரணமாகத்தான் அவை உடைக்கப்பட்டன என்பதுகூட மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்து இருக்கிறது. ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள குளங்களைத் தூர் வாரி ஆழப்படுத்துவதற்கு ஓர் உடனடி திட்டத்தை அரசு உருவாக்குமா? ஒரு வருடத்திலே குறைந்தது 100 குளங்களையாவது சரி பண்ணக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு வடிநிலப்பகுதியில் 960 பாசனக் குளங்கள் உள்ளன. இக்குளங்களைத் தூர் எடுத்து மராமத்து செய்ய திட்ட மதிப்பீடு மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் அவர்களின் பரிசீலனையில் உள்ளது. மேலும் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் கட்டம் 2-ன்கீழ் ரூ.15.56 கோடி மதிப்பீட்டில் 140 பாசனக் குளங்களைத் தூர் எடுத்து மராமத்து செய்ய ஏதுவாக கருத்துருவும் சேர்க்கப்பட்டு உள்ளது. இதற்காக உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டதும் விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

2003 மார்ச் 25]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் 21 வது பாராவிலே 100 ஏக்கருக்கும் குறைவான ஆயக்கட்டுகள் கொண்டுள்ள சிறிய ஏரிகளை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அரசால் அறிவிக்கப்பட்டு இருக்கின்றது. அந்தத் திட்டத்திலே, உணவுக்கு வேலை என்ற திட்டத்தையும்கூட இணைத்து சிறு பாசனக் குளங்களை ஆழப்படுத்தி கிராமப்புறப் பகுதியில் இருக்கிற மக்களுக்குப் பாசன வசதிக்கு மட்டும் அல்ல, குடிதண்ணீர் கிடைப்பதற்கும்கூட இந்தக் குளங்கள் பயன்படுகின்றன என்ற முறையிலே உடனடியாக அதற்கான திட்டத்தையும் இந்த food for work என்ற திட்டத்திலே எடுத்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் என்பது ஒரு காலத்திலே மிகவும் செழிப்பான மாவட்டமாக இருந்து வந்தது. தற்போது மழை பொய்த்துவிட்ட காரணத்தால் மிகப்பெரிய வறட்சிக்கு உள்ளாக்கப்பட்டு அங்கே இருக்கக்கூடிய கிணறுகள், ஆழ்குழாய்க் கிணறுகள் எல்லாம் வறண்டு போய் கிராமப் பகுதியிலே வாழக்கூடிய மக்கள், விவசாயம் பாதிக்கப்பட்டது மட்டும் அல்லாமல்..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.

**திரு. ஆஸ்டின்:** குடிநீருக்கும் அங்கே பாதிப்பு ஏற்படும் நிலை இந்த வறட்சியினால் உருவாகி இருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய குளங்கள் எல்லாம் பல ஆண்டு காலமாகத் தூர் வாரப்படாமலும், ஆழப்படுத்தப்படாமலும், பல குளங்களின் பெரும் பகுதி தனியார்களால் ஆக்கிரமிக்கப்பட்டும் வரும் நிலை இருந்து வருகிறது. எனவே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து அந்த மாவட்டத்தில் உள்ள அனைத்துக் குளங்களையும் ஆழப்படுத்துவதற்கு உத்தரவு

அளித்து இருந்தார்கள். அந்த அடிப்படையிலே இந்த ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஏதாவது சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து, அந்த அடிப்படையிலே அங்கே இருக்கக்கூடிய அனைத்துக் குளங்களையும், தூர் வாரி ஆழப்படுத்துவதற்கும் அங்கே இருக்கக் கூடிய ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கும், தேவைப்பட்டால் வாய்ப்பு உள்ள இடங்களில் மழை நீரைச் சேகரிக்கக்கூடிய வகையிலே புதிய குளங்களை வெட்டுவதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குளங்கள் தூர் வாரப்படுவதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்குத்தான் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்-2ன்கீழ் உலக வங்கியை நாடி அதனுடைய பணி ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மற்றபடி அவர்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்ற குளங்களைச் சொன்னார்கள். அவர் குறிப்பிட்டு எந்தப் பகுதியில் எந்தக் குளங்கள் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு ஆகிய இந்த மூன்று அணைகளை வைத்துத்தான் மாவட்டம் முழுவதும் விவசாயம் நடைபெற்று வருகிறது. வெகுநாட்களாக இந்த அணைகள் தூர் வாரப்படாத காரணத்தினாலே அணைகளினுடைய கொள்ளளவு வெகுவாக, பாதியாகக் குறைந்திருக்கின்ற சூழ்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்டத்தின்பால் கருணைகொண்டு அந்த அணைகளை தூர் வாரி, ஆழப்படுத்தி, அணைகளில் நீரினுடைய கொள்ளளவை அதிகப்படுத்துவதற்காக இந்த ஆண்டே முயற்சிகளை மேற்கொள்வார்களா என்று உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில், நாட்டில் இருக்கின்ற குளங்கள் அத்தனையையும், வாத்து வாய்க்கால்களையும் நாம் தூர் வாரி சீரமைத்ததன் பின்னால் அணைகள் தூர் வாரப்படுகின்ற பணி

2003 மார்ச் 25]

பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே 960 குளங்கள் தூர் வாரப்படுவது சம்பந்தமாக உலக வங்கியின் கடனைப் பெற்று அதனுடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறினார்கள். ஆனால் இந்த 960 குளங்கள் என்பது 100 ஏக்கர் வரையிலும் — 50 ஏக்கரிலிருந்து 100 ஏக்கர் வரையிலும் — இருக்கக்கூடிய குளங்கள். ஊராட்சி ஒன்றியங்களில் பல பகுதிகளில் 1 ஏக்கர், 1/2 ஏக்கர் என்று குளங்கள் இருக்கின்றன. இவற்றைச் சாதாரணமாக ஊராட்சி ஒன்றியங்களினாலும் சீர்செய்ய முடிவதில்லை. ஊராட்சிகளாலும் சீர்செய்ய முடிவதில்லை. அதற்கு பிரத்யேகமான நிதியும் ஒதுக்கப்படுவதில்லை. எனவே, குறிப்பாகச் சொன்னால் தோவாளை, அகஸ்தீஸ்வரம் தாலூகாக்களில் மிகப்பெரிய குளங்கள் உள்ளன. புத்தேரி குளம் என்ற ஒரு குளம் இருக்கிறது. அதுபோன்று பூராங்குளம் என்ற ஒரு குளம் இருக்கிறது. பல குளங்களில் கடந்த காலங்களிலே பெய்த பெருமழையின் காரணமாக உடைப்பு ஏற்பட்டன. அவை தூர் வாரப்படாமல் உள்ளன. ஏறத்தாழ 30 ஆண்டுகள் தாண்டி இருக்கும் தூர் வாரி. இவற்றை ஆழப்படுத்தினாலே, மழைக் காலத்தில் வரக்கூடிய தண்ணீரைச் சேமித்தாலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே இந்த இரண்டு தாலூகாக்களிலும் எந்தத் தண்ணீர்ப் பஞ்சமும் வருவதற்கு வாய்ப்பு இல்லை. அந்த அடிப்படையிலே ஒரு பிரத்யேக நடவடிக்கை என்ற முறையிலே அதிகப்படியான நிதியை ஒதுக்கி, இந்தக் குளங்களைத் தூர் வாருவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற அத்துணை குளங்களையும்—தமிழ்நாட்டில் பெறப்படுகின்ற மழையின் அளவு அந்தக் குளங்களின் கொள்ளளவுக்கு ஏற்ற அளவுக்கு—தூர் வாருகின்ற பணியை அனைத்து மாவட்டங்களிலும் செய்வதற்குத் திட்ட மதிப்பீடு தயாரிக்கச் சொல்லி உத்தரவிட்டிருக்கின்றார்கள். திட்ட மதிப்பீடும் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. உலக வங்கியின் உதவியும் நாடப்பட்டிருக்கிறது. மாநில நிதியிலிருந்தும் சில குளங்களை, முக்கியத்துவம் வாய்ந்த சில குளங்களை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

இப்படி முறையாக, படிப்படியாக அனைத்துப் பகுதிகளிலும் இருக்கின்ற குளங்களையும் தூர் வாருவதற்குத்தான், முதல் படியாக வறட்சி மாவட்டமாக இருக்கின்ற இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்துக் குளங்களையும் தூர் வாருவதற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். அதனையொட்டி அனைத்துப் பகுதிகளிலும் இருக்கின்ற, அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்ற குளங்களும் உறுதியாகத் தூர் வாரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 62, திரு. எம்.எஸ். சந்திரசேகரன், மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**62—**

**இரு வழிப்பாதை**

***12878—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:**

மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை-பொன்னை சாலை, பொன்னை-திருவலம் சாலை, சித்தூர்-திருத்தணி சாலை ஆகிய ஒருவழிப் பாதைகளை இருவழிப் பாதைகளாக மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எதிர்வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப இப்பணியை எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எஸ். சந்திரசேகரன்.

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை எண் 4-லிருந்து பிரிந்து செல்லும்

இப்படி முறையாக, படிப்படியாக அனைத்துப் பகுதிகளிலும் இருக்கின்ற குளங்களையும் தூர் வாருவதற்குத்தான், முதல் படியாக வறட்சி மாவட்டமாக இருக்கின்ற இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்துக் குளங்களையும் தூர் வாருவதற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். அதனையொட்டி அனைத்துப் பகுதிகளிலும் இருக்கின்ற, அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்ற குளங்களும் உறுதியாகத் தூர் வாரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 62, திரு. எம்.எஸ். சந்திரசேகரன், மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**62—**

**இரு வழிப்பாதை**

***12878—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:**

மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை-பொன்னை சாலை, பொன்னை-திருவலம் சாலை, சித்தூர்-திருத்தணி சாலை ஆகிய ஒருவழிப் பாதைகளை இருவழிப் பாதைகளாக மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எதிர்வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப இப்பணியை எடுத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எஸ். சந்திரசேகரன்.

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை எண் 4-லிருந்து பிரிந்து செல்லும்

2003 மார்ச் 25]

இராணிப்பேட்டை - பொன்னை சாலை 22 கிலோ மீட்டர் தூரமும், பொன்னை-திருவலம் சாலை 17 கிலோ மீட்டர் தூரமும் இருக்கிறது. இந்த இரு சாதாரண சாலைகளும் சித்தூர்-திருத்தணி சாலையில் இணைகின்றன. இந்த மூன்று சாலைகளின் வழியாக அண்டை மாநிலமான ஆந்திர மாநிலம் செல்ல வழியிருக்கிறது.

தேசிய நெடுஞ்சாலை வழியாகச் செல்லவேண்டிய கனரக வாகனங்கள் பெரும்பாலும் பொன்னை-திருவலம் சாலை வழியாகச் சென்று, சித்தூர்-திருத்தணி சாலை வழியாக சித்தூர் சென்றடைகின்றன. இதனால் இந்தச் சாலைகள் எப்பொழுதும் போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைகளாக மாறிவிட்டன. இதனால் அடிக்கடி விபத்துகளும் ஏற்படுகின்றன. எனவே, பொன்னை-திருவலம் சாலை, இராணிப்பேட்டை-பொன்னை சாலை மற்றும் சித்தூர்-திருத்தணி சாலைகளை மாநிலச் சாலைகளாக மாற்றி, ஒரு வழிப் பாதையை இருவழிப் பாதையாக மாற்றித் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணிப்பேட்டை-பொன்னை சாலை கி.மீ.0/0-21 கி.மீ. எனப்படுகின்ற மாவட்ட இதரச் சாலையாகும். இதில் 3 கி.மீ. இருவழிப் பாதையாகவும், 18 கி.மீ. ஒருவழிப் பாதையாகவும் இருக்கின்றது. மேற்கண்ட சாலைகள் ஒரு முக்கிய இதர மாவட்ட சாலையாகும். 18 கி.மீ. ஒருவழிப் பாதையை இருவழிப் பாதையாக்க ரூபாய் 213 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணி தற்சமயம் எந்தத் திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை.

பொன்னை-திருவலம் சாலை கி.மீ. 22/0 முதல் 39/0 வரை உள்ள சாலையாகும். இதில் ஒருவழிப் பாதையாக 13.50 கிலோ மீட்டரும், இருவழிப் பாதையாக 2.90 கிலோ மீட்டரும் உள்ளது. மற்ற சாலைப் பகுதிகள் இடைவெளிப் பாதைகளாக உள்ளன. மேற்கண்ட இடைவெளிப் பாதை 13.50 கி. மீ. நீளத்தை இருவழிப் பாதையாக்க ரூபாய் 155 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணியையும் தற்போது செயல்படுத்த எந்தவொரு திட்டத்திலும் பிரோரணையில் சேர்க்கப்படவில்லை.

[2003 மார்ச் 25

சித்தூர்-திருத்தணி சாலை கி.மீ.0/0 முதல் 5/8 வரை உள்ளது. இது ஒரு மாநிலச் சாலையாகும். இந்தச் சாலையும் ஏற்கெனவே இருவழிச் சாலைப் பாதையாக உள்ளது. வரிசை எண் 1 மற்றும் 2 சாலைகள் இம்மாவட்டத்திலுள்ள முக்கிய மாவட்ட இதர சாலைகளாகும். இச்சாலைகள் அண்டை மாநிலமான ஆந்திராவைத் தமிழகத்துடன் இணைக்கின்றன. இச்சாலைகள் தேசிய நெடுஞ்சாலை எண்4-ஐயும், ஆந்திர மாநிலத்தையும் இணைக்கின்ற சாலைகளாகும். விளைபொருட்கள், சித்தூர் மற்றும் வேலூருக்கு இச்சாலைகள் வழியாக எடுத்துச் செல்லப்படுகின்றன. இச்சாலை வழியாக நிறைய யாத்ரீகர்கள் திருப்பதி, திருத்தணி, சோளிங்கர் போன்ற புண்ணியத் தலங்களுக்குச் செல்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. போக்குவரத்தும் மிகவும் அதிகமாக உள்ளது. இச்சாலையை அகலப்படுத்தி மேம்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. எதிர்வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைக்கேற்ப இப்பணிகளை எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, மாண்புமிகு நிதி அமைச்சர்.

63—

**ஏலச் சீட்டு**

***5337—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏலச் சீட்டு நடத்துவதை வரைமுறைப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1982 ஆம் வருடத்திய சீட்டு நிதிகள் சட்டம் மற்றும் 1984 ஆம் வருடத்திய தமிழ்நாடு சீட்டு நிதி விதிகளுக்குட்பட்டு வரைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டம் (மத்திய சட்டம் 10)-ன்படி செயல்பட்டு வருகிறது.

[2003 மார்ச் 25

சித்தூர்-திருத்தணி சாலை கி.மீ.0/0 முதல் 5/8 வரை உள்ளது. இது ஒரு மாநிலச் சாலையாகும். இந்தச் சாலையும் ஏற்கெனவே இருவழிச் சாலைப் பாதையாக உள்ளது. வரிசை எண் 1 மற்றும் 2 சாலைகள் இம்மாவட்டத்திலுள்ள முக்கிய மாவட்ட இதர சாலைகளாகும். இச்சாலைகள் அண்டை மாநிலமான ஆந்திராவைத் தமிழகத்துடன் இணைக்கின்றன. இச்சாலைகள் தேசிய நெடுஞ்சாலை எண்4-ஐயும், ஆந்திர மாநிலத்தையும் இணைக்கின்ற சாலைகளாகும். விளைபொருட்கள், சித்தூர் மற்றும் வேலூருக்கு இச்சாலைகள் வழியாக எடுத்துச் செல்லப்படுகின்றன. இச்சாலை வழியாக நிறைய யாத்ரீகர்கள் திருப்பதி, திருத்தணி, சோளிங்கர் போன்ற புண்ணியத் தலங்களுக்குச் செல்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. போக்குவரத்தும் மிகவும் அதிகமாக உள்ளது. இச்சாலையை அகலப்படுத்தி மேம்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. எதிர்வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைக்கேற்ப இப்பணிகளை எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, மாண்புமிகு நிதி அமைச்சர்.

63—

**ஏலச் சீட்டு**

***5337—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏலச் சீட்டு நடத்துவதை வரைமுறைப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1982 ஆம் வருடத்திய சீட்டு நிதிகள் சட்டம் மற்றும் 1984 ஆம் வருடத்திய தமிழ்நாடு சீட்டு நிதி விதிகளுக்குட்பட்டு வரைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிச் சட்டம் (மத்திய சட்டம் 10)-ன்படி செயல்பட்டு வருகிறது.

2003 மார்ச் 25]

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு பெற்று நடத்தப்படுகின்ற சீட்டு கம்பெனிகளைப் பற்றி அமைச்சரவர்கள் பதில் கொடுத்திருப்பதாக நான் கருதுகிறேன். பதிவு பெறாமலேயே புற்றீசல் போல நடத்தப்படுகின்ற ஏலச் சீட்டு கம்பெனிகள் தனியார்கள்கூட ஏராளமாக நடத்துகின்றார்கள். குடும்பப் பெண்கள்கூட இதை நடத்துகின்றார்கள். பல்வேறு கனவுகளோடு பெண்களுடைய திருமணத்திற்காக, பிள்ளைகளுடைய படிப்புக்காக, வீடு வாங்குவதற்காக, சிறுசேமிப்பாக நினைத்து இந்தச் சீட்டுகளிலே மக்கள் ஈடுபடுகிறார்கள். ஆனால் காலப்போக்கிலே அவர்கள் ஏமாற்றப்படுகின்றார்கள், வஞ்சிக்கப்படுகின்றார்கள். அவர்களிடமிருந்து மக்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பை அரசு கொடுக்க நினைக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சரிடமிருந்து விடையை எதிர்பார்க்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தில் 28,112 பதிவுற்ற சீட்டு நிறுவனங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. பதிவு பெறாமல் அவ்வப்போது சீட்டு நிறுவனங்கள் ஆங்காங்கே இருப்பது குறித்து குற்றச்சாட்டு இருந்து அது அரசின் கவனத்திற்கு வருகின்றபோது, நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த அடிப்படையில் இதுவரை ஆறு பதிவுறாச் சீட்டு நிறுவனங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்தப் பகுதிகளில் அனுமதி பெறாமல் மக்களை ஏமாற்றுகிற வகையில் சீட்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றனவோ அந்தத் தகவல்கள் அரசுக்கு வருகிறபோது உடனடி நடவடிக்கையை கட்டாயம் அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் எப்போது புகார் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், தாங்கள் ஏமாற்றப்படுகின்றபோதுதான் அவர்கள் வந்து புகார் கொடுக்கின்றார்கள். அதற்கு முன்னதாகவே இப்படிப் பதிவு பெறாத நிறுவனங்கள் எப்படி நடத்தப்படுகின்றன என்பதைப் பற்றிய ஒரு ஆய்வை அரசு மேற்கொள்ள வேண்டியது அவசியம் அல்லவா என்பதற்குத் தங்கள் மூலமாக விடை காண விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை அரசு ஏற்று மாவட்ட Registrar மூலமாகத் தக்க நடவடிக்கை எடுக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2003 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலச் சீட்டுகள் நடத்தும் நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கும்போது சமீப காலமாக Reserve Bank guidelines என்று ரிசர்வ் வங்கி அனுமதியளிக்கும்போது சில வரைமுறைகளைக் கொடுத்திருக்கிறது. அந்த வரைமுறைகள் என்ன என்பதையும், அந்த வரைமுறையைப் பின்பற்றாத சீட்டு கம்பெனிகள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும் அறிய விரும்புகிறேன். எத்தனை வழக்குகள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன? அதுமட்டுமல்ல, சீட்டு நிறுவனங்களுக்கு பங்குதாரர்கள் செலுத்த வேண்டிய தொகையை Chit Funds Act என்ற அந்தச் சட்டத்தின் மூலமாக அவர்கள் செலுத்த வேண்டும் என்பதற்கும், Revenue Recovery Act-ன்படி அந்தத் தொகையை அவர்கள் செலுத்துவதற்கும் வட்டாட்சியர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்குகள் பல இப்போது வட்டாட்சியர் அலுவலகங்களில் தேங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த வழக்குகளிலும் சீட்டு கம்பெனிகளுக்கும் செலுத்த வேண்டிய தொகையை உடனடியாகச் செலுத்துவதற்கு நம்முடைய மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு நிறுவனமாக இருந்தபோதிலும் பிரிவு 1-ன்படி முன் அனுமதி பெறுமுன் பிரிவு 20-ன்படி, சீட்டுத் தொகைக்கு இணையான பிணையத் தொகையை 50 சதவீதமும்—உத்தரவாதம், வங்கியினுடைய உத்தரவாதம்—Bank guarantee—50 சதவீதமும், சீட்டு துணைப் பதிவாளருக்கு வழங்கப்பட வேண்டும். இது ரிசர்வ் வங்கியினுடைய விதி. இந்த விதிக்குட்பட்டு இருக்கின்ற அமைப்புகள் மட்டுமே பதிவு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு எங்கெங்கே இந்த விதிமுறைகள் மீறப்படுகின்றனவோ அவற்றின்மீது நடவடிக்கைகள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீட்டு கட்டியவர்கள் கூட்டம் கூட்டமாக Park, Park-ஆக மீட்டிங் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களிடத்திலே சீட்டுப் பணத்தை வசூல் செய்தவர்கள் குறைந்தபட்சத் தண்டனையாகச்

2003 மார்ச் 25]

சிறைச்சாலையிலே போய் இருந்துவிட்டு, ஜாமீனிலே வெளியே வந்து. இன்றைக்கு உல்லாசமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அப்படி உல்லாசமாக வாழ்ந்துகொண்டிருக்கிறவர்கள் மீது—பொதுப் பணத்திலே, பொதுமக்களை ஏமாற்றிச் சம்பாதித்த பணத்திலே உல்லாசமாக வாழ்ந்துகொண்டிருக்கிறவர்கள் மீது— நடவடிக்கைகளைக் கடுமைப்படுத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-ஆம் வருடத்திய சீட்டு நிதிகள் சட்டம் மற்றும் 1984-ஆம் ஆண்டினுடைய தமிழ்நாடு சீட்டு நிதி விதிகள் இவைகளுக்குட்பட்டு கடுமையான நடவடிக்கைகளை தற்போது அரசு எடுத்து வருகிறது. எங்கெங்கு குறைகள் இருக்கின்றனவோ, அவை அரசின் கவனத்திற்கு வரும்போது நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பதிவு பெறாத ஏல சீட்டு கம்பெனிகளில்தான் அதிக அளவு இப்படி ஏமாற்று வேலை நடப்பதால், மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையில் பதிவுபெற்ற ஏல சீட்டு கம்பெனிகளில்தான் பங்குதாரர்களாகச் சேரவேண்டுமென்று மக்களுக்கு அறிவுறுத்துகின்ற வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலும், கோட்டாட்சியர் அலுவலகங்களிலும் விழிப்புணர்வு மாநாடுகள் ஏற்படுத்தப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல ஆலோசனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ளார்கள். இதை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் இன்றைக்கு ஏல சீட்டு மூலம் பணம் போடுவதே தங்களுக்கு சில நேரங்களில் திருமணச் செலவு, மருத்துவச் செலவு, தங்கள் குழந்தைகளுடைய படிப்புச் செலவுகளுக்கு ஒட்டுமொத்தமாகப் பணத்தைச் சேகரிக்க வேண்டுமென்ற முறையிலேதான் அப்படித்தான் அந்தச் சீட்டிலே பணத்தைப் போடுகிறார்கள். சீட்டு கம்பெனி நடத்துபவர்கள் அந்தப் பணத்தைச் சுருட்டிக்கொண்டு சில மாத காலங்களிலே ஓடி ஒளிந்து விடுகிறார்கள்.

அதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்பு அடைகிறார்கள். தற்போது வங்கியிலே வட்டி விகிதம் குறைவாக இருக்கிறது. இதை எல்லாம் மனதிலே வைத்து, பொதுமக்கள் பயனடைகின்ற வகையிலே இந்த ஏல சீட்டு கம்பெனிகளை அரசே நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? பொதுமக்கள் எண்ணம் ஈடேறுமா என்று அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; தனியார் துறை மூலமாக இந்தப் பணி மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பதுதான் அதில் இந்திய அளவிலே இருக்கிற ஒரு கணிப்பு. அரசு ஏற்கெனவே இந்தப் பணியில் ஈடுபட்டு, பெரும் நட்டத்தைத் தழுவியதும் நாடு அறிந்த ஒன்று. எனவே, அரசு மீண்டும் இந்தத் துறைக்கு வராமல் தனியார் துறையிலே நடக்கின்ற தவறுகளைக் களைந்தெறிந்து, Indian Penalcode மூலமாகவும், சீட்டு நிதிச் சட்டத்தின் மூலமாகவும் தவறு செய்கின்றவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, இதைச் சீரமைப்பதே மிக உகந்ததாக இருக்கும். அந்த அடிப்படையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதி பெற்று நடத்தப்படுகிற ஏலச் சீட்டு நிறுவனங்கள், அனுமதி பெறாமல் நடத்தப்படுகிற நிறுவனங்கள் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டிலே இன்னும் ஆயிரக்கணக்கான நிதி நிறுவனங்களில் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயை ஜனங்கள் ஏதாவது வகையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகமூர்த்தி சொன்னதைப்போல போடுகிறார்கள். பத்திரிகைகளில் தொடர்ந்து அதிகாரபூர்வமாகக் கண்டுபிடிக்கப்பட்டு வெளியே வருகிற செய்திகள் மிகவும் குறைவானது. பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாயைத் திருப்பி ஜனங்களுக்குக் கொடுக்காமல், மிகப் பெரிய பாதிப்பு ஏற்படுத்தியிருக்கிற பெரிய நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்டிருக்கிற நிறுவனங்களில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை என்பது ஒரு வழி. பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்தப் பணம் கிடைப்பதற்கு நாம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என்பது பிரதானமாக இருக்கிறது. அரசு அதில் நடவடிக்கையைக் கொஞ்சம் அதிகப்படுத்துவதற்கு, கடுமைப்படுத்துவதற்கு என்ன ஏற்பாடு? அதேபோல இன்னும் சில நிறுவனங்களில் கந்து வட்டி என்கிற முறையிலும், மீட்டர் வட்டி என்கிற முறையிலும் ஜனங்கள் கடுமையாகச் சுரண்டப்படுகிறார்கள்.

2003 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், இது மானியக் கோரிக்கை இல்லை.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை, ஒரு தகவல் மட்டும். குண்டர்களை வைத்து வசூல் பண்ணுவது—அடியாட்களை வைத்து ஏலச் சீட்டு நிறுவனங்கள், பைனான்ஸ் நிறுவனங்கள் தனியாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைச் சட்டபூர்வமாகத் தடுப்பதற்கு அரசாங்கத்திடம் என்ன நடவடிக்கை இருக்கிறது என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத பல அமைப்புகளில் தவறுகள், முறைகேடுகள் இதுபோன்ற ஏமாற்றுகள் நடைபெற்று வருவது உண்மை தான். அதைத் தடுப்பதற்காக, அதில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்காக தனியாகவே காவல் துறையிலே ஒரு பிரிவு செயல்பட்டு வருகிறது. கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பெரும பணக்காரர்கள்கூட பெரும் அமைப்புகள் மூலமாக பொதுமக்கள், ஏழைகளின் பணத்தைக் கொள்ளையடித்திருப்பதைக்கூட, பல கால கட்டங்களில் நடவடிக்கைகளின் மூலமாக சரிசெய்யப்பட்டிருக்கிறது, சரி செய்யப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 64. திரு. லா. சந்தானம், மாண்புமிகு நிதி அமைச்சர்.

**64—**

**வாக்குச் சாவடி**

***22178—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், தொட்டப்பநாயக்கனூர் பஞ்சாயத்து, சேர்வைப்பட்டி, ஸ்ரீரங்கம், நோட்டம்பட்டியைச் சார்ந்த வாக்காளர்களுக்கு நோட்டம்பட்டியில் தனியாக வாக்குச் சாவடி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TRUTH ALONE TRIUMPHS

2003 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், இது மானியக் கோரிக்கை இல்லை.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை, ஒரு தகவல் மட்டும். குண்டர்களை வைத்து வசூல் பண்ணுவது—அடியாட்களை வைத்து ஏலச் சீட்டு நிறுவனங்கள், பைனான்ஸ் நிறுவனங்கள் தனியாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைச் சட்டபூர்வமாகத் தடுப்பதற்கு அரசாங்கத்திடம் என்ன நடவடிக்கை இருக்கிறது என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத பல அமைப்புகளில் தவறுகள், முறைகேடுகள் இதுபோன்ற ஏமாற்றுகள் நடைபெற்று வருவது உண்மை தான். அதைத் தடுப்பதற்காக, அதில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்காக தனியாகவே காவல் துறையிலே ஒரு பிரிவு செயல்பட்டு வருகிறது. கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பெரும பணக்காரர்கள்கூட பெரும் அமைப்புகள் மூலமாக பொதுமக்கள், ஏழைகளின் பணத்தைக் கொள்ளையடித்திருப்பதைக்கூட, பல கால கட்டங்களில் நடவடிக்கைகளின் மூலமாக சரிசெய்யப்பட்டிருக்கிறது, சரி செய்யப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 64. திரு. லா. சந்தானம், மாண்புமிகு நிதி அமைச்சர்.

**64—**

**வாக்குச் சாவடி**

***22178—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், தொட்டப்பநாயக்கனூர் பஞ்சாயத்து, சேர்வைப்பட்டி, ஸ்ரீரங்கம், நோட்டம்பட்டியைச் சார்ந்த வாக்காளர்களுக்கு நோட்டம்பட்டியில் தனியாக வாக்குச் சாவடி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2003 மார்ச் 25

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கால அட்டவணைப்படி 1-1-2003 ஆம் நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தம் முடிவடைந்து, வாக்காளர் பட்டியல்கள் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் 17-1-2003 அன்று வெளியிடப்பட்டுள்ளன. வாக்குச் சாவடிகளைச் சீரமைப்பது குறித்து இந்தியத் தேர்தல் ஆணையத்திடமிருந்து இதுவரை அறிவுரை ஏதும் பெறப்படவில்லை.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டித் தொகுதியைச் சேர்ந்த சேர்வைப்பட்டி, ஸ்ரீரங்கபுரம் கிராமங்களுக்கு இப்போது உள்ள வாக்குச் சாவடியானது ஏறக்குறைய 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக உள்ள இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே மக்கள் எல்லாம் 3 கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்து வாக்களிப்பதற்கு மிகுந்த சிரமப்படுகிறார்கள். தேர்தல் ஆணையம்கூட, அவர்களை எல்லாம் வாகனங்களில் ஏற்றி வரக்கூடாது என்று கடுமையான உத்தரவுகள் எல்லாம் போட்டிருக்கிற இந்த நேரத்தில், அவர்கள் வந்து வாக்களிப்பதற்கு ஏதுவாக அந்த வாக்குச் சாவடியை அமைத்துத் தருவதற்கு மாநில அரசு தேர்தல் ஆணையத்திற்குப் பரிந்துரை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையின் அடிப்படையில் வாக்குச் சாவடிகளை மாற்றியமைக்க வேண்டிய கோரிக்கை தலைமை தேர்தல் அதிகாரி மூலம் தேர்தல் ஆணையத்திற்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக இருக்கின்ற பகுதி எதுவாக இருந்தாலும் வாக்குச் சாவடிகளை ஏற்கெனவே இருக்கின்ற முதன்மை வாக்குச் சாவடியின் பக்கத்திலேயே கூடுதல் வாக்குச் சாவடியை உருவாக்க வேண்டும் என்பது விதிமுறை. அந்த அடிப்படையில் உசிலம்பட்டி போன்ற பல பகுதிகளுக்கும் தேவையின் அடிப்படையில் இதை ஈடேற்ற வேண்டுமென்று தலைமைத் தேர்தல் அதிகாரி, இந்திய தேர்தல் ஆணையத்திற்கு தகவல் தெரிவித்திருக்கிறார். அங்கிருந்து முடிவு இன்னும் வரவில்லை. முடிவு வந்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 65, டாக்டர் க. பொன்முடி, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்.

2003 மார்ச் 25]

முற்பகல் 10-25

**65—**

## நீதிமன்றக் கட்டடம்

***11754—டாக்டர் க. பொன்முடி:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் விரைவாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசால் ரூ.961.92 இலட்சங்களுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்ற நீதிமன்றக் கட்டடம் அங்கேயிருக்கின்ற அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அருகிலே இருக்கின்றது. அங்கேயிருக்கின்ற ஒரு நீண்ட நாள் கோரிக்கை—அந்த நீதிமன்றம் புதிய கட்டடத்திற்கு மாற்றப்படுகிறபோது, அந்தப் பழைய கட்டடத்தை அந்த அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்குக் கொடுக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கல்வித் துறையோடு கலந்து பேசி அதற்குரிய ஏற்பாடுகளை விரைவிலே செய்ய முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலம் மற்றும் கட்டடம் எந்தத் துறைக்குச் சொந்தமானது என்ற தகவல் இப்போது என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்துரு கொடுக்கிறபட்சத்தில் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 66, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

66—

**தங்கும் விடுதி**

***344—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு அதிகமாக வரும் பயணிகள் மற்றும் பக்தர்கள் தங்க போதுமான இட வசதிக்காகக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) கோயில் பகுதியில் பயணிகளைக் கவரும் விதத்தில் கட்டடம் கட்டும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு அதிகமாக வரும் பயணிகள் மற்றும் பக்தர்கள் தங்க திருக்கோயிலுக்குச் சொந்தமான 110 குடியிருப்புகள் ஏற்கெனவே உள்ளன. இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு மிக அருகில் அம்மன் சன்னதி முன்புறம் பழைய சேது இல்லம் தங்கும் விடுதிக் கட்டடம் இடித்து அப்புறப்படுத்தப்பட்ட இடத்தில், தோராயமாக, ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் உபரி நிதியிலிருந்து பயணிகளைக் கவரும் விதத்தில் வணிக வளாகத்துடன்கூடிய தங்கும் விடுதிக் கட்டடம் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் ஏன் கட்டடக் கலையையும் உலகத்திற்கே பறைசாற்றக்கூடிய வகையிலே, மிகப் பிரம்மாண்டமான முறையிலே அமைந்துள்ள இந்த இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு போதுமான வசதி, தங்கும் விடுதிகள் இல்லாமல், பல்வேறு சந்தர்ப்பங்களிலே வெளிநாட்டுப் பயணிகளும், உள்நாட்டுப் பயணிகளும் அவதியுறுகிறார்கள். குறிப்பாக, சென்ற முறை நானே,

[2003 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 66, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

66—

**தங்கும் விடுதி**

***344—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு அதிகமாக வரும் பயணிகள் மற்றும் பக்தர்கள் தங்க போதுமான இட வசதிக்காகக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) கோயில் பகுதியில் பயணிகளைக் கவரும் விதத்தில் கட்டடம் கட்டும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு அதிகமாக வரும் பயணிகள் மற்றும் பக்தர்கள் தங்க திருக்கோயிலுக்குச் சொந்தமான 110 குடியிருப்புகள் ஏற்கெனவே உள்ளன. இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு மிக அருகில் அம்மன் சன்னதி முன்புறம் பழைய சேது இல்லம் தங்கும் விடுதிக் கட்டடம் இடித்து அப்புறப்படுத்தப்பட்ட இடத்தில், தோராயமாக, ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் உபரி நிதியிலிருந்து பயணிகளைக் கவரும் விதத்தில் வணிக வளாகத்துடன்கூடிய தங்கும் விடுதிக் கட்டடம் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் ஏன் கட்டடக் கலையையும் உலகத்திற்கே பறைசாற்றக்கூடிய வகையிலே, மிகப் பிரம்மாண்டமான முறையிலே அமைந்துள்ள இந்த இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு போதுமான வசதி, தங்கும் விடுதிகள் இல்லாமல், பல்வேறு சந்தர்ப்பங்களிலே வெளிநாட்டுப் பயணிகளும், உள்நாட்டுப் பயணிகளும் அவதியுறுகிறார்கள். குறிப்பாக, சென்ற முறை நானே,

2003 மார்ச் 25]

அதுவும் சட்டமன்றக் கமிட்டியிலே சென்றிருந்தபோது அங்கு தங்குவதற்கு இடம் இல்லாமல், விடுதியிலே, ஹோட்டலிலே எங்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார்கள். ஆகையினால், தற்போது அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, அந்த 110 விடுதிகள் என்பது போதுமானதாக இல்லை. உலகத்தில் இருக்கக்கூடிய அத்தனை தமிழ் மக்களும் வந்து செல்லக்கூடிய, வெளிநாட்டுப் பயணிகள் வந்து செல்லக்கூடிய அருமையான சுற்றுலாத் தலமாக உள்ள இந்த இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு இன்னும் போதுமான அளவிற்கு தங்கும் விடுதிகள் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலில் மொத்தம் 110 குடில்கள் மற்றும் தங்கும் விடுதிகள் கட்டப்பட்டு பயணிகள் மற்றும் பக்தர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டு வருகின்றன. அங்கே மொத்த அறைகள் 104 இருக்கின்றன. வேண்டிய அளவிற்கு இப்போது தங்கும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கைக்கிணங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின் அடிப்படையில் தமிழ்நாட்டிலிருந்து மட்டுமல்லாமல், இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு வட மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் அதிகமான அளவில் வருவதால், தற்சமயம் 75 இலட்சம் ரூபாய் அளவில் கட்டுவதை ஒரு கோடி ரூபாய் அளவிற்கு கட்டுவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே அனுமதி பெற்றுக் கட்டடம் கட்டுவதற்கு அறநிலையத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், கட்டுவோம் என்று சொல்லிவிட்டார்.

**திரு. ஐ. கணேசன்:** அரசுக்கு எங்களுடைய மனப்பூர்வமான நன்றியைச் சொல்லி, மிக விரைவிலே இந்தக் கட்டடத்தை, இந்த நிதியாண்டிலேயே ஒரு கோடி ரூபாய் அளவிற்கு கட்ட அரசு முன்வர வேண்டுமென்று உங்கள் மூலமாக அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிக விரைவில் என்றால் கூடாரம்தான் போடமுடியும். கட்டடம் கட்டுவதற்கு நாளாகும் அல்லவா? (சிரிப்பு)

[2003 மார்ச் 25

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்படிப்பட்ட ஆலயங்களில் பல்வேறு கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் கூடியவிரைவில் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மீண்டும் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜி. விநாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் திருக்கோயில் என்பது தமிழகத்தில் இருக்கின்ற கலைகளின் இருப்பிடமாக இருக்கிறது. அங்கே பயணிகளைக் கவரும் விதத்தில் கட்டடம் கட்டப்படும் என்று அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொன்னார்கள், பயணிகளைக் கவரும் விதம் என்று சொன்னால் என்னென்ன அம்சங்கள் அங்கே இடம் பெறும் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லவில்லை. கேள்வியிலேயே பயணிகளைக் கவரும் விதத்தில் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று இருக்கிறது.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** அவருடைய பதிலிலே அந்த வார்த்தை இருந்தது.

**மாண்புமிகு திரு. பி. சி. ராமசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம், ஒற்றைப் படுக்கை அறை 8, இரட்டைப் படுக்கை அறை 50, இரட்டைப் படுக்கைக் கூடம் 4, நால்வர் படுக்கைக்கூடம் 22...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உங்களைக் குடும்பத்தோடு வாச் சொல்கிறார். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** இவை எல்லாம் இருக்கிறது. மேலும் பக்தர்கள் வரக்கூடிய அளவிற்கு தங்குவதற்கு நவீனமான முறையில் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2003 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, திருமதி எஸ். ராஜம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்.

**67—**

**செவிலியர் பயிற்சிக் கல்லூரி**

***8631—திருமதி எஸ்.ராஜம்மாள்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தூத்துக்குடியில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி, அரசு சார்பாக அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் உடனடியாக செயல்படுத்தப்படுமா?*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடியில் அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.*

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியானது, தூத்துக்குடி மாவட்டத்தின் தலைநகரம் ஆகும். இங்கே அரசு கலைக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ இல்லை. மருத்துவக் கல்லூரி இருப்பதால் இங்கு அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைந்தால் அண்டை மாவட்டங்களும் பயன்பெற வாய்ப்புண்டு. அரசு மறுபரிசீலனை செய்து, வரும் கல்வி ஆண்டிலாவது அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைக்கப்படுமா என்றுதான் மூலக்கேள்வியிலே கேட்டிருக்கிறார் அவர் அமைக்க விருப்பம் தெரிவித்திருப்பது, College of Nursing, B.Sc. Nursing படிக்க அந்தக் கல்லூரியை கேட்டிருக்கிறார். அதை அமைப்பதற்கு சாத்தியம் இல்லையென்றுதான் சொல்லியிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறபடி

2003 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, திருமதி எஸ். ராஜம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்.

**67—**

**செவிலியர் பயிற்சிக் கல்லூரி**

***8631—திருமதி எஸ்.ராஜம்மாள்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தூத்துக்குடியில் செவிலியர் பயிற்சிக் கல்லூரி, அரசு சார்பாக அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் உடனடியாக செயல்படுத்தப்படுமா?*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடியில் அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.*

**திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியானது, தூத்துக்குடி மாவட்டத்தின் தலைநகரம் ஆகும். இங்கே அரசு கலைக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ இல்லை. மருத்துவக் கல்லூரி இருப்பதால் இங்கு அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைந்தால் அண்டை மாவட்டங்களும் பயன்பெற வாய்ப்புண்டு. அரசு மறுபரிசீலனை செய்து, வரும் கல்வி ஆண்டிலாவது அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைத்துத் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைக்கப்படுமா என்றுதான் மூலக்கேள்வியிலே கேட்டிருக்கிறார் அவர் அமைக்க விருப்பம் தெரிவித்திருப்பது, College of Nursing, B.Sc. Nursing படிக்க அந்தக் கல்லூரியை கேட்டிருக்கிறார். அதை அமைப்பதற்கு சாத்தியம் இல்லையென்றுதான் சொல்லியிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறபடி

செவிலியர் பயிற்சிப் பள்ளி School of Nursing-ஐ ஆரம்பிப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதேபோல செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் ஒரு செவிலியர் பயிற்சிப் பள்ளி ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே, தூத்துக்குடியிலும் மிக விரைவில் செவிலியர் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68, திரு. கோவை தங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**68—**

**மருத்துவமனை**

***15922—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் குழந்தைகள் நல அரசு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வால்பாறை தொகுதியில் தனியாகக் குழந்தைகள் நல மருத்துவமனை அமைக்கும் திட்டம் இல்லை என்றாலும், தற்போது 38 படுக்கைகள் கொண்டதாக இருக்கும் அந்த மருத்துவமனையை மொத்தம் 50 படுக்கைகள் கொண்டதாக விரிவுபடுத்தி, 10 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே வைத்த கோரிக்கையை ஏற்று, தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மீது கருணை வைத்து குழந்தைகளுக்கு என்று தனியாக வார்டு கட்டிக் கொடுப்பதற்கு அவர்கள் ஏற்கெனவே எடுத்துக் கொண்ட முயற்சிக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வால்பாறை சட்டமன்ற தொகுதியில்

செவிலியர் பயிற்சிப் பள்ளி School of Nursing-ஐ ஆரம்பிப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதேபோல செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் ஒரு செவிலியர் பயிற்சிப் பள்ளி ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே, தூத்துக்குடியிலும் மிக விரைவில் செவிலியர் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68, திரு. கோவை தங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**68—**

**மருத்துவமனை**

***15922—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் குழந்தைகள் நல அரசு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வால்பாறை தொகுதியில் தனியாகக் குழந்தைகள் நல மருத்துவமனை அமைக்கும் திட்டம் இல்லை என்றாலும், தற்போது 38 படுக்கைகள் கொண்டதாக இருக்கும் அந்த மருத்துவமனையை மொத்தம் 50 படுக்கைகள் கொண்டதாக விரிவுபடுத்தி, 10 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே வைத்த கோரிக்கையை ஏற்று, தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மீது கருணை வைத்து குழந்தைகளுக்கு என்று தனியாக வார்டு கட்டிக் கொடுப்பதற்கு அவர்கள் ஏற்கெனவே எடுத்துக் கொண்ட முயற்சிக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வால்பாறை சட்டமன்ற தொகுதியில்

2003 மார்ச் 25]

முற்பகல் 10-35

உள்ள கோட்டூர் அரசு மருத்துவமனை, வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனை மேலும் வால்பாறையில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையம், பெத்தநாயக்கனூர் ஆரம்பச் சுகாதார நிலையம், முடீஸ் ஆரம்பச் சுகாதார நிலையம் போன்ற பல்வேறு மருத்துவமனைகளிலும் போதுமான அடிப்படை வசதிகள் தேவைப்படுகின்றன. அங்கே போதுமான டாக்டர்கள் கிடையாது. மேலும், வால்பாறை அரசு மருத்துவமனைக்கு கோட்டூர் அரசு மருத்துவமனைக்கு பெண் மருத்துவர்கள் வேண்டுமென்ற கோரிக்கையை, வால்பாறை தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்தியில் நான் ஏற்கெனவே வற்புறுத்தி மனு கொடுத்திருக்கிறேன். மேலும், வால்பாறையில், உடல்நலக் குறைவு ஏற்பட்டால் சுமார் 2 மணி நேரம் கடந்து வந்து பொள்ளாச்சிக்கு வந்து அந்த உடல்நலக் குறைவைச் சரிபடுத்த வேண்டிய நிலை இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வால்பாறைக்குப் போதுமான மருத்துவர்களை நியமனம் செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், வால்பாறை அரசு மருத்துவமனையிலே பெண் டாக்டர் இல்லை என்பதை அரசு அறியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி ஏற்கெனவே ஒரு பெண் மருத்துவரை அங்கே நியமித்தும், அந்தப் பெண் மருத்துவர் பணியிலே சேராமல் நீண்ட விடுப்பிலே சென்றுவிட்டார். வால்பாறை மருத்துவமனைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற டாக்டர்கள் எண்ணிக்கை மொத்தம் 6. தற்போது இரண்டு மருத்துவர்கள்தான் உள்ளபடியே இருக்கிறார்கள். காரணம், மலைப் பகுதி என்பதாலே அங்கே நியமிக்கப்படுகிற டாக்டர்கள் பணியிலே போய்ச் சேர மறுக்கிறார்கள். இதுதான் இப்போது இருக்கிற நிலைமை. இருந்தாலும் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மருத்துவத் துறைக்கு இப்போது 500 டாக்டர்களை நியமிப்பதற்கு உத்தரவுகளை வழங்கி விரைவிலே 500 டாக்டர்களை நியமிக்க இருக்கிறோம். அப்படி நியமிக்கப்படுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, வால்பாறை மருத்துவமனைக்கு ஒரு பெண் டாக்டரும், ஒரு குழந்தைகள் நல மருத்துவரும் உடனடியாக நியமிக்கப்படுவார்கள். அதுபோல

கோட்டூர் மருத்துவமனைக்கும் பெண் டாக்டர் நியமிக்கப்படுவார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல், அவருடைய தொகுதியில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமல்ல; மற்ற மருத்துவமனைகள் மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கிற அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களையும், மருத்துவமனைகளையும் மேம்படுத்துவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உலக வங்கியினுடைய உதவியை நாடியிருக்கிறார்கள். 650 கோடி ரூபாயை வழங்குவதற்கு உலக வங்கி முன்வந்திருக்கிறது. அந்தத் தொகை கிடைத்தவுடன் தமிழகத்திலே இருக்கிற அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்ட மருத்துவமனைகள், வட்டம்சாரா மருத்துவமனைகள் ஆகிய அனைத்திற்கும், நீங்கள் எதிர்பார்க்கிறபடி அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும். அப்புறம் தனியாகப் போய் நன்றி சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், தங்கம், சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வால்பாறையில் மருத்துவர்கள் தங்குவதற்கு இடவசதி இல்லாததால்தான் அங்கே மருத்துவர்கள் தங்க முடியாமல் இருக்கின்றார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்கம், தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 69, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**69—**

### மாணவியர் விடுதி

**•20692—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோட்டூர் மருத்துவமனைக்கும் பெண் டாக்டர் நியமிக்கப்படுவார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல், அவருடைய தொகுதியில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமல்ல; மற்ற மருத்துவமனைகள் மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கிற அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களையும், மருத்துவமனைகளையும் மேம்படுத்துவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உலக வங்கியினுடைய உதவியை நாடியிருக்கிறார்கள். 650 கோடி ரூபாயை வழங்குவதற்கு உலக வங்கி முன்வந்திருக்கிறது. அந்தத் தொகை கிடைத்தவுடன் தமிழகத்திலே இருக்கிற அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்ட மருத்துவமனைகள், வட்டம்சாரா மருத்துவமனைகள் ஆகிய அனைத்திற்கும் நீங்கள் எதிர்பார்க்கிறபடி அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும். அப்புறம் தனியாகப் போய் நன்றி சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், தங்கம், சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வால்பாறையில் மருத்துவர்கள் தங்குவதற்கு இடவசதி இல்லாததால்தான் அங்கே மருத்துவர்கள் தங்க முடியாமல் இருக்கின்றார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்கம், தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 69, திரு. சி. சிவசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**69—**

**மாணவியர் விடுதி**

***20692—திரு. சி. சிவசாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2003 மார்ச் 25]

திருப்பூரிலுள்ள மகளிருக்கான அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் மாணவியர் விடுதி கட்டித்தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பூரிலுள்ள மகளிருக்கான அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் மாணவியர் விடுதி கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரம் பின்னலாடைத் தொழிலுக்குப் பெயர் பெற்ற நகரம். இந்தப் பின்னலாடைத் தொழிலில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் பணி செய்கின்றார்கள். நமது மாண்புமிகு பேரவைத் தலைவரின் தொகுதியில் இருக்கின்ற தென் மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர்கள்கூடப் பணிக்காக திருப்பூர் வந்து அந்தப் பின்னலாடைத் தொழிற்சாலைகளிலே பணிபுரிகிறார்கள். அவர்களுக்குப் போதிய பயிற்சி இல்லாத காரணத்தால், அவர்கள் அங்கே திருப்பூரிலே பணியிடங்கள் காலியிருந்தும்கூட வேலை கேட்டுச் செல்கின்றபோது பயிற்சி இல்லாத காரணத்தினால் வேலை கிடைப்பதற்குச் சிறிது காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே, திருப்பூரிலே இருக்கக்கூடிய மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுவதற்காக வெளியூரிலேயிருந்து அங்கே மாணவிகள் வந்தாலும்கூடத் தங்குவதற்கு விடுதி இல்லாத காரணத்தினால், பயிற்சி நிலையம் இருந்தும் மகளிர் பயிற்சி பெற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்த மகளிர் பயிற்சி நிலையத்தில் தென் மாவட்டங்கள் போன்ற தமிழகத்திலே உள்ள பல்வேறு மாவட்டங்களிலேயிருந்து பயிற்சி பெறுகின்ற மகளிர்க்காக மகளிர் விடுதி ஒன்றைப் போர்க்கால அடிப்படையில் அரசு அமைக்க முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் படிக்கின்ற மொத்த மாணவிகளின் எண்ணிக்கை 33 தான்; அனுமதிக்கப்பட்ட இடங்கள் 132. அதில் இப்போது 33 மாணவிகள்தான் படித்துக்கொண்டிருக்கிறார்கள். குறைந்தபட்சம் ஒரு ஹாஸ்டலை உருவாக்க வேண்டுமென்றால் 50 பேராவது இருக்க வேண்டும் என்பது மரபு. அந்த அடிப்படையில் இப்போது முதலாம் ஆண்டில் 27 பேரும், இரண்டாம் ஆண்டில் 6 பேரும் படித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த எண்ணிக்கை

கூடுகிறபோது எண்ணிக்கையின் அடிப்படையில், அனுமதிக்கப்பட்டிருக்கின்ற மாணவிகளின் அடிப்படையில் கல்லூரியின் முதல்வர் அங்கு ஒரு விடுதி தேவை என்று அரசுக்குப் பிரேரணை அனுப்பினால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 70, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

70—

**வெற்றிலை ஆராய்ச்சி நிலையம்**

***19633—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெற்றிலை விவசாயிகள் நிறைந்த கபிலர்மலை தொகுதியில் வெற்றிலை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வெற்றிலை ஆராய்ச்சி நிலையம் கபிலர்மலை தொகுதியில் அமைப்பதற்கு தற்போது உத்தேசம் ஏதும் இல்லை.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதியிலே சில ஆண்டுகளுக்கு முன்பாக வெற்றிலை ஆராய்ச்சி மையமானது நல்லமுறையிலே செயல்பட்டுக்கொண்டிருந்தது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அந்த வெற்றிலை ஆராய்ச்சி மையம் இலாப நோக்கத்துடன் நடைபெறவில்லை என்ற ஒரு காரணம் கூறி, திருச்சி மாவட்டத்திலுள்ள சிறுகமணிக்கு அந்த வெற்றிலை ஆராய்ச்சி மையத்தை மாற்றி, தற்சமயம் அந்த வெற்றிலை ஆராய்ச்சி மையம் சிறுகமணியிலே செயல்பட்டுக் கொண்டு வருகிறது. ஆக, தமிழக அரசு இலாப நோக்கத்தை மட்டும் கணக்கில்கொள்ளாமல் இந்த வெற்றிலைச் சாகுபடியை அதிகரித்து நோய்நொடியில்லாத வெற்றிலையை உற்பத்தி செய்து, வெளி மாநிலங்களுக்கு

கூடுகிறபோது எண்ணிக்கையின் அடிப்படையில், அனுமதிக்கப்பட்டிருக்கின்ற மாணவிகளின் அடிப்படையில் கல்லூரியின் முதல்வர் அங்கு ஒரு விடுதி தேவை என்று அரசுக்குப் பிரோரணை அனுப்பினால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 70, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**70—**

**வெற்றிலை ஆராய்ச்சி நிலையம்**

***19633—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெற்றிலை விவசாயிகள் நிறைந்த கபிலர்மலை தொகுதியில் வெற்றிலை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வெற்றிலை ஆராய்ச்சி நிலையம் கபிலர்மலை தொகுதியில் அமைப்பதற்கு தற்போது உத்தேசம் ஏதும் இல்லை.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதியிலே சில ஆண்டுகளுக்கு முன்பாக வெற்றிலை ஆராய்ச்சி மையமானது நல்லமுறையிலே செயல்பட்டுக்கொண்டிருந்தது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அந்த வெற்றிலை ஆராய்ச்சி மையம் இலாப நோக்கத்துடன் நடைபெறவில்லை என்ற ஒரு காரணம் கூறி, திருச்சி மாவட்டத்திலுள்ள சிறுகமணிக்கு அந்த வெற்றிலை ஆராய்ச்சி மையத்தை மாற்றி, தற்சமயம் அந்த வெற்றிலை ஆராய்ச்சி மையம் சிறுகமணியிலே செயல்பட்டுக் கொண்டு வருகிறது. ஆக, தமிழக அரசு இலாப நோக்கத்தை மட்டும் கணக்கில்கொள்ளாமல் இந்த வெற்றிலைச் சாகுபடியை அதிகரித்து நோய்நொடியில்லாத வெற்றிலையை உற்பத்தி செய்து, வெளி மாநிலங்களுக்கு

2003 மார்ச் 25]

அனுப்பவேண்டும். எனது தொகுதியைச் சேர்ந்த பரமத்தி-வேலூர், பொத்தனூர், பாண்டமங்கலம், வெண்கரை, பாளப்பட்டி, நன்செய்யிடையார், வாளப்பாளையம், அனிச்சம்பாளையம், மற்றும் காவிரியின் இடது கரையிலும், அதேபோல் கரூர் மாவட்டத்திலே வேலாயுதம்பாளையம், புகளூர் மற்றும் நொய்யலில் இருந்து வாங்கல் வரை உள்ள விவசாயப் பகுதிகளிலும் மூன்றில் ஒரு பங்கு விவசாயிகள் வெற்றிலைச் சாகுபடி செய்து வருகின்றார்கள். ஆகவே, ஆயிரக்கணக்கான வெற்றிலை விவசாயிகள் பயன்பெறும் வகையிலே தற்சமயம் சிறுகமணியிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற வெற்றிலை ஆராய்ச்சி மையத்தையே பரமத்தி-வேலூர் பகுதியில் முன்பு செயல்பட்டது போல் செயல்பட அரசு ஆவன செய்ய வேண்டும். ஆகவே, இந்த வெற்றிலை ஆராய்ச்சி மையத்தை இங்கு மாற்றவேண்டும் என்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோளை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர்மலைக்கு அருகில் உள்ள பரமத்தி-வேலூரில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தினுடைய நிதி உதவியுடன் வெற்றிலை வாடல் நோய் ஆராய்ச்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வந்தது. ஆனால் அந்த நிலையத்திற்குப் போதுமான உள் கட்டமைப்புடைய கட்டட வசதிகள், நிலங்கள் இல்லாத காரணத்தினால் அது சிறுகமணிக்கு மாற்றப்பட்டது. சிறுகமணியில் இருந்து, விவசாயிகளுக்குத் தேவையான ஆராய்ச்சிகளை அது செய்து வருகிறது. எந்த ஆராய்ச்சியினுடைய பயனும் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க அலுவலர்களின் மூலமாகக் கிடைக்கிற காரணத்தினால் தற்போது இருக்கிற நிதிநிலையில் புதிதாக ஒன்று தொடங்குகிற சாத்தியம் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 71, திரு. இ.ஏ. லியாவுதீன் சேட், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**71—**

**கொள்முதல் நிலையம்**

***27645—திரு.இ.ஏ. லியாவுதீன் சேட்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2003 மார்ச் 25]

அனுப்பவேண்டும். எனது தொகுதியைச் சேர்ந்த பரமத்தி-வேலூர், பொத்தனூர், பாண்டமங்கலம், வெண்கரை, பாளப்பட்டி, நன்செய்யிடையார், வாளப்பாளையம், அனிச்சம்பாளையம், மற்றும் காவிரியின் இடது கரையிலும், அதேபோல் கரூர் மாவட்டத்திலே வேலாயுதம்பாளையம், புகளூர் மற்றும் நொய்யலில் இருந்து வாங்கல் வரை உள்ள விவசாயப் பகுதிகளிலும் மூன்றில் ஒரு பங்கு விவசாயிகள் வெற்றிலைச் சாகுபடி செய்து வருகின்றார்கள். ஆகவே, ஆயிரக்கணக்கான வெற்றிலை விவசாயிகள் பயன்பெறும் வகையிலே தற்சமயம் சிறுகமணியிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற வெற்றிலை ஆராய்ச்சி மையத்தையே பரமத்தி-வேலூர் பகுதியில் முன்பு செயல்பட்டது போல் செயல்பட அரசு ஆவன செய்ய வேண்டும். ஆகவே, இந்த வெற்றிலை ஆராய்ச்சி மையத்தை இங்கு மாற்றவேண்டும் என்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோளை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர்மலைக்கு அருகில் உள்ள பரமத்தி-வேலூரில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தினுடைய நிதி உதவியுடன் வெற்றிலை வாடல் நோய் ஆராய்ச்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வந்தது. ஆனால் அந்த நிலையத்திற்குப் போதுமான உள் கட்டமைப்புடைய கட்டட வசதிகள், நிலங்கள் இல்லாத காரணத்தினால் அது சிறுகமணிக்கு மாற்றப்பட்டது. சிறுகமணியில் இருந்து, விவசாயிகளுக்குத் தேவையான ஆராய்ச்சிகளை அது செய்து வருகிறது. எந்த ஆராய்ச்சியினுடைய பயனும் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க அலுவலர்களின் மூலமாகக் கிடைக்கிற காரணத்தினால் தற்போது இருக்கிற நிதிநிலையில் புதிதாக ஒன்று தொடங்குகிற சாத்தியம் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 71, திரு. இ.ஏ. லியாவுதீன் சேட், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**71—**

## கொள்முதல் நிலையம்

***27645—திரு.இ.ஏ. லியாவுதீன் சேட்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மார்ச் 25

(அ) அரவக்குறிச்சி தொகுதியில் முருங்கை விவசாயிகளுக்காக முருங்கைக் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரவக்குறிச்சி தொகுதியில் முருங்கைக் கொள்முதல் நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருங்கை எனது அரவக்குறிச்சி தொகுதியில் அமோக விளைச்சல் இருப்பதால் அதற்குரிய விலை கிடைப்பதில்லை. சுமார் இரண்டு ரூபாய்க்கு 20 முருங்கைக்காய்கள் கொண்ட ஒரு கட்டே விற்கப்படும் நிலை ஏற்படுகின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. வேளாண் தொழிலைச் சார்ந்த முருங்கைப் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை எனது தொகுதியில் தொடங்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருங்கைக் காய் மற்றும் முருங்கைத் தழையை எல்லோரும் விரும்பி சாப்பிடுகிறோம். அப்படிச் சாப்பிடுகிற நேரத்தில் தோட்டக்கலை மேம்பாடு வாயிலாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிற மா, வாழை, முந்திரி, வீரிய ஒட்டு வகை என்று மட்டும் சேர்த்திருக்கிறார்கள். முருங்கைக் காய் வீரிய ஒட்டு வகைதான் என்று நினைக்கிறேன். நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலேகூட ஜட்ரோபா (Jatropha) பாரடைஸ் மாம் இவையெல்லாம் உற்பத்தி செய்து அவற்றை அதிகரிக்க வேண்டுமென்கிற நிலையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். வெளிநாடுகளில்கூட முருங்கைக் காயை விரும்பிச் சாப்பிடுகிறார்கள். ஆகவே, முருங்கைக் காயை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு, ஒரு தொழிற்சாலை தமிழகத்திலே ஏற்படுத்தப்படுமா, அமைச்சர் ஏற்படுத்துவாரா என்று உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2003 மார்ச் 25]

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் துணைத் தலைவர் முருங்கைக் காய் மேல் ரொம்ப விருப்பமாக இருக்கிறார். (சிரிப்பு) சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருங்கைக் காயில் இரும்புச் சத்து அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முருங்கைக் காயை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு உரிய வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுமா என்று கேட்கிறார்கள். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு முன்வருவார்களானால் அதை ஏற்றுமதி செய்வதிலே எந்தவிதமான தடங்கலும் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருங்கைக் காய் உற்பத்தியைப் பொறுத்தவரையில் ஒட்டன்சத்திரம், அரவக்குறிச்சி, வெள்ளக்கோயில் ஆகிய 3 தொகுதிகளிலும் விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்கின்றார்கள். சில நேரங்களில் விவசாயிகளுக்குச் சரியான விலை கிடைப்பதில்லை. அந்த விலை கிடைக்காத நேரத்திலே சேமித்து வைத்து விவசாயிகளுக்கு நல்ல கட்டுப்படியான விலை கிடைக்கின்ற வகையிலே அரசின் சார்பாக இந்த மூன்று தொகுதிகளையும் உள்ளடக்கிய ஒட்டன்சத்திரத்திலே—அங்கே தமிழ்நாட்டிலேயே பெரிய காய்கறி மார்க்கெட் இருக்கிறது—அரசின் சார்பாக குளிர்ச்சாதனக் கிடங்கு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 72, திரு. ஆ.கு.சி. அன்பழகன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**72—**

## குழந்தை நலக் காப்பகம்

***18646—திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குழந்தைகள் நலக் காப்பகங்கள் கிராமந்தோறும் அமைக்கும் எண்ணம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

2003 மார்ச் 25]

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் துணைத் தலைவர் முருங்கைக் காய் மேல் ரொம்ப விருப்பமாக இருக்கிறார். (சிரிப்பு) சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருங்கைக் காயில் இரும்புச் சத்து அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முருங்கைக் காயை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு உரிய வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுமா என்று கேட்கிறார்கள். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு முன்வருவார்களானால் அதை ஏற்றுமதி செய்வதிலே எந்தவிதமான தடங்கலும் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருங்கைக் காய் உற்பத்தியைப் பொறுத்தவரையில் ஒட்டன்சத்திரம், அரவக்குறிச்சி, வெள்ளக்கோயில் ஆகிய 3 தொகுதிகளிலும் விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்கின்றார்கள். சில நேரங்களில் விவசாயிகளுக்குச் சரியான விலை கிடைப்பதில்லை. அந்த விலை கிடைக்காத நேரத்திலே சேமித்து வைத்து விவசாயிகளுக்கு நல்ல கட்டுப்படியான விலை கிடைக்கின்ற வகையிலே அரசின் சார்பாக இந்த மூன்று தொகுதிகளையும் உள்ளடக்கிய ஒட்டன்சத்திரத்திலே—அங்கே தமிழ்நாட்டிலேயே பெரிய காய்கறி மார்க்கெட் இருக்கிறது—அரசின் சார்பாக குளிர்ச்சாதனக் கிடங்கு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 72, திரு. ஆ.கு.சி. அன்பழகன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**72—**

## குழந்தை நலக் காப்பகம்

***18646—திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குழந்தைகள் நலக் காப்பகங்கள் கிராமந்தோறும் அமைக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2003 மார்ச் 25

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குழந்தைகள் நலக் காப்பகங்கள் கிராமந்தோறும் அமைக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை எல்லாம் வாழவைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலகத்திலேயே முதன்முதலாகத் தமிழகத்தில் தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டுவந்து அன்னை தெரசா அவர்களுடைய நற்பாராட்டுதலைப் பெற்றார்கள். எனவே, இதனை மறுபரிசீலனை செய்து தமிழகத்தில் ஏழை கூலித் தொழிலாளர்களுடைய குழந்தைகள் நலன் காக்கும் விதத்திலே ஒன்றியந்தோறும் குழந்தைகள் நலக் காப்பகம் அமைக்க அரசு முன்வருமா என பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் காப்பகங்கள் தமிழகத்தில் இரண்டு வகையாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒன்று, வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் குழந்தைகளையும், நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளையும் பகல் நேரத்தில் கவனித்துக் கொள்ளக்கூடிய குழந்தைகள் காப்பகங்கள். இரண்டாவது அரசு குழந்தைகள் காப்பகங்கள், சமூக நலத் துறையால் கரூர், திருவள்ளூர், திருவாரூர், தேனி மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்கள் தவிர 25 மாவட்டங்களில் காப்பகங்கள் செயல்படுகின்றன. இந்தக் காப்பகங்கள் என்பது பெற்றோரோ அல்லது உறவினரோ இல்லாத ஆதாரவற்ற கைவிடப்பட்ட குழந்தைகள், தாய் அல்லது தந்தை யாராவது ஒருவர் இறந்துவிட்ட நிலையில் அந்தக் குழந்தைகள், தொழுநோய், மனநோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றவர்களின் குழந்தைகள், நீண்டநாள் சிறைச்சாலையிலே கைதியாக இருக்கிறவர்களின் குழந்தைகள்; இது தவிர தமிழகத்திலே 30,638 மையங்கள் அங்கன்வாடி மையங்கள் உட்பட குழந்தைகளை கிராமங்கள்தோறும் கவனித்துக்கொள்வதற்கு காப்பகங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. எனவே, கிராமங்கள்தோறும் காப்பகங்கள் அமைக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை, திருவண்ணாமலை மாவட்டத்தில் தொண்டு நிறுவனங்கள், அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலமாக அந்தத் தொகுதியிலே நிறுவுவதற்கு அரசு கவனத்தோடு அதை ஏற்று, இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2003 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 73, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**73—**

**கட்டட வசதி**

***15139—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் தொகுதி, கழுகுமலை அரசு ஆதிதிராவிடர் மாணவர் இல்லத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் தொகுதி, வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் கழுகுமலை அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்குப் புதியதாக அரசுக் கட்டடம் கட்டுவது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-50

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியின் மீது மிகுந்த பற்றும், பாசமும் கொண்டு, தமிழகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்களின் நலன் காத்திட வேண்டுமென்ற எண்ணத்தைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டு காலத்திற்குள், எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு பரிவில்லிக்கோட்டை, புளியம்பட்டி, கயத்தாறு, சில்லாங்குளம் ஆகிய 4 இடங்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்று கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன என்பதற்காகத் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோல இந்த ஆண்டும் கழுகுமலை மாணவர் இல்லம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்ற உத்தரவாதத்தினைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பசுவன்தனை, கைலாசபுரம், சில்லாங்குளம் ஆகிய இடங்களில் மாணவர் இல்லம் கட்டுவதற்கு அரசு நிதி எப்போது ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

2003 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 73, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**73—**

## கட்டட வசதி

***15139—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கழுகுமலை அரசு ஆதிதிராவிடர் மாணவர் இல்லத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் கழுகுமலை அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்குப் புதியதாக அரசுக் கட்டடம் கட்டுவது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*முற்பகல் 10-50*

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியின் மீது மிகுந்த பற்றும், பாசமும் கொண்டு, தமிழகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்களின் நலன் காத்திட வேண்டுமென்ற எண்ணத்தைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டு காலத்திற்குள், எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு பரிவில்லிக்கோட்டை, புளியம்பட்டி, கயத்தாறு, சில்லாங்குளம் ஆகிய 4 இடங்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்று கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன என்பதற்காகத் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோல இந்த ஆண்டும் கழுகுமலை மாணவர் இல்லம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்ற உத்தரவாதத்தினைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பசுவன்தனை, கைலாசபுரம், சில்லாங்குளம் ஆகிய இடங்களில் மாணவர் இல்லம் கட்டுவதற்கு அரசு நிதி எப்போது ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் மொத்தம் 1,076 ஆதிதிராவிடர் நல மாணவ, மாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன. இதில் தனியார் கட்டடங்களில் வாடகையில் இயங்கி வரும் 574 விடுதிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் அரசுக் கட்டடங்கள் கட்டித்தரப்பட வேண்டும் என ஆணையிட்டதைத் தொடர்ந்து, முதல் கட்டமாக 143 விடுதிகளுக்கு ஹட்கோ கடன் உதவி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஆகியவற்றைக் கொண்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டு ஆண்டுகளுக்குள் வாடகையில் இயங்கிவரும் அனைத்து விடுதிகளுக்கும் அரசுக் கட்டடங்கள் கட்டித்தரப்பட வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையின்பேரில் நடப்பு ஆண்டு 150 விடுதிகளுக்கு அரசுக் கட்டடங்களாக கட்டித்தரப்படும் என நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளார்கள். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து 150 விடுதிகளுக்கு இடத் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இந்த இடத் தேர்வுப் பட்டியலில் ஒட்டப்பிடாரம் பகுதியிலுள்ள கழுகுமலை ஆதிதிராவிடர் நல மாணவ, மாணவியர் விடுதியும் இடம் பெற்றுள்ளது. 150 விடுதிகளுக்கும் இடத் தேர்வு பணி முடிவுற்றதும் கட்டடப் பணி தொடங்கப்படும். மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சில்லாங்குளம், கைலாசபுரம், பசுவந்தனை ஆகிய இடங்களில் இடத் தேர்வு பணி விரைவாக முடிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆதிதிராவிட மாணவ, மாணவியர் கல்வி முன்னேற்றத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையால் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய விடுதிகள் கட்டப்படுவதன் மூலம் ஏழை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியரின் கல்வித் தரம் பெருமளவில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில்தான் உயர்ந்து வருகிறது என்பதை மிக்க மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராம் பிரபு.

**திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல பகுதிகளில் கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு முன்பாக அரசு ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகள் கட்டப்பட்டு, அந்த விடுதிகளில் அன்றைய நிலையில், கிட்டத்தட்ட 50-லிருந்து 100 மாணவர்கள் மட்டுமே தங்கிப் படிக்கக்கூடிய ஒரு நிலை இருந்துவந்துகொண்டிருக்கிறது. 50-லிருந்து 100 மாணவர்கள் படிப்பதற்குக் கட்டப்பட்ட அந்தக் கட்டடங்களில் இன்று சுமார்

2003 மார்ச் 25]

*200-லிருந்து 250 மாணவர்கள் படிக்கக்கூடிய ஒரு நிலை இருக்கின்றது. ஆகவே, அந்த விடுதிகளில் கூடுதல் கட்டடங்கள் அல்லது புதியதாக மாணவர் விடுதிகள் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவருகின்ற விடுதிகளுக்கு அரசு சொந்தக் கட்டடம் கட்டித்தரப்படவேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு விடுதியில் கூடுதலாக மாணவர்கள் சேர்க்கப்பட்டு, அதிகமான எண்ணிக்கையில் இருக்கின்ற அப்படிப்பட்ட விடுதிக்குக் கூடுதலாகக் கட்டடம் கட்டப்படவேண்டுமென்ற கோரிக்கையைச் சொல்லியிருக்கிறார்கள். முறையாக கருத்துரு வரப்பெறுமானால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதை ஆய்வு செய்யும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கடந்த இரண்டு ஆண்டுகாலமாக ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி கட்டுவதற்கு நிதி ஒதுக்கியும், இதுவரையில் அங்கு இருக்கக்கூடிய மாவட்ட அதிகாரி அவர்களால் அப்பணி தொடங்கப்படவில்லை. ஆதலால் மாண்புமிகு அவைத் தலைவர் வாயிலாக நான் கேட்க விரும்புவது, உடனடியாக என்னுடைய தொகுதியில் ஒதுக்கப்பட்டிருக்கின்ற அந்த நிதியைப் பயன்படுத்தி விரைவில் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்துப் இன்னும் கட்டடம் கட்டவில்லை என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். கட்டுவதற்குண்டான இடத் தேர்வு முடிந்தால்தான் அந்த இடத்திலே கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும். ஆகவே, இடத் தேர்வை விரைவாக முடிப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-02 ஆம் ஆண்டிற்கு எனது தொகுதியில்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

எட்டயபுரத்திலே ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து நிதி ஒதுக்கப்பட்டும் இதுவரை அந்தப் பணி தொடங்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் இங்கே கூறும்போது இடத் தேர்வு செய்த பின்பு விடுதி கட்டப்படும் என்று ஓர் அறிவிப்பினை அறிவித்தார்கள். ஆனால், எட்டயபுரத்திலே ஆதிதிராவிட மாணவர்களுக்கு என்று விடுதி கட்டுவதற்கு ஏற்கெனவே இடம் வாங்கப்பட்டுள்ள சூழ்நிலையில் அந்த விடுதி கட்டுவதற்குத் தேவையான அனுமதி வழங்கப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை முறையாக ஆய்வு செய்து — இந்த ஆண்டு 150 விடுதிகள் கட்டுவதற்கு இடத் தேர்வுப் பணி நடைபெற்று வருகிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கோரிக்கையும் இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சங்கராபுரம் தொகுதியில், வெள்ள மலையில் மேல்வாழப்பாடி என்ற இடத்திற்கு இடமிருந்தும், என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியில் விடுதி அமைப்பதற்கு ஏற்பாடு செய்தும் இன்றுவரை இரண்டு ஆண்டுகள் முடிந்தும், இடமிருந்தும் இன்னும் அமைக்கவில்லை. அது எப்போது அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கின்ற கோரிக்கை, இடமிருந்தும் அமைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், முறையாக இடம் தேர்வு செய்வதென்றால் அரை ஏக்கர் இடம் தேர்வு செய்ய வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றவுடன் அப்படிப்பட்ட இடங்களில் கட்ட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அதற்கான முறையான இடம் தேர்வு செய்தால் கண்டிப்பாக அந்த இடத்தில் விடுதி கட்டிக் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2003 மார்ச் 25]

நம்முடைய அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற விடுதிகளுக்குக் கட்டடங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆதிதிராவிட மக்கள், மாணவர்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அரசுக் கட்டடங்கள் கட்டியிருக்கின்ற இடங்களில் சுகாதாரக் கேடு அதிகமாக இருக்கிறது; Toilet facilities இல்லை; சென்னை நகரத்திலேகூட கடந்த வாரம் பல மாணவர்களுக்கு அம்மை நோய் போட்டு, பரீட்சை எழுத முடியாத ஒரு நிலை இருக்கிறது என்பதை இந்த அரசு அறியுமா? அப்படி அறியும் என்றால் — இறுதியாண்டு படிக்கின்ற மாணவர்கள் பரீட்சை எழுத முடியாத நிலைக்கு இன்றைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறார்கள் — அதைக் கருத்திலேகொண்டு அரசுக் கட்டடங்களில் உரிய சுகாதார வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான தகவலை இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன்தான், இப்படிப்பட்ட சுகாதார வசதிகள் இல்லாத வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகிற விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடமாக, அனைத்து அடிப்படை வசதிகளையும் பூர்த்தி செய்கிற அளவுக்கு சொந்தமாகக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மாதிரி அம்மை நோய் எதுவும் அந்த மாணவர்களுக்கு வரவில்லை. முறையாக மாணவர்கள் படித்து வருகிறார்கள். இருந்தாலும், ஏற்கெனவே கட்டிக் கொடுக்கப்பட்ட அரசு விடுதிகளில் ஏதாவது சுகாதாரக் குறைகள், தண்ணீர் வசதி ஏதாவது குறைவாக இருக்குமானால் அதை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து அப்படிப்பட்ட இடங்களில் குறைபாடுகள் நீக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

*முற்பகல் 11-00*

## 2. தகவல் கோரல்

### உறுப்பினரின் முன்னறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். *(குறுக்கீடுகள்)* எதுவாக இருந்தாலும் என்னுடைய அறைக்கு வாருங்கள், பேசலாம். *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை, கொடுத்திருக்கிற பிரச்சினையை என்னுடைய அறையிலே வந்து விவாதியுங்கள். *(குறுக்கீடுகள்)*

## 3. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ப. இராஜரெத்தினம். *(குறுக்கீடுகள்)*

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் *2001-2003* ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் *134* முதல் *137* வரையிலான *4* அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். *(குறுக்கீடுகள்)*

*(பாட்டாளி மக்கள் கட்சியினர் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

## 2. தகவல் கோரல் — தொடர்ச்சி

### உறுப்பினரின் முன்னறிவிப்பு—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2002-2003* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கை. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* திரு. ஜி.கே. மணி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். குழப்பம் விளைவிக்க

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வேண்டும் என்கிற நோக்கத்திற்காக வந்து குழப்பம் விளைவித்தால் அதற்கு நான் எந்தப் பொறுப்பையும் ஏற்க முடியாது. நீங்கள் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறீர்கள். எப்போது எடுத்துக்கொள்வது என்று நானே தெரிவிக்கிறேன். என்னுடைய அறைக்கு வாருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. மணி அவர்கள் தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்திருக்கிற பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்பு அறிவிப்பு இவையெல்லாம் என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. அதை எப்போது எடுத்துக்கொள்வது என்பது பற்றி என்னுடைய முடிவை நான் பின்னால் தெரிவிக்கிறேன். (குறுக்கீடுகள்) கொடுத்திருக்கிற பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் என்னுடைய அறைக்கு வந்து கேளுங்கள். (குறுக்கீடு) திரு. மணி என்னுடைய அறைக்கு வாருங்கள், பேசலாம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** இது முக்கியமான பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தும் எடுத்துக்கொள்ளாத காரணத்தினாலே, இதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கடுமையாகக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) அவைக்குள்ளேயிருந்து தொண்டை அவர்கள் சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக்குள்ளேயிருந்து கொண்டு கோஷம் எழுப்புவது முறையற்றது.

(பாட்டாளி மக்கள் கட்சியினர் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டு வெளிநடப்புச் செய்தனர்)

*முற்பகல் 11-00*

## 2. தகவல் கோரல்

### உறுப்பினரின் முன்னறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். *(குறுக்கீடுகள்)* எதுவாக இருந்தாலும் என்னுடைய அறைக்கு வாருங்கள், பேசலாம். *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை, கொடுத்திருக்கிற பிரச்சினையை என்னுடைய அறையிலே வந்து விவாதியுங்கள். *(குறுக்கீடுகள்)*

## 3. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ப. இராஜரெத்தினம். *(குறுக்கீடுகள்)*

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் *2001-2003* ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் *134* முதல் *137* வரையிலான *4* அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். *(குறுக்கீடுகள்)*

*(பாட்டாளி மக்கள் கட்சியினர் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

## 2. தகவல் கோரல் — தொடர்ச்சி

### உறுப்பினரின் முன்னறிவிப்பு—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2002-2003* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கை. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* திரு. ஜி.கே. மணி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். குழப்பம் விளைவிக்க

# 4. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2002–2003, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2002-2003* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*2002-2003* ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தின்முன் நான் வைக்க விழைகிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் ரூ.*3,053.38* கோடி நிதி ஒதுக்குவதற்கு வகை செய்கிறது. இதில், ரூ.*975.61* கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூ.*2,077.77* கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும். வழிவகை முன்பணமாகப் பெற்ற தொகையை இந்திய ரிசர்வ் வங்கிக்கு திருப்பிச் செலுத்துவதற்கான ரூ.*1,888.77* கோடியும் இதில் அடங்கும்.

*2.* இந்த மானியக் கோரிக்கைகளில் இடம் பெறுகின்ற சில முக்கியமான திட்டப் பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

*3.* மீன் பிடிக்க இயலாத பருவகாலத்தில் கடல்சார் மீனவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்காக "மானியக் கோரிக்கை எண் *7:* கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - மீன்வளம்" என்பதன் கீழ் கூடுதலாக ரூ.*9.34* கோடி நிதியொதுக்கம் தேவைப்படுகிறது.

*4.* பால் விற்பனை விலை குறைந்ததன் காரணமாக ஏற்பட்டுள்ள இழப்பினை ஈடுசெய்யும் பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு அரசு ரூ.*28.00* கோடிக்கு அனுமதி வழங்கியுள்ளது. இது கணக்குகளிடையே சரிக்கட்டல் அமைப்பாகும். இத்தொகை "மானியக் கோரிக்கை எண் *8:* கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - பால்வளம்" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

*5.* நெசவாளர்களிடமிருந்து குறைந்த விலை புடவை மற்றும் வேட்டிகள் வாங்கியதற்கான நிதியுதவியாக அரசு ரூ.*47.41* கோடிக்கு

அனுமதி வழங்கியுள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 16: கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை - கைத்தறி மற்றும் துணிநூல்" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

6. தொடக்க சுகாதார நிலையங்களை நிலை உயர்த்த அரசு ரூ.8.13 கோடிக்கு அனுமதி வழங்கியுள்ளது. இத்தொகை, "மானியக் கோரிக்கை எண் 18: மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. காவல் படையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ், காவல் துறைக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு, கூடுதலாக ரூ.6.42 கோடி நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இத்தொகை, "மானியக் கோரிக்கை எண் 21: உள் துறை-காவல்" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

8. ஊரக வீட்டுவசதி திட்டத்திற்காக பெறப்பட்ட கடன் குறித்து "ஹட்கோ" நிறுவனத்திற்கு அசல் மற்றும் வட்டியை கொடுத்துத் தீர்க்க, அரசு ரூ.30.74 கோடிக்கு அனுமதி வழங்கியுள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 25: வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

9. தமிழ்நாடு நகர்ப்பகுதி நிதி-அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக் கழகம் (டுபிட்கோ) மகாநகர் திட்டத்திற்காக அரசு, ரூ.24.19 கோடிக்கு அனுமதி வழங்கியுள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 33: நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

10. சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, கூடுதலாக ரூ.48.18 கோடி நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இத்தொகை, "மானியக் கோரிக்கை எண் 40: ஊரக வளர்ச்சித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

11. ஊரக அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியின் கீழ் நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்கும், ஏனைய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுப்பதற்கும், அரசு ரூ.18.36 கோடிக்கு அனுமதி வழங்கியுள்ளது. முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 7.50 கோடி முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 41: பள்ளிக் கல்வித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

[திரு. சி. பொன்னையன்] [2003 மார்ச் 25

12. தகுதிவாய்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகள், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஆகியோரின் குடும்பத்திற்கு இலவசமாக அரிசி வழங்குவதற்காக அரசு ரூ.33.90 கோடிக்கு அனுமதி வழங்கியுள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 49: இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்த் தணிப்பு" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

13. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு, நகராட்சிப் பகுதிகளுக்கு ரூ.15.16 கோடியும், பேரூராட்சிப் பகுதிகளுக்கு ரூ.21.71 கோடியும், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு ரூ.91.21 கோடியும் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படுகிறது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 49: இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்த் தணிப்பு" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

14. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை, இம்மாமன்றம் ஏற்று, இசைவளிக்க வேண்டுகிறேன்.

முற்பகல் 11-05

## 2002-2003 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை (Demand) (1) | வருவாய் (Revenue) (2) | மூலதனம் (Capital) (3) | கடன் (Loan) (4) |
|---|---|---|---|
| 1. மாநிலச் சட்டமன்றம் | 10,66 | - | - |
| 2. ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 1 | - | - |
| 3. நீதி நிருவாகம் | 8 | - | - |
| 4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 15,96,64 | 2,62,79 | 14,32 |
| 5. வேளாண்மைத் துறை | 53 | 93,80 | 3,24,24 |
| 6. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - கால்நடை பராமரிப்பு | 17 | - | - |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 7. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - மீன் வளம் | 7,95,63 | 1,59,65 | 3,61,10 |
| 8. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - பால்வளம் | 24,80,45 | - | - |
| 9. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 32 | 1,12,57 | - |
| 10. வணிக வரித் துறை - வணிக வரிகள் | 3 | - | - |
| 11. வணிக வரித் துறை - முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு | 6 | - | - |
| 12. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 14 | 6,66,08 | 2,62,16 |
| 13. எரிசக்தித் துறை | - | - | 21,58,90 |
| 14. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 16 | 8 | - |
| 15. நிதித் துறை | 23,93,50 | - | 2,00,00 |
| 16. கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை - கைத்தறி மற்றும் துணி நூல் | 50,26,25 | - | 5,39 |
| 17. கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை - கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | 4 | - | - |
| 18. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 1,54 | 13,99,62 | - |
| 19. உயர் கல்வித் துறை | 23 | 2,02,14 | - |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 20. நெடுஞ்சாலைகள் துறை | 28,36,39 | 12 | - |
| 21. உள் துறை - காவல் | 1,19 | 1 | - |
| 22. உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 7 | - | - |
| 23. உள் துறை-சிறைச்சாலைகள் | 7 | 1,25,63 | - |
| 24. உள் துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்- நிருவாகம் | 3 | - | - |
| 25. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 11,12,16 | 1,77,82 | 1,00,00 |
| 26. தொழில் துறை | 10,49,10 | 19,42,65 | 57,53,42 |
| 27. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - செய்தி மற்றும் விளம்பரம் | 4 | - | - |
| 28. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா | 12 | 20,63 | - |
| 29. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு | 1,57,70 | 36,02 | - |
| 30. தகவல் தொழில்நுட்பவியல் துறை | 2 | - | - |
| 31. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 16 | 1,04 | - |
| 32. சட்டத் துறை | 11,14 | - | - |
| 33. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 7 | 2 | 1 |
| 34. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 5 | - | - |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 35. திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை | 11 | 1,85,67 | - |
| 36. மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை | 14,75 | - | - |
| 37. பொதுத் துறை | 7,62,12 | - | - |
| 38. பொதுப் பணித் துறை | 80 | 69 | - |
| 39. வருவாய்த் துறை | 25 | - | - |
| 40. ஊரக வளர்ச்சித் துறை | 38 | - | 31,25,00 |
| 41. பள்ளிக் கல்வித் துறை | 19 | 7,50,00 | - |
| 42. சிறு தொழில்கள் துறை | 7,24,50 | 12,45 | 4,00,00 |
| 43. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 34 | - | - |
| 44. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 10 | - | - |
| 45. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை | 1 | - | - |
| 46. போக்குவரத்துத் துறை | 4 | - | - |
| 47. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 4 | - | - |
| 48. ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 56,73,51 | - | - |
| 49. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 426,10,97 | - | - |
| **பெருமொத்தம்** | **672,62,89** | **61,49,48** | **127,04,54** |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## 5. வரவு–செலவுத் திட்டம், 2003–2004, பொது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம். திரு. சிவபுண்ணியம், 5 மணித் துளிகளில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களது காவிரி டெல்டா பாசனப் பகுதியில், பம்பு செட்டுகள் மூலமாக ஓரளவு சாகுபடி செய்யப்பட்ட நெல்லைக் கொள்முதல் செய்வதற்குரிய முயற்சிகளில் அரசாங்கம் கொள்முதல் நிலையங்களைத் திறந்திருக்கிறது. ஒரு சில இடங்களிலே பெயரளவுக்கு மட்டுமே நெல் கொள்முதல் நடைபெற்றிருக்கிறது. பெரும்பாலான இடங்களில் நெல் கொள்முதல் என்பது அறவே நடைபெறாமல் நிறுத்தப்பட்டிருப்பது அந்தப் பகுதி விவசாயிகளுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இதை அரசு உடனடியாகக் கவனித்து, விரைவாக நெல் கொள்முதல் செய்வதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டால்தான் அங்கே ஓரளவு உற்பத்தி செய்திருக்கிற விவசாயிகளுக்கு ஆறுதலாக இருக்கும். அதைச் செய்வதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நான் நேற்றையதினம் குறிப்பிட்டுச் சொன்னதுபோல தமிழகத்திலே ஏறத்தாழ ஒரு கோடி தென்னை மரங்கள் வறட்சியின் காரணத்தினாலே பட்டுப்போய்விட்டன.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்காக, 136 கொள்முதல் நிலையங்களை 10-1-2003-லேயே திறக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இன்றையதினம் 1,568 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

மேலும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, அந்த நெல்லுக்கு அதிக விலை தர வேண்டும் என்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய கோரிக்கையை ஏற்று 15-3-2001 அன்று 20 ரூபாய்

2003 மார்ச் 25] [திரு. ப. மோகன்]

கூடுதலாக மத்திய அரசிலேயிருந்து பெறப்பட்டு, இன்றையதினம் 4,907 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் அவைக்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் ஏற்றுக்கொண்டுதான் பேசினேன். கொள்முதல் நிலையங்கள் 136 திறக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் கொள்முதல் நடைமுறையில் இல்லை என்பதுதான் அங்கே உள்ள குறைபாடு. ஆகவே 4 ஆயிரம் மெட்ரிக் டன் அளவுக்குத்தான் கொள்முதல் என்று அமைச்சர் அவர்களே கூறுகிறார்கள். ஆனால், இங்கே ஏராளமான அளவிற்குக் கொள்முதல் செய்ய வேண்டிய நெல் பாக்கி இருக்கிறது. ஆகவே, பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நிலையில் அங்கே சொல்லுகின்ற காரணம் 'பதராக இருக்கிறது'; 'போதுமான அளவு தரமாக இல்லை' என்பது வறட்சி நிலையில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லைத் தரம் பார்ப்பது என்பது இயலாத காரியம். ஆகவே, கடுமையான வறட்சியினாலே ஓரளவு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிற அந்த நெல்லைக் கொள்முதல் செய்வது என்பது நடைபெற்றால்தான் அந்த விவசாயிகளுடைய ஏக்கத்தையும், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பையும் ஓரளவாவது ஈடுகட்ட முடியும். இதை ஒரு பிரச்சினையாக மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. இதை ஒரு குறையாகவும் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, உடனடியாகத் தலையிட்டு அவர்களுக்கு இருக்கிற பாதிப்பை உணர்ந்து உதவிட வேண்டுமென்பதற்காக மட்டுமே நான் இந்தக் கோரிக்கையைச் சொல்கிறேன். அந்தப் பாதிப்பை உணர்ந்து அவசரமாக அரசு கொள்முதல் செய்வதற்கான உத்தரவாதத்தையும், அதற்குரிய நிதியையும், தேவையான உபகரணங்களையும் வழங்க வேண்டும். அதற்கான முயற்சியில் அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கவனம் செலுத்தி உதவ வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

. தென்னை மர பாதிப்பைப் பொறுத்தவரையிலும், குறிப்பாக நமது தமிழ்நாடு அரசு பட்டுப்போன தென்னை மரங்களுக்கு நிவாரணம் 150 ரூபாய் என்று அறிவித்திருக்கிறது. இது வரவேற்கப்படக்கூடிய ஒன்று என்றாலும், தென்னை மரங்களுடைய பாதிப்புக்கு ஏற்ற நிவாரணமாக

[திரு. வை. சிவபுண்ணியம்] [2003 மார்ச் 25

இது அமையவில்லை என்ற கருத்துப் பரவலாகத் தமிழகத்திலே இருக்கிறது. குறிப்பாக ஒரு தென்னைத் தோட்டத்தை விலைக்கு வாங்குகிறவர்கள் பத்திரப் பதிவு செய்தால் ஒரு தென்னை மரத்தினுடைய விலை 750 ரூபாய் என்று குறிப்பிட்டுத்தான் பத்திரப் பதிவு நடைபெறுகிறது. இது நடைமுறையிலே இருக்கிற உண்மை. ஒரு தென்னை மரத்தினுடைய விலை 750 ரூபாய் என்று போட்டுப் பத்திரப் பதிவு செய்கிற நிலையில் இருக்கிறபோது, பட்டுப்போன ஒரு தென்னை மரத்திற்கு வெறும் 150 ரூபாய் என்றால் அந்த நிவாரணம் போதுமானதாக இருக்காது. ஆகவே, நமது தமிழ்நாடு அரசு இந்த நிவாரணத் தொகையை உயர்த்தி, குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாயாவது வழங்கினால்தான்........

* **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தேசிய நிவாரண இடர்ப்பாடு நிதியின் மூலமாக ஒரு தென்னை மரத்திற்கு ரூபாய் 22.50 காசு என்ற அளவில்தான் நிவாரணத் தொகை வழங்கியிருக்கிறது. ஆனால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கின்ற வறட்சியின் காரணமாகப் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு, ஒரு தென்னை மரத்திற்கு 150 ரூபாய் தருவதற்கு ஆணையிட்டு இருக்கின்றார்கள். இது, மற்ற மாநிலங்களைக் காட்டிலும் கூடுதலாகத் தமிழகத்தில் தாய் உள்ளத்தோடு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்த நிவாரணத் தொகை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மத்திய அரசு நம்மை வஞ்சிக்கிறது என்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. அவர்கள் நம்மைப்பற்றி அநேகமாக அக்கறையே கொள்ளவில்லை என்பதைத்தான் அவர்கள் ஒதுக்கி இருக்கிற நிதியின் அளவைப் பார்த்தே நாம் தெரிந்துகொள்ளலாம். அவர்களுக்கெல்லாம்—இப்பொழுது நான் அதன் உள்ளே சென்றால் நேரம் சென்றுவிடும். ஆகவே நான் செல்ல விரும்பவில்லை. ஆகவே பாரதிய ஜனதா கட்சிக்கு விவசாயிகளைப் பற்றியோ, தொழிலாளர்களைப் பற்றியோ, மக்களைப் பற்றியோ அக்கறை இல்லை. அவர்களுக்கெல்லாம் இராமனைப் பற்றி அக்கறை இருக்கிறது. 50 பைசா சூடம், 50 பைசா சாம்பிராணி, ஒரு ரூபாய் செலவிலேயே அவர்கள் ஒரு மாநிலத்திலே ஆட்சிக்கு வந்துவிடுவார்கள். அவர்களுக்கு ரொம்பச் சுலபமான வேலை இது. ஆனால் அதன் உள்ளே நான் செல்ல விரும்பவில்லை. ஆகவே, அவர்கள் வஞ்சிக்கிறார்கள்.

2003 மார்ச் 25] [திரு. வை. சிவபுண்ணியம்]

ஆனால், அந்த வஞ்சனையை ஈடு செய்யவேண்டுமானால் நாம் உதவ வேண்டிய அவசியத்திலே இருக்கிறோம். ஆகவே, தமிழகத்திலே இருக்கிற தென்னை விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்று நான் அன்போடு, பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலே கிட்டத்தட்ட *4* இலட்சம் மாமரங்கள் பட்டுப்போய் விட்டன. மிகப் பெரிய இழப்பு. தர்மபுரி மாவட்டத்திலே இருக்கிற அந்த *5* இலட்சம் குடும்பங்களில், கிட்டத்தட்ட *2* இலட்சம் குடும்பங்கள் அண்டை மாநிலங்களுக்கு பிழைப்புக்காகச் சென்றுவிட்டார்கள்.

இது பத்திரிகையிலே, தொலைக்காட்சியின் மூலமாக வந்திருக்கிற செய்திகள். ஆகவே இப்படி ஒரு இடம் பெயர்ந்தே, குடி பெயர்ந்தே பிழைக்கச் செல்ல வேண்டிய அவல நிலை, வறட்சியினுடைய கொடுமை, தாக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதை உணர்ந்து வறட்சி நிவாரணப் பணிகள் என்பதற்கு மத்திய அரசு கொடுக்கவில்லை என்ற காரணத்தோடு நின்றுவிடாமல், விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு இப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிற ஏழை எளிய மக்களுக்கு, எந்த வகையிலெல்லாம் உதவ முடியுமோ, அதற்கான முயற்சியை நம்முடைய அரசு விரைவாகத் திட்டமிட்டு நிறைவேற்றி, அதற்குரிய முயற்சியை எடுத்து, நிதி ஒதுக்கி நிவாரணப் பணியினைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் *11-15*

குறிப்பாக, கரும்பு உற்பத்தியைப் பொறுத்தவரையிலே ஒரு செய்தியைச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. அவர்களுக்கு ஆலைகள் மூலமாக வழங்கப்படவேண்டிய பணப் பட்டுவாடா நடைபெறவில்லை. நிதி ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அரசு பரிசீலிக்க வேண்டும். ஆனால், கட்டுப்படியான விலை கிடைப்பதிலே பிரச்சினை இருக்கிறது. நாம் தொடர்ந்து விலை நிர்ணயம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், நம்முடைய வேளாண்மைத் துறை மூலமாக ஓர் அறிவிப்பு இருக்கிறது. வேளாண்மைத் துறை சொல்லியிருக்கிற காரணத்தைப் பார்த்தால், ஒரு டன் உற்பத்தி செய்வதற்கு செலவு என்பதே, கிட்டத்தட்ட *750* ரூபாய் ஆகும் என்று வேளாண்மைத் துறை மூலமாக அறிவிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியில் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்து விடுகிறேன். ஆனால் ஒரு டன் கரும்புக்கு 650 ரூபாயிலிருந்து 700 ரூபாய் வரையிலும்தான் விலையே கிடைக்கிறது. ஆகவே, அது போதுமானதாக இல்லை. ஆகவே, விலை குறைந்து வழங்கப்படுகிறது. நெல்லுக்கு விலை மத்திய அரசாலே வழங்கப்படவில்லை; கரும்புக்குக் கட்டுப்படியான விலை இல்லை. உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காத காரணத்தாலே மானியத்தை எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, மானியத்தை நிறுத்துவது என்ற முயற்சியை அதை உலக வங்கியினுடைய முயற்சியாக எடுத்து, மத்திய அரசாங்கம் நிர்பந்தப்படுத்தி மாநில அரசு ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தினால் விவசாயிகள் வாழவே முடியாத இக்கட்டான நிலைக்கு ஆளாவார்கள் என்பதை மட்டும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் மீது கடுமையான வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதைவிட தொலைபேசிக்கே வரி போடுகிறோம். மத்திய அரசின் அதற்குரிய அனுமதி, நமது நீதிமன்றத் தீர்ப்பு என்று வழங்கியிருந்தாலும்கூட, தொலைபேசிக் கட்டணத்திற்கு வரி என்று சொல்வது என்பதெல்லாம் மக்களிடத்திலே மிகப் பெரிய எதிர்ப்பை கிளப்பியிருக்கிறது. மண்ணெண்ணெய்க்கு வரி, டீசலுக்கு வரி, பெட்ரோலுக்கு வரி என்று 14 முறைக்கும் மேலாக விலை உயர்வு செய்யப்பட்டிருக்கிறது மத்திய அரசாங்கத்தின் சார்பில். நாம் அந்த பெட்ரோலுக்கும், மண்ணெண்ணெய்க்கும், டீசலுக்கும் வரியைப் போடுவதன் மூலமாக மேலும் விலை உயர்ந்துவிட்டது. ஆகவே, தாங்க முடியாத வரிச் சுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். வீடுகளுக்குரிய மின்சாரக் கட்டணத்தை, அதற்குரிய வரியை நிர்ணயிப்பது என்பது மேலும் சுமைக்கு ஆளாக்கியிருக்கிறது. ஆகவே இதையெல்லாம் அரசு தவிர்க்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி, (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், போதும்,போதும். நேற்றையிலிருந்து பேசிக் கொண்டிருக்கிறீர்கள். (சிரிப்பு)

2003 மார்ச் 25]

**திரு. வை. சிவபுண்ணியம்:** நிறைய குறுக்கீடுகள் இருந்தன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசி வாக்கியத்தைச் சொல்லி முடியுங்கள்; உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரேயொரு விஷயம். நம்முடைய பட்ஜெட்டிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பதிலே, அநேகமாக, தொகை ஒதுக்கீடு செய்வது என்பதிலே, காவல் துறைக்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. காவல் துறையை நவீனப்படுத்துவதிலே எனக்கு ஆட்சேபகரமான கருத்து இல்லை. ஆனால், காவல் துறையினுடைய பயன்பாட்டை வளர்ப்பதற்கான முயற்சியை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், காவல் துறையின் மூலமாகப் பல்வேறு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி, (குறுக்கீடு) திரு. வை. சிவபுண்ணியம் அதை அந்த மானியக் கோரிக்கையிலே பேசுங்கள். காவல் துறை மானியக் கோரிக்கை என்றே தனியாக வைத்திருக்கிறார்களே, அதிலே பேசுங்கள் (குறுக்கீடு) இல்லை, பேச்சை முடியுங்கள். திரு. புகழேந்தி, பேச ஆரம்பியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, ஒரேயொரு கோரிக்கை. தலைவர் அவர்களே, ஒரு கோரிக்கை; ஒரேயொரு விஷயத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன். தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடத்திலே பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசி வாக்கியத்தோடு முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்கள், அரசு ஊழியர்களுடைய கோரிக்கை குரல் தமிழகத்திலே கேட்கப்படுகிறது; போராடப்படுகிறது. நமது தலைமைச் செயலகத்திலே மிகப் பெரிய போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, மறுபரிசீலனை செய்து, அரசு ஊழியர்களை, பணியாளர்களை, ஆசிரியர்களைப் பாதுகாப்பதற்குரிய முயற்சியையும் அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

***திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்கின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சிகொள்கிறேன். நன்றி கூறிக்கொள்கிறேன். மக்களுக்காகத்தான் அரசாங்கமே தவிர, அரசாங்கத்திற்காக மக்கள் இல்லை என்பதைப் புரிந்துகொண்டு ஆளுபவர்கள் ஆட்சியை நடத்தியாக வேண்டும். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையை நான் படித்துப் பார்க்கின்றபோது, மக்களை மறந்து, மக்களைப்பற்றிக் கவலைப்படாமல் ஒரு நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்ற உணர்வுதான் எனக்கு ஏற்பட்டது.

இதே நிதிநிலை அறிக்கையில் 2 ஆம் பக்கத்தில், 3-வது பத்தியிலே "தமிழ்நாடு அதன் வரலாற்றிலேயே, இதற்கு முன் காணாத மிகவும் கடுமையானதொரு வறட்சியின் பிடியில் சிக்கித் தவிக்கிறது" என்று கூறியிருக்கிறார்கள்; வரலாற்றில் இல்லாத அளவிற்கு ஒரு வறட்சிப் பிடியில் சிக்கித் தவிக்கிறது என்கின்ற அந்த நிலையையும், ஏற்கெனவே 28 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக இந்த அரசு அறிவித்திருக்கிறது என்ற நிலையையும் எண்ணிப்பார்த்து, பொதுவாக இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் மக்கள் மீது எந்தவிதமான கடுமையான வரியையோ, கட்டண உயர்வையோ பிரயோகப்படுத்துவது என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்பது ஒரு நியாயமாகும். இதை எவருமே ஒப்புக்கொள்வார்கள். ஆனால் சுமக்க முடியாத அளவுக்கு வரிகளும், கட்டண உயர்வுகளும் மூட்டைகளாக அவர்கள்மீது ஏற்றப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணமாகச் சொல்லப்படுவது, இந்த அரசின் நிதி நெருக்கடி என்று சொல்லியிருக்கிறார்கள். இதே நிதிநிலை அறிக்கையில் 9-வது பக்கத்தில், 11-வது பத்தியில், 'பதினோராவது நிதி ஆணையத்தின் நிதிப் பகிர்மானத் தீர்வுகளின் குறைபாடுகளினால்தான் பெரும்பாலான மாநிலங்கள் கடுமையான நிதிநிலைமையை எதிர்கொண்டுள்ளன' அதிலேயும் குறிப்பாக பத்தாம் பக்கத்திலும் சொல்லப்பட்டிருப்பது 'நன்கு செயல்படும் மாநிலங்களின் பங்கை எடுத்து, பின்தங்கிய மாநிலங்களுக்கு அப்பங்கை அளிக்க வகை செய்தது அந்த ஆணையம்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே இருந்து மிகத் தெளிவாக தெரிவது, நன்கு செயல்படும் மாநிலங்களின் பங்கை எடுத்து வழங்குவது என்கிறபோது, இதற்கு முன்பு நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, நன்கு நடைபெற்று செம்மையான ஆட்சியை இந்த நாட்டுக்குத் தந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

2003 மார்ச் 25]

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நன்கு செயல்படும்' என்றுதான் இருக்கிறது. 'நன்கு செயல்பட்ட' என்று உங்களைச் சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நன்கு செயல்படும்', 'செயல்பட்ட' என்ற வார்த்தை விளையாட்டுகளில் சாமர்த்தியம் தெரிகிறது. ஆணையத்தினுடைய கூற்றுகள் இங்கே தெளிவாக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கூற்றின்படி, அந்த ஆணையம், இந்தியா முழுமைக்கும் இருக்கின்ற மாநிலங்களில் நன்கு செயல்பட்ட மாநிலங்களில் இருக்கின்ற நிதிநிலைப் பங்கைப் பகிர்மானம் செய்வதிலே ஏற்பட்ட குறைபாடுகளினால்தான் நிதி நெருக்கடி என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள முடியும் என்பதை இங்கே தெளிவாக எடுத்து வைக்க விரும்புகிறேன்.

மக்களின் வாங்கும் சக்தி; அதைப்போல விலையேற்றம். ஏற்கெனவே விலைவாசி உயர்ந்த நிலையிலே இருக்கிறது. வாங்கும் சக்தி ஒரு புறம்; மக்களிடம் இருக்கிறது. ஆனால் இந்த நேரத்திலே இந்தச் சூழ்நிலையிலே பொருளாதாரத்தைப் படித்தவர்களும், அறிந்தவர்களும் இங்கே இருப்பார்கள், உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். நான் குறிப்பிட விரும்புகிறேன்; இங்கே விலைவாசி உயர்ந்திருக்கிற நிலையிலேயே வரிகளும், கட்டண உயர்வுகளும், வந்துள்ளன. இப்போது, குறிப்பாக பெட்ரோல் 30 விழுக்காடு; டீசல் 25 விழுக்காடு; வெள்ளை மண்ணெண்ணெய் 4 சதவீதத்திலிருந்து 25 சதவீத உயர்வு. அதுமட்டுமல்லாது. மோட்டார் வாகனங்களுக்குக் கடுமையான வரி உயர்வுகள்; இதுமட்டுமல்லாது இதிலே பாதிக்கக்கூடியவர்கள் யார்? வாடகைக் கார்களிலே செல்பவர்கள் யார்? இப்போது தொலைபேசிக்கு நாம் வரி உயர்வு செய்திருக்கிறோமே! தொலைபேசியை உபயோகிப்பவர்கள் எல்லாம் வசதி படைத்தவர்கள் அல்ல. Middle class என்று சொல்லப்படுகிற நடுத்தர வகுப்பு மக்கள்; சாதாரண ஏழை எளிய மக்கள்கூட தொலைபேசியை உபயோகிக்கிறபோது, இந்தக் கட்டண உயர்வு அவர்களையும் பாதிக்கிறது. வாகனங்களில் வரக்கூடியவை. சாதாரணமாக மார்க்கெட், சந்தைக்கு வருகின்ற அழுகும் பொருட்கள்; பூவாக இருந்தாலும், பழமாக இருந்தாலும், காய்கறியாக இருந்தாலும், காலை நேரங்களிலே வரக்கூடியவை; அவற்றைத் தயாரிப்பவர்கள், விவசாயிகள்,

[திரு. இ. புகழேந்தி] [2003 மார்ச் 25

கொண்டுவரக்கூடியவர்கள் அத்தனை பேரும் இதிலே பாதிக்கப்படுகிறபோது விலையேற்றம் ஏற்படுகிறது. அதைத் தொடர்ந்து பல்வேறு பொருட்களுக்கும் விலைவாசி உயர்கிறது. ஆகவே விலைவாசி ஏற்றத்திற்கான வழிவகைகள் இதிலே இருக்கின்றன.

இன்னொன்றையும்கூட நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் பத்திரிகைகளில் படித்திருக்கிறேன்; கேட்டிருக்கிறேன்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பச்சை நிறத்தை இராசியான நிறம் என்று பல இடத்திலே சொல்வார்கள். கடலூருக்கு அவர்கள் வருகிறபோதுகூட அங்கிருந்த அதிகாரிகள் மின் கம்பங்களிலே பச்சை வர்ணத்தைப் பூசினார்கள். நான் அதையெல்லாம்கூட இங்கே வேறுவிதமாகப் பேச விரும்பவில்லை. ஆனால் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வரிக்குக்கூட பச்சைப் பெயரைப் போடுகிற விதமாக Green Tax என்று ஒரு பசுமை வரியைப் போட்டிருக்கிறார்கள். வரிக்கு முதன்முதலாகப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த Green Tax என்ன? 7 ஆண்டுகளுக்கு மேல் வைத்திருக்கிற அனைத்து வாகனங்கள்; அனைத்து வாகனங்கள் என்றால் லாரிகள் உட்பட, சரக்கு ஊர்திகள் உட்பட; 500 ரூபாய் கட்டிவிட்டு அவர்கள் போகலாம். வரி உயர்வு; ஆக எல்லா வகையிலும் வரி உயர்வு, ஆகவே புகை வருவதைத் தடுப்பதற்கோ, மாசு ஏற்படுவதைத் தடுப்பதற்கோ இந்த அரசு நடவடிக்கையினை எடுக்குமேயானால் பாராட்டலாம். ஆனால் வரியை நாங்கள் பெற்றுக்கொள்கிறோம் என்று சொல்லிவிட்டு மாசு வருவதைப்பற்றிக் கவலைப்படாத ஒரு சூழ்நிலையைப் பார்க்கின்ற ஒரு நிலை வேதனையைத் தருகிறது. 430 கோடி ரூபாய்க்கு வரிகள்; புதிய வரிகள்.

மேலும் இந்தக் கட்டணங்கள் நேற்றைக்குக்கூடத் தொடர்ந்து இங்கே விவாதங்கள் நடந்தன. ஆகவே முழுவதுமாக அதன் உள்ளே நான் போக விரும்பவில்லை. ஆனாலும்கூட மின்சாரத்தைக் குறித்த பேச்சுகளிலே ஒன்று தெரிந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; 100 ரூபாய் குடிசைகளுக்கு; அதைப்போல 700 ரூபாய் அல்லது 1,250 ரூபாய் தரப்படும் என்று சொன்னார்கள். அதை எத்தனை காலத்திற்கு இந்த அரசாங்கம் தரப்போகிறது; எவ்வளவு நாளைக்குத் தொடர்ந்து தரப்போகிறது என்பதிலேதான் அந்த இலவச மின்சாரம் என்கின்ற அந்த நிலைப்பாடே ஊசல் ஆடுகிறது. எதிர்க்கட்சிகள் இங்கே வாதத்தை வலிமையாக எடுத்து வைக்கின்றபோது, அதற்கான பதிலை நாங்கள் அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கிறோம்.

*முற்பகல் 11-25*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திடமிருந்து பதிலை எதிர்பார்க்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினரே சொல்லிவிட்டதால், இப்போது பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, நான் சற்று நேரம் எடுத்துக் கொள்வதற்காக மாண்புமிகு உறுப்பினர் வருத்தப்படக்கூடாது. தி.மு.க. அரசு ஆட்சியில் இருந்தபோதுதான் மத்திய அரசிடமிருந்து Accelerated Power Development Programme என்ற திட்டத்தின்கீழ் முன்பணமாக நிதியைப் பெற்றுக்கொண்டது. இதற்காக மத்திய அரசாங்கத்தோடு ஓர் ஒப்பந்தம் போடுவதாக முந்தைய தி.மு.க. அரசு ஒப்புக்கொண்டது. இந்த ஒப்பந்தத்தின்கீழ் மின்சாரத் துறையில் பல சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதாக முந்தைய தி.மு.க. அரசு ஒப்புதல் அளித்தது. அதாவது, Tamil Nadu Electricity Regulatory Commission என்ற ஆணையத்தை அமைப்பது; தமிழ்நாடு மின்சார வாரியம் இந்த ஆணையத்திற்கு, முன்பு 2002 ஆம் ஆண்டு, 30ஆம் தேதி, செப்டம்பர் மாதத்திற்குள் மின் கட்டணங்களைத் திருத்தி அமைப்பதற்கான விண்ணப்பம் Tariff Revision Petition-ஐத் தாக்கல் செய்வது; அதன் பிறகு மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற அனைவருக்கும் 2003, டிசம்பர் மாதம் 31 ஆம் தேதிக்குள் மீட்டர்களைப் பொருத்துவது என்ற சரத்துகளுக்கெல்லாம் அன்றைய தி.மு.க. அரசு ஒப்புதல் அளித்துவிட்டது. ஆகவே, இதனையெல்லாம் செய்கிறோம் என்று ஒப்புதல் அளித்து ஏற்றுக் கொண்டது முந்தைய தி.மு.க. அரசு. ஆகவே, இந்த அரசு பதவிக்கு வந்தபோது, ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, இந்த அரசுக்கு வேறு வழியே இல்லாமல் போய்விட்டது.

இந்த Electricity Regulatory Commission Act, 1998 என்ற சட்டத்தின் கீழ் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற செலவு என்ன? ஒவ்வொரு யூனிட்டையும் உற்பத்தி செய்வதற்கு ஆகின்ற செலவு என்ன என்பதை நிர்ணயித்து, அதற்கு ஏற்ப கட்டணங்களை நிர்ணயிக்க வேண்டும். இதுதான் இந்த ஆணையத்தின் கடமை. இந்தச் சட்டத்தின்கீழ், இப்போது தமிழ்நாடு மின்சார வாரியம் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்திற்கு இந்த ஆணையம் யூனிட்டிற்கு 3 ரூபாய் 7 பைசா ஆகிறது என்று நிர்ணயித்து இருக்கிறது. ஆகவே, இதை எல்லோரும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி ஆவதற்கான செலவு 3 ரூபாய் 7 பைசா

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 மார்ச் 25

ஆகவே, இதற்குக் கீழ் என்ன கட்டணம் விதித்தாலும் அதில் மானியம் இருக்கிறது. அரசு அந்த மானியத்தை ஏற்றுக் கொள்கிறது என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

இப்போது விவசாயிகளுக்கு மட்டுமல்ல; Domestic Supply-க்கும் புதிய மின் கட்டணங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் பேசுகின்றபோதுகூட இதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். சிறிய households- அதாவது, சிறிய வீடுகள், நடுத்தர வர்க்கத்தினர் small households எனப்படும் வகுப்பைச் சார்ந்தவர்கள் பாதிக்கப்படாதவாறுதான் புதிய கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. Lowest slab for domestic consumption என்று எடுத்துக்கொண்டால், 50 யூனிட்டுகள் வரை புதிய கட்டணம்; 1 ரூபாய் 10 பைசா per unit, ஏற்கெனவே இருந்த கட்டணம் 85 பைசா. இப்போது அது 1 ரூபாய் 10 பைசாவாக ஆக்கப்பட்டிருக்கிறது. உற்பத்திச் செலவு ஒரு யூனிட்டுக்கு 3 ரூபாய் 7 பைசா. ஆகவே, இதில் ஒவ்வொரு யூனிட்டுக்கும் domestic consumption-ல், Lowest Slab -ல் 1 ரூபாய் 97 பைசா மானியத்தை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அவர்கள் கடைப்பிடிக்கின்ற முறை என்னவென்றால், யார் மின்சாரத்தைப் பயன்படுத்தினாலும், ஏற்கெனவே இருக்கின்ற Lower slab -க்கு என்ன ரேட்டோ, அதுவரை அந்தக் கட்டணத்தை charge செய்துவிட்டு, அதன்பிறகுதான் மேல் slab-க்கு உண்டான கட்டணத்தை அவர்கள் வசூலிக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், 201- யூனிட்டில் இருந்து 600 யூனிட் வரைக்கும் உள்ள slab-ல் bi-monthly consumption-ல் புது கட்டணம் ஒரு யூனிட்டுக்கு 3 ரூபாய் 50 பைசா என்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், effective rate உண்மையாக வசூலிக்கப்படுவது இந்த slab-ல் ஒரு யூனிட்டுக்கு 3 ரூபாய்தான். ஆகவே, இந்த slab-ல் கூட average cost of supply ஒரு யூனிட்டுக்கு 3 ரூபாய் 7 பைசா என்று இருக்கும்போது, இதில்கூட மானியம் இருக்கிறது. ஆகவே, bi-monthly consumption என்று எடுத்துக்கொண்டோமானால், 300 யூனிட்டிலிருந்து 600 யூனிட் வரை கன்ஸ்யூமர்களுக்கு, இந்த மின்கட்டணத் திருத்தத்திற்குப் பிறகுகூட மானியம் இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 11-30

ஒட்டுமொத்தமாக 600 யூனிட்டிற்குகீழ் பயன்படுத்துகின்றவர்கள் ஒரு கோடியே 13 இலட்சம் பேர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இவர்கள், ஒட்டுமொத்தமாக வீடுகளுக்கு மின்சாரம் பயன்படுத்துகின்றவர்களில் 98 சதவிகிதம் பேர் ஆவார்கள். ஆகவே, domestic consumers- middle class house-holds பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று சொல்வது தவறு.

விவசாயிகளைப் பொறுத்தவரை, ஒட்டுமொத்தமாக 15.4 இலட்சம் விவசாயிகள் இலவசமாக இதுவரை பம்புசெட்டுகளுக்கு மின்சாரத்தைப் பெற்று வந்தார்கள். இவர்களில் 9.41 இலட்சம் பேர் சிறு குறு விவசாயிகள் ஆவார்கள். இவர்களைத்தவிர, ஏற்கெனவே இந்த Self- financing scheme-ன்கீழ் 15 இலட்சம் விவசாயிகள் ஒரு ஹார்ஸ் பவருக்கு ஆண்டிற்கு 250 ரூபாய் கட்டணம் ஏற்கெனவே செலுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இப்போதுகூட பெரிய அளவிற்கு இந்த அரசு subsidy ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே தெரிவித்தது போல, 3 H.P. பம்புசெட் உள்ளவர்கள் ஆண்டிற்கு 750 ரூபாய் செலுத்த வேண்டும். ஆனால், அரசு அவர்களுக்கு 1,000 ரூபாய் வழங்கவுள்ளது. 5 H.P. பவர் உள்ள பம்புசெட்டுகள் வைத்திருக்கின்ற விவசாயிகள் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆண்டிற்கு 1,250 ரூபாய் செலுத்த வேண்டும். அதை இந்த அரசு கொடுத்துவிடுகிறது.

ஒரு Comparative Table சொன்னால் எல்லோருக்கும் எளிதில் புரியும் என்று நம்புகிறேன். Domestic consumers, வீடுகளுக்கு மின்சாரம் பயன்படுத்துவோரைப் பொறுத்தவரை, 50 யூனிட் வரை பழைய கட்டணம். யூனிட்டுக்கு 85 பைசா. தற்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற புதிய கட்டணம் யூனிட்டுக்கு 1 ரூபாய் 10 காசு. Effective rate of realisation 1 ரூபாய் 10 காசு. Cost of supply per unit 3 ரூபாய் 7 காசு. ஆகவே, இதில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படுகின்ற நஷ்டம், அரசு ஏற்றுக்கொள்கின்ற மானியம் ஒரு ரூபாய் 97 காசு per unit. ஆகவே, இந்த lowest slab-ல்கூட ஒவ்வொரு யூனிட்டுக்கும் அரசாங்கம், மின்சார வாரியம் 1 ரூபாய் 97 பைசா மானியத்தை ஏற்றுக்கொண்டுதான், நஷ்டத்தை ஏற்றுக்கொண்டுதான் இந்த மின்சாரத்தை வழங்குகிறது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 மார்ச் 25

அதைப்போலவே, bi-monthly consumption 51 யூனிட்டிலிருந்து 100 யூனிட் வரை பயன்படுத்துகின்றவர்களுக்கு பழைய கட்டணம் ஒரு ரூபாய். இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற புதிய கட்டணம் 1 ரூபாய் 30 காசு. Effective rate of realisation 1 ரூபாய் 20 காசுதான். ஏன் என்றால், பழைய slab வரை அந்தக் குறைந்த ரேட்டைதான், குறைந்த கட்டணத்தைத்தான் வசூலிக்கிறார்கள். இதிலேயும் cost of supply per unit 3 ரூபாய் 7 காசு. ஆகவே, இதில் அரசாங்கத்திற்கும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் ஏற்படுகின்ற நஷ்டம் ஒரு யூனிட்டுக்கு 1 ரூபாய் 87 பைசா ஆகும்.

101 யூனிட்டிலிருந்து 200 யூனிட் வரை பயன்படுத்துகின்றவர்களுக்கு பழைய கட்டணம் 2 ரூபாய். இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற கட்டணம் 2 ரூபாய் 60 காசு. ஆனால், Effective rate of realisation 1 ரூபாய் 95 காசுதான் யூனிட்டுக்கு. ஏன் என்றால், அதிலே கீழே இருக்கின்ற slab வரைக்கும் அந்தக் குறைந்த கட்டணத்தைத்தான் வசூலிக்கிறார்கள். அதற்குமேல்தான் இந்தப் புதிய கட்டணம் வரும். இங்கேயும் cost of supply யூனிட்டுக்கு 3 ரூபாய் 7 காசு. ஆகவே, இதில் அரசாங்கத்திற்கும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் ஏற்படுகின்ற நஷ்டம் யூனிட்டுக்கு 1 ரூபாய் 12 காசு.

201 யூனிட்டிலிருந்து 600 யூனிட் வரை பயன்படுத்துகின்றவர்களுக்கு பழைய கட்டணம் யூனிட்டுக்கு 3.00 ரூபாய். நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற புதிய கட்டணம் 3 ரூபாய் 50 காசு. ஆனால், Effective rate of realisation உண்மையாகச் செலுத்துகின்ற கட்டணம் யூனிட்டுக்கு 3.00 ரூபாய்தான். உற்பத்திச் செலவு ஒரு யூனிட்டுக்கு 3 ரூபாய் 7 காசு. ஆகவே, இதில் அரசாங்கத்திற்கும், மின்சார வாரியத்திற்கும் ஏற்படுகின்ற நஷ்டம் 7 காசு. ஆகவே, இதில் எல்லாம் அரசு ஏற்றுக்கொள்கின்ற மானியம் இருக்கிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் இந்தப் புதிய கட்டணங்களை நிர்ணயித்த பிறகுகூட நஷ்டத்தில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குடிசைகளுக்கு மின்சாரம் வழங்குவதைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே கட்டணம் கிடையாது. இப்போது நிர்ணயித்திருக்கிற கட்டணம் யூனிட்டுக்கு 50 பைசா. உற்பத்திச் செலவோ யூனிட்டுக்கு 3 ரூபாய் 7 காசு. ஆகவே, இதிலேயும் அரசாங்கமும், மின்சார வாரியமும் யூனிட்டுக்கு 2 ரூபாய் 57 காசு நஷ்டத்தை ஏற்றுக்கொண்டுதான் இப்போதும் குடிசைகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆனாலும், இந்தக்

2003 மார்ச் 25] [செல்வி ஜெ ஜெயலலிதா]

குடிசைவாசிகளுக்கு அரசாங்கம் தலா 100 ரூபாய் வழங்குகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கட்டணத்தின்படி, அவர்கள் செலுத்த வேண்டிய கட்டணம் ஆண்டுக்கு 90 ரூபாய்தான். ஆனால், அரசு, அவர்களுக்கு 100 ரூபாய் வழங்குகிறது.

முற்பகல் 11-35

விவசாயத்தைப் பொறுத்தவரை, பழைய tariff-படி, எல்லாமே இலவசமாக இருந்தது. புதிய கட்டணப்படி, ஒரு குதிரை சக்திக்கு ஒரு Horse Power — 250 ரூபாய் கட்டணம். ஓராண்டிற்கு ஆகின்ற செலவு, ஆணையம் நிர்ணயித்து இருக்கின்ற கட்டணப்படி, 3,269 ரூபாய்; ஒரு Horse Power-க்கு, ஓராண்டிற்கு ஆகின்ற செலவு, 3,269 ரூபாய். இது cost of Supply. ஆனால், இதில் குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுவதால், அரசாங்கத்திற்கும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் ஏற்படுகின்ற நஷ்டம், அரசு ஏற்றுக்கொள்கிற மானியம், ஒரு குதிரை சக்தித் திறனுக்கு ஆண்டிற்கு 3,019 ரூபாய். இதை அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே, நாம் யூனிட் கணக்குப்படி எடுத்துக்கொண்டோமானால், புதிய கட்டணம் ஒரு யூனிட்டுக்கு 20 பைசா. உற்பத்திச் செலவு ஒரு யூனிட்டுக்கு 3 ரூபாய் 7 பைசா. ஆகவே, அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற மானியம், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற நஷ்டம், யூனிட்டுக்கு 2 ரூபாய் 87 காசு ஆகும். ஆகவே, இதை அனைவரும் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய மின்சாரக் கட்டணங்களை நிர்ணயித்த பிறகுகூட, தமிழ்நாடு மின்சார வாரியம், விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்காக ஆண்டுதோறும், அதாவது 2003-2004 ஆம் நிதியாண்டிற்கு மட்டும் 2,626 கோடி ரூபாய் மானியத்தை ஏற்றுக்கொண்டுதான், மின்சாரம் வழங்கப்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் சொல்கிறேன். புதிய மின்சாரக் கட்டணங்களை நிர்ணயித்த பிறகு விவசாயிகளுக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தை வழங்குவதற்காக 2003-2004 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு மின்சார வாரியம், 2,626 கோடி ரூபாய் மானியத்தை ஏற்றுக்கொண்டு, பெருத்த நஷ்டத்தை ஏற்றுக்கொண்டுதான் வழங்குகிறோம். ஆகவே, சிறு குறு விவசாயிகளையும், நடுத்தர

TRUTH ALONE TRIUMPHS

வர்க்கத்தினரையும் ஏழையெளிய மக்களையும் இந்த அரசு பாதுகாத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, பேசட்டும். *(குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு Point of Order.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே Point of Order. ஒன்றும் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் Point of Order கேட்கவில்லை. Speaker Sir . . . *(குறுக்கீடு)*

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of Order இல்லை.

**THIRU C. GNANASEKARAN:** Hon'ble Speaker Sir, consider my plea, and then, if it is not correct, you can decide about it.

**திரு. இ. புகழேந்தி:** மைக்கே போடவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். நீங்கள் பேசுங்கள். திரு. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீண்ட நெடிய விளக்கத்தை இங்கே தந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, முதலமைச்சர் அவர்கள் சொன்னது, உங்களுக்கான பதில் என்று நீங்கள் நினைத்துக் கொள்ள வேண்டியதில்லை. எல்லோருக்கும் சொன்னார்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட விரும்புவது, இந்த விளக்கங்கள் ஏற்கெனவே,

முதலமைச்சரால், நிதியமைச்சரால் தரப்பட்டவை. நான் கேட்ட கேள்வியே, கொடுக்கப்படுகின்ற இந்த 100 ரூபாயை, இந்த விவசாயிகளுக்காகத் தரப்படுகின்ற பணத்தை எவ்வளவு நாட்களுக்கு நீங்கள் தொடர்ந்து தரப்போகிறீர்கள்?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளக்கங்களை இன்றுதான் இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். ஏற்கெனவே தெரிவித்த விளக்கங்கள் அல்ல. ஒரு யூனிட்டுக்கு என்ன செலவாகிறது உற்பத்திச் செய்வதற்கு; ஒவ்வொரு யூனிட்டிலும் எந்த அளவுக்கு மானியம் இருக்கிறது; நஷ்டம் ஏற்படுகிறது; இந்த விவரத்தையெல்லாம் இப்போதுதானே சொன்னேன்? (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பேசட்டும். குறுக்கே குறுக்கே பேச வேண்டாம்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு நாட்களுக்கு, விவசாயிகளுக்கும், குடிசையில் வாழ்கின்ற மக்களுக்கும் இதைத் தரப்போகிறீர்கள் என்பது என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைவாசிகளையும், சிறு குறு விவசாயிகளையும், இந்த அரசு தொடர்ந்து பாதுகாக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, உங்களுக்கு இந்தச் சந்தேகமே வேண்டாம். உங்களுக்கும் சரி, மற்ற எதிர்க் கட்சியினருக்கும் சரி, யாருக்கும் இந்தச் சந்தேகம் இருக்க வேண்டாம். இந்த அரசு இருக்கின்றவரை, சிறு குறு விவசாயிகளும், குடிசைவாசிகளும், ஏழையெளிய மக்களும் பாதுகாக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு அவர்களுக்கு இந்தக் கட்டணங்களைத் தொடர்ந்து செலுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்போல, இதே சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அப்படி நேராது; நாங்கள் 3 ரூபாய் 50 காசு என்று இருந்த அரிசி விலையை உயர்த்தமாட்டோம்' என்று சொல்லியதும் சரி;

அதேபோல், முதலமைச்சர் அவர்கள் சொல்லி, திரும்பவும் இங்கேயே மாற்றப்பட்டு இருப்பதையும் நாம் அறிவோம். ஆக, இதை.... (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு நான் சொல்லக்கூடிய ஒரே பதில், பொறுத்திருந்து பாருங்கள். நாங்கள் இங்கேதான் இருக்கப் போகிறோம்; நீங்கள், அங்கேதான் இருக்கப் போகிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாவற்றையும் பார்க்கத்தான் போகிறீர்கள்.

*முற்பகல் 11-40*

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் எங்கே இருக்கப் போகிறார்கள் எதிர்காலத்தில் என்பதை தமிழக மக்கள் தெளிவாக முடிவு செய்வார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் தெளிவான முடிவை ஏற்கெனவே தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நாடு அறியும்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து தரப்படும் என்ற உத்தரவாதத்தைத் தந்திருக்கிறார்கள். அது பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

அடுத்ததாக நான் குறிப்பிட விரும்புவது, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள்; அவர்கள் மூலம் இன்றைக்கு நடைபெறுகின்ற போராட்டத்திற்கான அறிகுறிகள்; அதற்கான காரணங்கள் பற்றி இந்த அரசாங்கத்திற்கு நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். அரசு ஊழியர்கள் ஓய்வுபெறுகின்ற நேரத்திலே, ஆசிரியர்கள் ஓய்வு பெறுகின்ற நேரத்திலே, அவர்கள் பெறுகின்ற அந்தப் பயன்கள் பல பறிக்கப்பட்டு இருக்கின்றன. 3 ஆண்டுகளுக்கு சிறு சேமிப்புப்பத்திரமாக வழங்கப்படும் என்றால், அரசு ஊழியர்களாக இருப்பவர்கள், மகளின் திருமணத்திற்கோ அல்லது வீடு கட்டுவதற்கோ, ஏதோ பல வகையில் அவர்கள் போட்டிருந்த, அவர்கள் நினைத்திருந்த அந்தச் செயல்கள் எல்லாம் இன்றைக்கு தடுக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை; அதுமட்டுமல்ல, ஏப்ரல் 1 முதல் 3 சதவீதம் கூடுதல் அகவிலைப்படி அரசு அறிவித்தது என்றால், நம்முடைய நிதித் துறை செயலாளர் நாராயணன் அவர்கள் 1-7-2002

2003 மார்ச் 25] [திரு. இ. புகழேந்தி]

முதல் 9 மாதத்திற்கு வழங்கப்பட வேண்டிய 3 சதவீத கூடுதல் அகவிலைப்படி நிலுவை கிடைக்காது என்பதை அரசு சூசகமாக அறிவித்து இருக்கிறது என்பதற்கு ஏற்ப, நிதி நெருக்கடி தொடருவதால் நிலுவையை அறிவித்துவிட்டு, கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் என்று ஒரு பேட்டியிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

போனஸ், சரண்டர் விடுப்பு சலுகை, இரண்டு தவணை அகவிலைப்படி உயர்வில் தலா 9 மாத நிலுவையை வழங்காதது உட்பட எல்லா வகையிலேயும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையிலே ஒரு பக்கம்; ஆக, வாங்குகிற சக்தி என்பது இங்கே பாதிக்கப்படுகின்ற சூழ்நிலையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆக, வாங்கும் சக்தி குறைகிறது; விலைவாசி உயருகிறது. இதன் காரணமாக வளர்ச்சி வராது; வறுமைதான் ஏற்படும். இல்லாமை ஒருபுறமும், இயலாமை ஒருபுறமும் ஏற்படும். இப்படி இல்லாமையும், இயலாமையும் ஏற்படுகின்றபோது, இதனால் பாதிக்கப்படுகின்ற மக்கள், வசதி படைத்தவர்கள் அல்ல; பணக்காரர்கள் அல்ல; சாமானிய மக்கள்; Middle Class Families என்று சொல்லப்படுகின்ற நடுத்தர வர்க்கம்; ஏழை எளிய மக்கள். இவர்கள் பாதிக்கப்படுகின்ற அந்தச் சூழ்நிலை வருகின்றபோது, நான் இங்கே தெளிவாக ஒன்றைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே 90, 95 சதவீதத்தினர் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மக்கள்; உழைக்கின்ற மக்கள்; ஆக, அவர்களுக்கெல்லாம் ஒரு பாதிப்பை உருவாக்குகின்ற இந்த பட்ஜெட்டை, என்னுடைய அன்புத் தலைவர், உயிருக்கும் நிகரான தலைவர், கலைஞர் சொன்னார்; ஈராக்கிலே விழுகின்ற வெடிகுண்டை விட இந்த அரசாங்கம் தந்திருக்கிற நிதிநிலை அறிக்கை என்ற வெடிகுண்டு மிகப் பெரிய ஆபத்தை விளைவிக்கும் என்று சொன்னார்; அது சரிதானே?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ தி.மு.க. அரசு ஆட்சியில் இருந்தபோது, மக்களுக்குப் பல சலுகைகள் வழங்கியது போலவும், மக்கள் மீது வரிகளே போடவில்லை என்பது போலவும், ஏதோ இந்த அனைத்திந்திய அண்ணா தி.மு. கழக அரசு வந்த பிறகுதான் மக்கள் மீது தாங்கமுடியாத

சுமையை ஏற்றி இருக்கிறோம். அதிகமான வரிகளை போட்டிருக்கிறோம் என்பது போல மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசி இருக்கிறார். ஒரு சிறிய புள்ளிவிவரத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது 1989-90, இந்த நிதியாண்டில் அவர்கள் செய்த Additional Resources Mobilisation, அதாவது கூடுதலாக வரிகள் போட்டு திரட்டிய நிதி 260.30 கோடி ரூபாயாகும். அந்த ஆண்டு Total Revenue Receipts— ஒட்டுமொத்தமான வருவாய்— 384574 கோடி. ஆகவே, பெர்சன்டேஜை பார்த்தோமானால், Total Revenue Receipts-ல் அன்றைய தி.மு.க. அரசு போட்ட புதிய வரிகள் 6.77 சதவீதமாகும். அதைப்போலவே 1990-91; அந்த நிதியாண்டில் தி.மு.க. அரசு இருந்தபோது, அவர்கள் செய்த Additional Resources Mobilisation; போட்ட புதிய வரிகள் 242 கோடி ரூபாயாகும். அந்த ஆண்டு Total Revenue Receipts 4397.46 கோடி ரூபாயாகும். ஆகவே, அந்த ஆண்டு ஒட்டுமொத்த Total Revenue Receipts-ல் கூடுதலான வரிகளின் சதவீதம் 5.50 சதவீதமாகும். ஏற்கெனவே நான் சொன்னது 1989-90 நிதியாண்டில் 6.77 சதவீதம், 1990-91-ல் 5.50 சதவீதம். ஆனால் இந்த ஆண்டை எடுத்துக்கொண்டோமானால், 2003-2004, இந்த நிதி ஆண்டிற்காக, இதுவரை இந்த அரசு இப்போது போட்டிருக்கிற கூடுதல் வரிகள் Additional Resources Mobilisation எந்த அளவுக்கு என்றால், 430 கோடி ரூபாய் அளவுக்கு. Total Revenue Receipts 22,665.90 கோடி ரூபாயாகும். இதில் சதவீதக் கணக்கைப் பார்த்தோமானால், நாங்கள் போட்டிருக்கிற புதிய வரிகள் Total Revenue Receipts-ல் 1.90 சதவீதம் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, யார் மக்கள்மீது அதிகமான சுமைகளை ஏற்றியிருக்கிறார்கள் என்பதை இதிலிருந்தே புரிந்துகொள்ளலாம்.

முற்பகல் 11-45

*பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புள்ளிவிவரங்களை எல்லாம் வரவேற்கிறேன். எல்லாம் உண்மை என்றும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், இப்போது 28 மாவட்டங்களில் வறட்சிக் கொடுமையில் பெரும்பான்மையான மக்கள் முழு உணவு இல்லாமல் திண்டாடுகிற ஓர் அவல நிலை நாட்டிலே இருக்கிறது. கடந்த 6 மாதங்களாக இந்தக் கொடுமையான சூழ்நிலை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2003 மார்ச் 25] [பேராசிரியர் க. அன்பழகன்]

இருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் இந்த வரி ஏற்றம் தேவையா என்பதை அரசு எண்ணிப்பார்க்க வேண்டும்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே புள்ளிவிவரக் கணக்குகளைச் சொன்னார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், போதை தருகிற பொருட்களுக்கு வரிகள் போடப்பட்டிருக்கின்றன. அதேபோல வரிகள் நீக்கப்படுகிறபோது, சமையல் எண்ணெய்க்கு, சாதாரண மக்கள் பயன்படுத்துகிற சமையல் எண்ணெய்க்கு எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக அரசிலேதான் வரிவிலக்கு அளிக்கப்பட்டது. இப்போது 4 சதவிகிதம் அதற்கு வரி போடப்பட்டிருக்கிறது. இப்படி விலைவாசியைக் கட்டுப்படுத்துகிற விதமாக, திறமையாக அப்போது மக்கள் பாதிக்கப்படாமல் போடப்பட்ட அந்த வரிகளை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு சுற்றுலாத் துறையில்....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் போட்ட வரிகள் மக்களைப் பாதிக்கவில்லை என்று எப்படி மாண்புமிகு உறுப்பினர் சொல்ல முடியும்? அது உண்மை அல்ல. இன்றைக்கு, எங்களுக்கு ஏற்பட்டிருக்கிற ஒரு நிதி நெருக்கடியைப் போலத்தான் *1989-90* ஆம் ஆண்டில் தி.மு.க. அரசுக்கும் ஏற்பட்டது. அன்றையதினம் *1989-90* ஆம் நிதியாண்டில் தி.மு.க. அரசுக்கு ஒரு நிதி நெருக்கடி ஏற்பட்டபோது அவர்கள், Total Revenue Receipts-ல் *6.77* சதவிகிதம் அளவுக்கு, புதிய வரிகளைப் போட்டார்கள். அதைவிட மிகக் கடுமையான நிதி நெருக்கடி எங்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிற நேரத்தில்கூட ஒட்டுமொத்த Revenue Receipt-ல் *1.90* சதவிகிதம் அளவுக்குத்தான் வரிகளைப் போட்டிருக்கிறோம். எப்படிப் பார்த்தாலும் தி.மு.க. அரசு மக்கள் மீது போட்ட அந்தச் சுமைக்கு நிகராக இந்த வரிகளை ஒப்பிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்காக, யார்மீது, எப்படி வரி போட்டார்கள் என்பதைத்தான் இப்போது நான் சொல்லிக்கொண்டு இருந்தேனேதவிர, கணக்குகளை மட்டும் நான் இங்கே சொல்லிக்கொண்டு இருக்கவில்லை. அதுமட்டுமல்ல, இதன் மூலமாக இந்த நிதிநிலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** 5 மணித்துளிகளில் முடித்துவிடுகிறேன். நான் பெரும்பாலும் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. 15 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள்.

**திரு. இ. புகழேந்தி:** முடித்து விடுகிறேன். இறுதிக் கட்டத்திற்கு வந்திருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை... (குறுக்கீடு) இறுதிக் கட்டத்தில் என்றால் உடனே இதில் சிரிப்பதற்கு ஒன்றும் இல்லை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, தாங்கள் பேசிய கடைசி வாக்கியம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டாம் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்படிப் பேசுவதால், அவர்களுடைய இயலாமையை, ஆற்றாமையை, பலவீனத்தைத்தான் மக்களுக்கு அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, பேசி முடியுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயலாமையோ, ஆற்றாமையோ எங்களுக்கு எப்போதும் ஏற்படுவதே இல்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்லவே கூடாதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் மிகவும் குழம்பிய நிலையில் இருக்கிறார் என்று நான் கருதுகிறேன். ** என்று நீங்கள்தான் சொன்னீர்கள். நாங்கள் யாருமே சொல்லவில்லை.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பேச்சு வழக்கில் சொல்லப்படுவதை வைத்துக்கொண்டு, அதையே பேசி மகிழ்ச்சி அடைவதைப் பற்றி எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2003 மார்ச் 25]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் சில விவரங்களை இங்கே தெரிவித்தார். ஆணித்தரமாகப் புள்ளிவிவரங்களோடு அவர் சொன்னதை நான் மறுத்தேன். அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் அவர் எங்களுக்குச் சாபம் இடுகிறார். அது அவர்களுடைய இயலாமையைத்தான், ஆற்றாமையைத்தான் காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்பச் சொன்னாலும் நாங்கள் தெளிவாக இருக்கிறோம்; தெளிவாகச் சொல்கிறோம்; எங்களுக்கு இயலாமையோ, ஆற்றாமையோ என்றைக்கும் ஏற்பட்டதும் இல்லை; ஏற்படப் போவதும் இல்லை. நான் இறுதிக் கட்டத்தைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகழேந்தி, நிறைவுக் கட்டத்திற்கு வாருங்கள்.

முற்பகல் 11-50

**திரு. இ. புகழேந்தி:** நிறைவுக் கட்டத்திற்கு; ஏனென்றால் தப்பே கிடையாதே; பலமுறை சொல்லப்பட்டதுதானே; இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே விளக்கங்களைச் சொன்னார்கள். 1989-90-லே இருந்த நிதி நெருக்கடியைச் சொன்னார்கள். அப்போது ஏற்பட்ட நெருக்கடியை எப்படி திராவிட முன்னேற்றக் கழக அரசு சமாளித்தது என்பதையும், நான் சொல்வதற்குப் பதிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, அது வரவேற்கப்படக்கூடிய ஒன்றுதான். இன்னொன்றையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசிக் கட்டத்தை முடியுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** சுற்றுப் பயணம்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணம் செய்கின்ற அந்த நிலையை நாட்டிலே எல்லோருமே பார்த்தோம். மக்கள் எல்லோரும் பார்த்திருக்கிறார்கள். அந்தச் சுற்றுப்பயணத்திற்கு ஆகின்ற, ஆகிய அந்தச் செலவு விவரத்தை இந்த அவையிலேகூட வைக்கலாம். ஏனென்றால் பத்திரிகைகளும், மற்றவர்களும் எழுதியதில் இருந்து தெரிய வருவது; அந்தப் பணம் இருந்தால்கூட என்னுடைய கடலூர் தொகுதியில் 2 பாலங்களைக்

கட்டி இருக்க முடியும் என்கின்ற அளவுக்கு அதற்கான செலவுகள் அதிகமாக இருக்கின்றன. ஆக, சிக்கனமாக இருக்கவேண்டும் என்று அரசு ஊழியர்களுக்கு நிதிநிலை அறிக்கையிலே கூறிவிட்டு, மாண்புமிகு முதலமைச்சர், வழிகாட்டுதலாக இருக்க வேண்டிய முதலமைச்சரே தவறுகின்ற ஒரு நிலையை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசாமி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) புகழேந்தி, நீங்கள் பேச ஆரம்பித்து 18 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்து இருக்கின்ற கட்சியினுடைய தலைவர் முதலமைச்சராக இருக்கின்றபோதுகூட விழாக்கள் நடைபெற்று இருக்கின்றன. அந்தக் கோப்பும், இன்றைய அளவில் அதிகமான செலவு என்ற கோப்புகளோடு நின்றுகொண்டு இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. இ. புகழேந்தி:** தலைவர் அவர்களே, ஒன்றை மட்டும் இறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய அன்புத் தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், தமிழுக்கு, தமிழருக்கு உரிய சிறப்பை, நமக்கு நாமே மறைப்பதும், மறைப்பவருக்குத் துணை நிற்பதும் தீதிலும் தீது, பெரும் தீது எனச் சிற பாயிரம் பாடிய பெரும் புலவர் பனம்பாரனார் கூற்றாக தொல்காப்பியப் பூங்காவிலே சொல்லி இருக்கிறார்கள். அதையும் நான் இங்கே சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கை புகட்டுக் காட்டும் மத்தாப்பு; அர்த்த சாஸ்திரத்தில் உள்ளபடி 'வறுமையைக்கொடு வாயைத் திறக்கமாட்டார்கள்' என்ற ஆலோசனையின்படி தயாரிக்கப்பட்ட, திட்டமிட்ட சமூகநீதி எதிர்ப்பு ஆவணம் என்று சொல்லி, உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பனம்பாரனார் பாடியது சிற பாயிரம் அல்ல. சிறப்புப் பாயிரம். திரு. சிவசாமி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தலைவர் இங்கே வராமல், மாண்புமிகு உறுப்பினர் அவர் சார்பில் இங்கே பேசுகிறாரே; அவருடைய தலைவர் இங்கே வராததே அவர்களுடைய ஆற்றாமையையும் இயலாமையையும் இங்கே காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

2003 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசாமி. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கலைஞர் இங்கே வராதது, அவரது இயலாமையை, ஆற்றாமையைக் காட்டுகிறது என்று சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சரும், முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரும் இந்த அவைக்கு வராதது ஆற்றாமையை, இயலாமையைக் காட்டுகிறது என்றால், அதுதான் இதுவும், (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைய தி.மு.க. அரசால் இந்த அவையில் அவமானப்படுத்தப்பட்டார்; தாக்கப்பட்டார்; அவர்மீது செருப்புகள்கூட வீசப்பட்டன. எல்லோருக்கும் தெரிந்த உண்மைகள்தான் இவை. இவையெல்லாம் வரலாற்றிலேயே இடம் பெற்றுவிட்ட சம்பவங்கள். அதனால்தான் புரட்சித் தலைவர் இங்கே தனக்கே பாதுகாப்பு இல்லை என்று இந்த அவைக்கு வரவில்லை.

அதைப்போலவே இந்த அவையில் என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். 1989 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதி, இதே பேரவையில், இதே மாண்புமிகு உறுப்பினரால் நான் எப்படித் தாக்கப்பட்டேன், எப்படி அவமானப்படுத்தப்பட்டேன் என்று எல்லோருக்கும் தெரியும். ஆகவே, அந்தக் காரணத்திற்காகத்தான் எனக்கு இங்கே பாதுகாப்பு இல்லை; உரிய மரியாதையோடு நான் நடத்தப்படவில்லை; கண்ணியமாக அன்றைய தி.மு.க. அரசு நடந்துகொள்ளவில்லை என்றுதான் நான் இந்த அவைக்கு வரவில்லை. ஆனால், அவர்களுடைய தலைவருக்கு அப்படிப்பட்ட எந்த ஒரு நிலைமையும் இங்கே ஏற்படவில்லையே? ஒன்றுமே நடக்கவில்லையே. அவர்களாகப் பயந்து ஏன் ஒதுங்குகிறார்கள்? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தவறான செய்தியை.......... (குறுக்கீடு) நான் அதை மறுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** அன்றைக்கு இருந்த, அவர்களது கட்சியில் இருந்த திருநாவுக்கரசர் அவர்களே, இந்த இடத்திலே அதை மறுத்து இருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னதற்குப் பதில் சொல்கிறார்கள். எம்.ஜி.ஆரும், அவர்களும் வரவில்லை...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம் பேசவேண்டாம் என்று நினைத்தேன். மாண்புமிகு உறுப்பினர் பேச வைக்கிறார். இதே இடத்தில் நான் எதிர்க் கட்சி வரிசையில் இருந்தேன். இந்தப் பக்கம், அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் இருந்தார். என் சேலையைப் பிடித்து இழுத்தார். என் சேலை கிழிந்து விட்டது. இதைவிட வேறு என்ன நடக்க வேண்டும்? *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசாமி பேசட்டும். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* பேராசிரியர் பேசட்டும். *(குறுக்கீடுகள்)* பேராசிரியர் சொல்லட்டும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இருந்திருக்கின்ற இடம் அங்கே வேண்டுமானால் இருந்திருக்கலாம். ஆனால் அன்றைக்கு அமைச்சராக இருந்த வீரபாண்டி ஆறுமுகம் இந்த மேஜைமீது தாவிக் குதித்து, அந்தப் பக்கம் வந்தார். அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகனும் தான் இருக்கிற இடத்தைவிட்டு பாய்ந்து ஓடிவந்து நான் சொன்ன அந்த அவமானகரமான காரியத்தைச் செய்தார்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே,......*(குறுக்கீடுகள்)* அந்தப் பகுதியிலே இருந்தவர் நேராக இந்தப் பகுதிக்கு வந்து கலைஞரை, அவருடைய கண்ணாடியை உடைத்து, பிடித்து, குத்துங்கடா, கிரிமினல் என்று...*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இந்த விவாதம் தேவையில்லை என்று கருதுகிறேன். பேராசிரியர், விவாதத்திற்குக் கொஞ்சம் முற்றுப்புள்ளி வையுங்கள். *(குறுக்கீடு)* துரைமுருகன், என்ன சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே,..... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மைக் கொடுங்கள். *(குறுக்கீடுகள்)* துரைமுருகன், சொல்லுங்கள்.

2003 மார்ச் 25]

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பட்ஜெட் படிக்கிறபோது, இதே முதலமைச்சர் இங்கு உட்கார்ந்து, 'பிடுங்குங்கடா,' குத்துங்கடா, கிரிமினல்' என்று அன்றைக்குச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன்

**திரு. துரைமுருகன்:** நான் அந்த ஓரமாக வந்து (குறுக்கீடுகள்) மைக்கை எடுத்துவிட்டால் என்ன பண்ணுவது? நான் ரெக்கார்டு பண்ணவேண்டாமா? No, No. வீரபாண்டி ஆறுமுகத்தை அன்றைக்கு அடித்தபோது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் சொன்னவை எல்லாம் உண்மைக்கு மாறானவை. அப்படிப்பட்ட எந்தச் சொல்லும் என் வாயிலிருந்து வந்ததே கிடையாது. இப்படிப்பட்ட எந்தப் பேச்சையும் நான் பேசவில்லை. அன்றைய முதலமைச்சரின் கண்ணாடிகள் உடைக்கப்படவும் இல்லை. வேண்டுமென்றே, திட்டமிட்டு, தவறான, உண்மைக்குப் புறம்பான செய்திகளை அன்றைக்கும் சொன்னார்கள்; இப்பொழுதும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பேராசிரியர் அவர்கள் இந்த விவாதத்திற்கு இத்தோடு முற்றுப்புள்ளி வைப்பதற்கு கொஞ்சம் ஏற்பாடு செய்யுங்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துரைமுருகன் மீது சொல்லப்படுகிற குற்றச்சாட்டு உண்மையல்ல. அம்மையார் அவர்களும் அந்த நிலைமைக்கு அன்றைக்கு ஆளாகவில்லை. நான் வீற்றிருந்த இடம் எதிர்ப்பக்க இடம். இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பன்னீர்செல்வம் அவர்கள் உட்கார்ந்திருக்கிற அந்த இடம், மூன்றாவது அல்லது இரண்டாவது இடத்திலே நான் இருந்திருக்கிறேன். நான் கண்ட அளவில் அன்றைக்கு அப்படி நடைபெறவில்லை. ஓர் ஆவேசமான சூழ்நிலை உருவாக்கப்பட்டு விட்டது. அப்படி உருவாக்கப்பட்டதற்குக் காரணம், முதலமைச்சர் பட்ஜெட்டைப் படிக்கத் தொடங்கியவுடன் ஒரு குரல் கேட்டது. "Don't read the budget". அவர் தயங்கி, மறுபடியும் படிக்கத் தொடங்கினார். ஏனென்றால், அதுதான் முறை. எந்த அமைச்சரும் அப்படித்தான் செய்வோம், அடுத்து, "You criminal, don't

read the budget'. இந்த வார்த்தையைக் கேட்டவன் நான். யார் சொன்னார் என்றுகூட எனக்கு அப்போது தெரியாது. நான் இப்போது தெரிந்தாலும் சொல்லத் தயாராக இல்லை. ஆனால், உணர்ச்சிவசப்பட்ட சூழ்நிலையில் exaggerate பண்ணிச் சொல்லக்கூடிய நிலைமை எல்லோருக்கும் ஏற்படுகிறது. அன்றைக்கு இந்த வரிசையிலே வீற்றிருந்த குமரி அனந்தன் அவர்கள் ஒரு கையிலே அடிபட்டதாகவும், அந்தக் கைக்கு, ஏதோ சிகிச்சை செய்ததாகவும், கட்டுக் கட்டிக் கொண்டு வந்தார். நான்கு நாட்கள் கழித்து வருகிறபோது, இன்னொரு கையிலே கட்டை மாற்றிக் கட்டியிருந்தார். ஆக, முதலிலே அவர் கட்டியிருந்ததாகச் சொன்ன அந்தச் செய்தி பின்னர் மாறிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்களே, அவையிலே இல்லாத உறுப்பினர் பற்றிப் பேசுவது முறையல்ல.

**பேராசிரியர் க. அன்பழகன்:** அவையிலே இல்லாதவர்தான். நான் குற்றம் சொல்லவில்லை. நிலைமையைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது குற்றம்தான்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** அவ்வளவு பெரிய பிரச்சினை இது. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை பெரியது. சட்டமன்றத்திற்கு என்று சில விதிமுறைகள் இருக்கின்றன. *(குறுக்கீடுகள்)* சட்டமன்றத்திற்கு என்று சில விதிமுறைகள் இருக்கின்றன. *(குறுக்கீடுகள்)* இல்லை, பிரச்சினை பெரியது. *(குறுக்கீடுகள்)* இல்லை, பேராசிரியர் அவர்களே, குமரி அனந்தன் அவர்கள் இங்கே விளக்கம் சொல்வதற்கு இல்லை.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மன்னித்துக் கொள்ளவேண்டும். நான் யாரையும் குற்றம் சொல்லவில்லை. நான் யாரையும் குற்றவாளி என்று கூறவில்லை. அப்படி ஒரு சூழ்நிலை இந்த அவையில் ஏற்படக்கூடிய அளவுக்கு ஒரு நிலை முதலிலே உருவாகி விட்டது. அதற்குப் பின்னர் நடைபெற்றவை உணர்ச்சிவயமாக நடைபெற்றது. மூப்பனார் அவர்கள், பின்னர் சொன்னார்கள், என்ன நடைபெற்றது என்றே எனக்குத் தெரியவில்லை என்று. மாண்புமிகு திருநாவுக்கரசர் அவர்கள் இப்போது மத்திய அமைச்சராக இருப்பவர் அதற்குப் பின்னர் இந்த அவையிலே பேசி இருக்கிறார். அந்தக் குறிப்பை எடுத்து நீங்கள் படித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். ஆகவே, exaggerate செய்யும்

வகையில் ஒவ்வொன்றையும் பெரிதுபடுத்தி, யார் மீது யாரும் குற்றஞ்சாட்டி எந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லை. அப்போது பத்திரிகைகளில்கூட சில தவறான செய்திகள் வந்தன.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு தி.மு.க. அரசு, தி.மு.க. மந்திரிகளாக இருந்தவர்கள், தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் மாபெரும் தவறைச் செய்துவிட்டார்கள். அந்தத் தவறுக்கான பலனைப் பின்னர் வந்த தேர்தல்களில் அவர்கள் அனுபவித்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொன்னவை எல்லாம் உண்மை. மாண்புமிகு பேராசிரியர் அவர்களோ, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களோ அவர்கள் செய்த தவறை மறைக்க அன்றைக்கு என்னென்ன காரணங்களைச் சொன்னார்களோ, என்னென்ன கற்பனையான செய்திகளைச் சொன்னார்களோ அதைத்தான் இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்வது உண்மையல்ல. அன்றைக்கு நான் ஓர் உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பவேண்டுமென்று அனுமதி கோரினேன். அந்த அனுமதி மறுக்கப்பட்டது. உடனே தி.மு.க.வினர் தாக்குதலில் இறங்கினார்கள். நடந்தவற்றையெல்லாம் அன்றைக்கு அங்கேயே இருந்து பார்த்தவர், ஒரு சாட்சி திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன். ஆனால் இன்றைக்கு அவர் தி.மு.க.-வில் இருப்பதால், அவர் உண்மை பேசமாட்டார். அதை அவரிடம் நாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால் இந்த விஷயத்தில் அன்றைக்கு எனக்கு என்ன நேர்ந்ததோ அதைப்பற்றி உண்மைக்கு மாறான தகவல் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. இப்போது அதனால் எங்களுக்குக் கிடைக்கக்கூடிய ஆதாயம் ஏதுமில்லை. 1989-ல் இப்படி நடக்கக் கூடாத வகையில் தி.மு.க.வினர் நடந்துகொண்டதால்தான், 1989-ல் நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் மாபெரும் அடியை வாங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் 1991-ல் ஆட்சியை இழந்தார்கள்.

நண்பகல் 12-00

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆத்திரத்தோடு, கோபத்தோடு பேசுவது; அவருக்கு அந்தச் சூழ்நிலையினை விளக்கிப் பேசுகிறபோது அந்த உணர்வு ஏற்படுவது இயற்கை. ஆனால், அன்றைக்கு இருந்த சூழ்நிலையை நேருக்கு நேராகப் பார்த்தவன், என்னைவிட முக்கியமான சாட்சி என்று அன்றைக்கு யாரையும்,

வேறு எவரையும் கோர்ட்டிலேயும் நிறுத்த முடியாது. அப்படி இருந்த நான் அந்தச் சூழ்நிலை எப்படி உருவாயிற்று என்பதை மிக நன்றாக அறிவேன். இவ்வளவு ஆடவர்கள் இருக்கிற இடத்தில் யாராவது, எந்தவொரு ஆடவரோ மிகக் கேவலமான முறையில், அந்த அம்மையார் வருத்தப்படும்படியான ஒரு காரியத்தில் ஈடுபட முடியுமா? நான் அந்த இடத்தில் இருந்தவன். ஆகவே தங்களுக்கு ஏற்பட்ட வருத்தம் காரணமாக, நிகழ்ச்சியை exaggerate செய்து, அளவுக்கு மீறி தம்மீது ஓர் அனுதாபத்தை ஏற்படுத்திக்கொள்வதற்காகப் பேசப்படுகிற பேச்சை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த மறுப்பை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-ல் நடந்த சம்பவத்தைக் கூறி இப்போது அனுதாபம் தேட வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதையெல்லாம் நான் மறுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

***திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிதிநிலை அறிக்கைமீது பேசுகின்ற வாய்ப்பை எனக்கு உருவாக்கிக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர், இந்திய அரசியலுக்கே வழிகாட்டுகின்ற ஆற்றலைப் பெற்றிருக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து எனது உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்பு நடைபெற்று முடிந்த சட்டப் பேரவைக் கூட்டத்தில் எதிர்க் கட்சி உறுப்பினர்களெல்லாம் ஒன்று சேர்ந்து, சாத்தான்குளம் ஸ்பெஷல் போல ஒரே முகமாக நின்று, இந்த அரசின் பல நல்ல செயல்பாடுகளை எதிர்த்து, கூக்குரலிட்டு, வெளிநடப்புச் செய்து, தலைப்புச் செய்தியாக தங்களது செயல்பாடுகளை வரவழைத்து, சட்டமன்றக் கூட்டத்தொடரின்போதே தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கினார்கள்.

*2001* ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் நம்மோடு இருந்தவர்கள்கூட 'புரூட்டஸ் நீயுமா' என்பதைப் போல, அனைவரும் ஒன்று சேர்ந்து நம்மை எதிர்த்தனர். ஆனால், மாண்புமிகு அம்மா

2003 மார்ச் 25] [திரு. சி. சிவசாமி]

அவர்கள், கூட்டணிக் கட்சிகளை நம்பி நான் இல்லை. மக்களை நம்பியே இருக்கிறேன் என்று தன்னந்தனியாக தனிப்பெரும் கட்சியாகத் தேர்தல் களம் கண்டார்கள்; வென்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதியில் மதம் என்றார்கள், ஜாதி என்றார்கள், சிறுபான்மையினரின் தோழன் என்றார்கள், கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் என்றார்கள். POTA போட்டது சரியா என்றார்கள், காமராசர் ஆட்சியை அமைப்போம் என்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் சாதனைகளை விமர்சனம் செய்தார்கள். ஆனால் நடந்தது என்ன? சாத்தான்குளம் தொகுதியின் மக்கள் விவரம் தெரிந்தவர்கள். அந்தத் தொகுதியின் வளர்ச்சிக்கும் அந்தத் தொகுதியின் மக்கள் நலனுக்கும், சிறுபான்மை மக்களின் பாதுகாப்புக்கும் பொருத்தமான ஒரே தலைமை, மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமைதான் என்று உணர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வெற்றிக்கனியைச் சமர்ப்பித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டப் பேரவைக்குச் செல்லாமலும், தொகுதிப் பிரச்சினைகளைச் சட்டப் பேரவையில் பேசாமலும், சுய விளம்பரத்திற்காக எதற்கெடுத்தாலும் வெளிநடப்புச் செய்து இந்த அரசின் நல்ல பல சாதனைகளை வேண்டும் என்றே வசைபாடி வருகிற எதிர்க் கட்சிகளுக்கு ஒட்டுமொத்தத் தமிழக மக்களின் சார்பாக சாத்தான்குளம் மக்கள் ஒரு சவுக்கடி கொடுத்துள்ளார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையில் ஓர் அருமையான நிதிநிலை அறிக்கையினைத் தந்திருக்கிறது. எண்ணிப் பார்க்கிறேன்; எந்தச் சூழ்நிலையில் இந்த நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது? இரண்டாண்டு காலத்திற்கு முன்பு இந்த அரசு பொறுப்பேற்றபோது தமிழகம் இருந்த நிலைமை என்ன? தமிழகம் எந்த அளவிற்கு நிதி நெருக்கடியிலே தள்ளப்பட்டிருந்தது? தமிழகம் எந்த அளவிற்கு நிதி நெருக்கடியிலே சிக்கிச் சீரழிந்துகொண்டிருந்தது என்பதை இந்த நாடு அறியும்; நாட்டிலுள்ள நல்லவர்கள் அறிவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டை வழி நடத்துவது என்பது, ஒரு குடும்பத்தை வழி நடத்துவதைப் போலத்தான். ஒரு குடும்பத்திலே இன்றைக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு நிதி நெருக்கடி ஏற்பட்டு ஒரு சிரமமான சூழ்நிலை ஏற்படுகிறது என்றால், அந்தக் குடும்பத்தை நிர்வகிக்கின்ற குடும்பத் தலைவன் அந்தக் குடும்பத்தை வழிநடத்திச் செல்வதற்குத் தகுதியற்றவராகவும், திறமையற்றவராகவும், வரவு-செலவிலே சரியாகச் செயல்படாத காரணத்தினாலும் ஒரு குடும்பம் கடனிலே மூழ்குகிறது என்கின்ற நிலைமையை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

அதேபோலத்தான், கடந்த காலத்திலே, ஆட்சிப் பொறுப்பிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அவர்களது ஆட்சிக் காலத்தில் தமிழகத்திலே செயல்படுத்திய பல்வேறுவிதமான தவறான செயல்பாட்டின் காரணமாக, தவறான திட்டங்களின் காரணமாக, நிதி நிலைமையை வேண்டுமென்றே மிகை மதிப்பீடுகள் செய்து, நிதியை வீணாக்கியதனுடைய விளைவாக இந்தத் தமிழகம் கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்தது என்று கூறினால் அது உண்மையாகும். அதற்கு ஒரு சில உதாரணங்களை இந்த மன்றத்திலே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் புதிதாகச் சட்டமன்ற உறுப்பினர்களாகி இப்போது எங்களுக்குக் கொடுத்திருக்கிற விடுதிக்கு வந்தோம். அந்த விடுதிக்கு வந்தபோது, அங்கேயிருந்த மார்பிள்கள் எல்லாம் பளபளவென்று மின்னிக்கொண்டிருந்தன. எங்களுக்குக்கூட ஆச்சரியம்! என்னப்பா, இந்த அளவுக்கு கல் எல்லாம் மின்னுகிறதே என்று சொல்லிவிட்டு, பார்த்தபோது எங்களுக்கு இப்போதுதான் தெரியவந்தது. அந்த மார்பிள் கல் மட்டும் மின்னவில்லை; அந்த கல்லுக்குள்ளும் ஏதோ மின்னிக் கொண்டிருக்கிறது என்பதை இன்றைக்குத்தான் நாங்கள் தெரிந்துகொண்டோம். என்ன காரணம் என்றால், இன்றைக்கு புதிதாக கட்டப்பட்ட அந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய விடுதியிலே முதலில் மொசைக் கல் பதிப்பதாகத்தான் இருந்தது. 1999ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அன்றைய திராவிட முன்னேற்றக் கழகம் மொசைக் கல் பதிப்பதற்குப் பதிலாகச் சலவைக் கல்லைப் பதிக்கிறோம் எனறு கூறி புதியதாக சலவைக் கற்களை வாங்கினார்கள்; அதாவது மார்பிள்களை வாங்கினார்கள். இங்கே இருக்கின்ற எல்லா

2003 மார்ச் 25] [திரு. சி. சிவசாமி]

உறுப்பினர்களுக்கும் தெரியும். இங்கே மார்கெட்டிலே எங்கே போய்ப் பார்த்தாலும் மார்பிள் ஒரு சதுர அடி 30 ரூபாய், 40 ரூபாய், 50 ரூபாய், 60 ரூபாய். இன்னும் கொஞ்சம் கூட வேண்டுமென்றால், பெரிய சைஸ் ஆக எடுத்தால் ரேட் ஜாஸ்தி வரும். ஒரு மீட்டர் அகலம், 2 மீட்டர் அகலம், 1½ மீட்டர் நீளம் என்று பெரிய சைஸாக எடுத்தால் ரேட் அதிகமாக வரும். சின்ன சைஸ் ஆக எடுக்க, எடுக்க ரேட் குறையும். ஆனால் 50 ரூபாய், 30 ரூபாய்க்கு ஒரு சதுர அடி கிடைத்தது என்றால், ஒரு சதுர மீட்டர் விலை 500 ரூபாய். ஆனால், சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்ற அந்தக் குடியிருப்பிலே பதிக்கப்பட்டிருக்கக்கூடிய மார்பிள் கல் கடந்த கால தி.மு.க. அரசாலே என்ன விலை கொடுத்து வாங்கப்பட்டது தெரியுமா? ஒரு சதுர மீட்டரினுடைய விலை 1,980 ரூபாய்! வெளி மார்க்கெட்டிலே 500 ரூபாய்க்கு விற்கக்கூடிய அந்த மார்பிள் 1,980 ரூபாய்க்கு வாங்கப்பட்டிருக்கிறது. இதேபோல அவர்களுடைய காலத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில், அந்த மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடம் கட்டுகின்றபோது, அங்கேயும் சலவைக் கல் பதித்திருக்கிறார்கள். அங்கே என்ன ரேட் போட்டு பதித்திருக்கிறார்கள், தெரியுங்களா? சதுர மீட்டர் ஆயிரம் ரூபாய்; அது First குவாலிட்டியாம். இதுவும் First குவாலிட்டியாம்; அங்கே பதித்தால், மாவட்ட ஆட்சியர் ஆபீசிலே பதித்த கல்லுக்கு சதுர மீட்டர் ஆயிரம். எம்.எல்.ஏ. வினுடைய வீட்டுக் குடியிருப்பில் பதித்த அந்தக் கல்லுக்கு சதுர மீட்டருக்கு 1,980; அதாவது 2,000 ரூபாய். வெளி மார்க்கெட்டிலே என்ன ரேட்? சதுர மீட்டர் 500. ஏன் இந்த நாடு நிதி நெருக்கடியைச் சந்திக்காது? ஏன், இந்த மக்கள் கடந்த காலத்திலே தி.மு.க.வைத் தூக்கியடித்தார்கள் என்பதற்கு (குறுக்கீடு) இதை ஆதாரத்துடன் பேசுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) நான் ஆதாரம் இல்லாமல் பேசவில்லை.

பிற்பகல் 12-10

*பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிற பிரச்சினை பற்றி நான் அறிய மாட்டேன். ஆனால் அந்தப் பிரச்சினையைக் குறித்து ஒரு குற்றச்சாட்டுச் சொல்கிறபோது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டுக்கான ஆதாரங்களைப்பெற்று வைத்துக் கொண்டுதான் பேச அனுமதித்திருக்கிறார்களா? மாண்புமிகு பேரவைத்

தலைவர் அவர்களிடத்தில், அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லாமலே உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் தனிப்பட்ட முறையிலே குறிப்பிட்ட யார் மேலேயும் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. பொதுவாகக் கடந்த காலத்திலே, சலவைக் கல் பதிக்கப்பட்டது, அதிக விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு பொதுவான கருத்தைச் சொல்கிறார்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது; சட்டப் பேரவை உறுப்பினர்கள் எல்லாம் தங்கி இருக்கிற அந்த விடுதிக் கட்டடம் கட்டப்பட்ட முறையைப்பற்றிச் சொல்கிறார்கள். அது, குறிப்பாக பேரவைத் தலைவர் அவர்களின் பொறுப்பிலே இருக்கக்கூடிய ஒரு கட்டடம். அதைப்பற்றிப் பேசுகிறபோதாவது ஏதேனும் ஆதாரம் பெற்று, உங்களுடைய மனதிற்கு ஆதாரம் இருக்கிறது என்று கண்டபின் அவர் பேசுகிறாரா, பொதுவாக எதையும் பேசலாம் என்றவகையில் பேசுகிறாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பொதுவான வகையிலேதான் கருத்துகளைச் சொல்கிறார். அதைக் குற்றச்சாட்டு என்ற வகையிலே சொல்வதாக இருந்தால் அதற்குரிய ஆதாரத்தை என்னிடத்திலே கொடுங்கள்.

**திரு. சி. சிவசாமி:** இந்த ஆதாரம் ஏற்கெனவே இந்த மன்றத்திலே இருக்கக்கூடிய அனைத்து உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்ட ஓர் ஆதாரம். இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை மார்ச் 31, 2001 ஆம் ஆண்டுக்கான...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Audit Report, Audit Report.

**திரு. சி. சிவசாமி:** தணிக்கைத் துறை அதிகாரியினுடைய அறிக்கையிலே சுமத்தப்பட்டிருக்கிற ஓர் ஆதாரமான குற்றச்சாட்டு என்பதைத்தான் நான் இங்கே எடுத்துக் கூறிக்கொண்டிருக்கிறேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசாமி, அதை என்னிடத்திலே கொடுங்கள்.

2003 மார்ச் 25]

(ஓர் அறிக்கை பேரவைத் தலைவரிடம் கொடுக்கப்பட்டது)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கமிஷன் போட்டு விசாரணை நடத்தும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது, அவையிலே வைக்கப்பட்ட தணிக்கைத் துறை அறிக்கையைக் கோடிட்டுக் காட்டித்தான் அவர் பேசுகிறார். அவர் குறிப்பிடுவது உண்மைக்கு மாறானதாக இருந்தால் அதை நான் நீக்குவதற்குச் சொல்கிறேன். அதைப்பற்றி ஒன்றும் இல்லை. அவையிலே வைக்கப்பட்ட தணிக்கைத் துறைத் தலைவருடைய ஓர் அறிக்கை, மார்ச் 31, 2001-உடன் முடிந்த ஆண்டிற்கானது.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கைத் துறை தந்திருக்கிற அந்தக் குறிப்பை நான் மறுக்கவில்லை. அது என்னுடைய நோக்கமல்ல. அப்படிச் சொல்லப்படுவது இரண்டு வகையானது. ஒன்று administrative குறைபாடு என்று சொன்னால் ஒரு அரசாங்கத்தின் மீது நேரடிக் குற்றச்சாட்டு அல்ல; நிருவாகத்தில் ஏதேனும் குறை இருக்கலாம்; அல்லது பிளானிங்கே குறையாக இருக்கலாம். ஆக அந்த அடிப்படையில் ஒரு குற்றச்சாட்டை அந்தத் தணிக்கைத் துறை சொன்னாலும்கூட அதைப் பேரவைத் தலைவர் அவர்கள் விசாரித்து, அது குற்றம்தானா என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவருடைய அறிக்கையிலே கோடிட்டுக் காட்டப்பட்ட, எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரிந்த சில கருத்துகளைச் சொல்கிறார். அதுவும் சட்டமன்ற உறுப்பினர் விடுதி என்பது எல்லோருக்கும் இருக்கக்கூடிய வீடு. அதிலே இருக்கிற அனைவரும் அறிந்திருக்கிற ஓர் உண்மையைச் சொல்கிறார். தனிப்பட்ட ஒருவர் மேலே தனிப்பட்ட வகையிலே அவர் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. கடந்த ஆட்சிக் காலத்திலே அப்படிப்பட்ட சில விரயங்கள் செய்யப்பட்ட காரணத்தால் இந்த நிதி நெருக்கடி வந்திருக்கிறது என்கிற வகையிலே அவர் கருத்தைச் சொல்கிறார்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதற்காக இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்துகிறேன் என்றால்; இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறபோது, எந்த அளவுக்கு நிதி நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது, இந்த நிதி நெருக்கடி ஏற்படுவதற்கு கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவுக்கு நிர்வாகத்தோடு செயல்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகத்தான் இந்த உதாரணத்தை, இந்தக் குற்றச்சாட்டை இங்கே மன்றத்திலே எடுத்து வைத்திருக்கிறேன்.

இன்னும்கூட இதைப்பற்றிக் கூறுகிறபோது, இந்தத் திட்டத்தைத் தொடங்குகின்றபோது மொசைக் கல் பதித்தால் போதும் என்றுதான் துவக்கியிருக்கிறார்கள். ஆனால் 1999 ஆம் ஆண்டு மொசைக் கல்லுக்குப் பதிலாக மார்பிள் கல் பொருத்தலாம் என்று கூறி அதற்கு, பெரியதாக டெண்டர் கூட வைக்காமல், அதைச் செய்தவர்களையே continue பண்ணச் சொல்லியிருக்கிறார்கள். ஆக கிட்டத்தட்ட ஒரு ரூபாய் செலவழிக்கப்பட வேண்டிய இடத்திற்கு, 4 ரூபாய் செலவழித்திருக்கிறார்கள். 3 ரூபாய் கூடுதலாக அவர்கள் செலவழித்த காரணத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு இன்றைக்கு கூடுதலாக வரி விதித்து, தமிழக மக்கள் சிரமப்பட வேண்டிய அளவுக்கு ஓர் இக்கட்டான சூழ்நிலை வந்தது. அதை உருவாக்கியவர்கள்தான் கடந்த கால ஆட்சியினர் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பகுதியிலே தூர் வாருகிறார்கள். தூர் வாருவதற்கு 1997ஆம் ஆண்டு அந்த இயந்திரத்திற்கு அவர்கள் கொடுத்த செலவு எவ்வளவு தெரியுமா? ஒரு கிலோ மீட்டர் தூர் வாருவதற்கு 45 ஆயிரம் ரூபாய் 1997ஆம் ஆண்டு கால்வாய்களிலே தூர் வாருவதற்கு ஒரு கிலோ மீட்டருக்குச் செலவழிக்கப்பட்ட தொகை 45 ஆயிரம் ரூபாய். ஆனால் அடுத்த வந்த ஆண்டுகள் 1998, 1999, 2000 வருடம், அவர்கள் ஒரு கிலோ மீட்டருக்கு என்ன கொடுத்திருக்கிறார்கள் தெரியுமா? 1998-லே 1 கிலோ மீட்டருக்கு 1.36 இலட்சம். ஒரு இலட்சத்து 36 ஆயிரம். 1999 ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் (குறுக்கீடு) நீங்கள் time வாங்கி பேசுங்கள், என்னுடைய time-ஐ எடுத்துக்கொள்ள வேண்டாம். 2000ஆம் வருடம் ஒரு கிலோ மீட்டருக்கு ஒரு இலட்சத்து 19 ஆயிரம்.

2003 மார்ச் 25]

பிற்பகல் 12-15

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. சி. சிவசாமி:** 1997 ஆம் ஆண்டு தூர் வாருவதற்கு ஒரு கிலோ மீட்டருக்கு 45 ஆயிரம் செலவு பண்ணிய இடத்தில் அடுத்த வருடம் ஒரு இலட்சத்து 36 ஆயிரம் ஆகிறதென்றால் இந்த நாடு நட்டப்படாமல் என்ன பண்ணும்? இவர்கள் வீட்டுப் பணமா? நாட்டு மக்களுடைய பணத்தை எடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) தவறான ஒரு நிர்வாகத்தின் காரணமாக, இந்த நாட்டை வழி நடத்திச் செல்வதற்குத் தகுதியும் திறமையும் இல்லாதவர்கள் என்பதைத்தானே இது சுட்டிக்காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தானே இன்றைக்கு இந்த அளவிற்கு இந்த நாடு பெரிய நெருக்கடியைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது. ஒரு கிலோ மீட்டருக்குத் தூர் வாருவதற்கு 45 ஆயிரம் எங்கே, ஒரு கிலோ மீட்டருக்கு தூர் வாருவதற்கு ஒரு இலட்சத்து 36 ஆயிரம் எங்கே? அப்போது ஒரு ரூபாய்க்கு 3 ரூபாய் செலவழித்திருக்கிறார்கள். இது யார் வீட்டுப் பணம்? ஏன் இதைச் சொல்லக் கூடாதா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேளுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆண்டுக்காண்டு எப்படி வித்தியாசம் ஆகிறது என்கிறார். 1997ஆம் ஆண்டு Schedule of rate வேறு இருக்கலாம். 1998ஆம் ஆண்டு Schedule of rate வேறாக இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன் . . .

**திரு. துரைமுருகன்:** உங்களுக்கு தெரியாதது இல்லை. நான் சொல்வதை முதலிலே கேளுங்கள். அது Schedule of rate. அதற்கு அரசாங்கத்திலே கணக்கு இருக்கிறது. இரண்டாவது, Channel-கள் வித்தியாசப்படும். 1997-ஆம் ஆண்டு B class Channel எடுத்திருக்கலாம். A class Channel, C class Channel; அகலம், நீளம் குறைவாக இருக்கலாம். எனக்கு என்ன என்று தெரியவில்லை. அதனால், நான் இப்போது அவர் சொல்வதை அப்படியே build-up செய்கிறேன். இருக்கலாம். அப்படி ஏதாவது தவறு இருந்தால் கண்டுபிடித்து நடவடிக்கை எடுங்கள். எனக்கு ஒன்றுமில்லை. ஆனால், மொட்டை மொட்டையாக எடுத்துக்கொண்டு, 1997 ஆம் ஆண்டு இவ்வளவு

பணம், அதைவிட 1998 ஆம் ஆண்டு உயர்ந்திருக்கிறது. எப்படி என்று கேட்டால், எந்தக் கணக்குக்கும் P.W.D.-யிலே Schedule of rate போடுகிறார்கள். அதன் அடிப்படையில்தான் ஒரு கிலோ மீட்டருக்கோ அல்லது வேறு ஒன்றுக்கோ இவ்வளவு பணம் என்று ஒதுக்குகிறார்கள். இது கட்டடத்திற்குப் பொருந்தும் என்பது எல்லோருக்கும் தெரியும். P.W.D.-ல் போடுகிற Schedule of rate-ஐத்தான் Government-ல் எல்லாவற்றிற்கும் நாம் ஒத்துக்கொள்கிறோம். இப்போதும் அப்படித்தான், இன்றைக்கும் அப்படித்தான். இன்றைக்கு என்ன P.W.D. Schedule of rate கொடுக்கிறார்களோ அதைத்தான் இன்றைக்கு ஏற்றுக்கொள்வார்கள். ஆகையினால் சொல்கிறபோது ஒரு குற்றச்சாட்டு மாதிரி, 1997 ஆம் ஆண்டு 46 ஆயிரம் என்றால், 1998-ல் எப்படி உயர்ந்தது என்றால், இந்த வித்தியாசம் இப்படித்தான் உயரும். தவறு இருக்குமானால், நடவடிக்கை எடுங்கள். அதிலே எனக்கு மாறுபட்ட கருத்தில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் தணிக்கைத் துறைத் தலைவருடைய அறிக்கையைக் கையிலே கொடுத்து, அதிலே கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகளை எடுத்துத்தான் பேசிக் கொண்டிருக்கிறார். ஆகவே, முழுக்க முழுக்க ஆதாரத்தோடுதான் பேசுகிறார்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் ஒரு சீனியர் உறுப்பினர்; அமைச்சராக இருந்தவர். அவருக்குப் பக்க பலமாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் கோ.சி. மணி அவர்கள் முன்னாள் அமைச்சர்; ஒரு நீண்ட கால உறுப்பினர். ஒரு வருடம் 45 ஆயிரம் ரூபாய் மதிப்பீடு, அடுத்த வருடம் Schedule of rate படி increase ஆகிறதென்றால், 10 சதவீதம், 15 சதவீதம் வேண்டாம்ப்பா, உங்கள் கணக்குப்படி 20 சதவீதம் என்றே வைத்துக்கொள்ளுங்கள். 45 ஆயிரத்திற்கு 20 சதவீதம் எவ்வளவு, 45 ஆயிரம் பிளஸ் 9 ஆயிரம், 54 ஆயிரம் ஆகுமே தவிர உங்கள் கணக்குப்படி ஒரு இலட்சத்து 36 ஆயிரம் வருமா? (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் என்னை சீனியர் என்றார். அவர் புதியவர். (குறுக்கீடு) அது காங்கிரஸ் ஆட்சியாக இருந்தாலும், அதிமுக ஆட்சியாக இருந்தாலும் எந்த ஆட்சியாக இருந்தாலும் Schedule of rate போடுவதற்கு என்று ஒரு Committee இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சரிடம் கேளுங்கள். அவர்கள் செய்து

2003 மார்ச் 25] [திரு. துரைமுருகன்]

கொடுப்பதுதானே தவிர, இதிலே நானோ அல்லது இங்கு இருக்கின்ற உங்களுடைய P.W.D Minister-கூட ஒன்றும் செய்ய முடியாது. அதற்கென்று ஒரு Committee இருக்கிறது. அவர்கள்தான் செய்வார்கள். அது உங்கள் ஆட்சியில் எப்படி நடக்கிறது என்று கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தணிக்கைத் துறை சுட்டிக்காட்டியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். There can be an escalation of 10% or 20%. But here is an escalation of 400% which creates a doubt. அதைத்தான் அவர்கள் சொல்கிறார்கள்.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதற்காக இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், கடந்த முறை இந்த மன்றத்திலே பேசுகிறபோது—காவிரிப் பிரச்சினை; நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை, பேசவும் இல்லை. பேசுகிறபோது—நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் கூறினார்கள், உறுப்பினருக்கு வயது போதாது, இந்தப் பிரச்சினைக்கு, என்று கூறினார்கள். வயது குறைவாக இருக்கலாம். வல்லமை உள்ளவர்களைத்தான் சட்டமன்ற உறுப்பினர்களாக மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்வு செய்திருக்கிறார்களே தவிர, உங்களது இயக்கத்தைப் போல தகுதியும், நிர்வாகத் திறமையும் இல்லாதவர்களைத் தேர்வு செய்யவில்லை. எனவே, உங்களைப் போன்றவர்களுக்கு பதில் சொல்வதற்கு எங்களைப் போன்ற புதிய சட்டமன்ற உறுப்பினர்களே போதும் என்றுதான் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களை இந்த மன்றத்திற்கு வரவழைத்திருக்கிறார்கள். கடுகு சிறிதாக இருக்கலாம், மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களே, காரம் குறைந்துவிடாது என்பதை உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-20*

தூர் வாருகின்ற காரணத்தால் அரசுக்கு ஏற்படக்கூடிய இழப்பு, ஒட்டுமொத்த இழப்பு எவ்வளவு தெரியுமா? 23 கோடி ரூபாய். இவர்கள் சொல்கிறார்கள். அதிகாரிகள்தான் திட்டத்தைத் தீட்டுகிறார்கள் என்று. ஆமாம், திட்டத்தை உருவாக்குபவர்கள்,

[திரு. சி. சிவசாமி] [2003 மார்ச் 25

மதிப்பீடுகள் செய்பவர்கள், அந்த மதிப்பீட்டின்படி அந்தத் திட்டத்தை அமல்படுத்தக்கூடியவர்கள் எல்லாம் அதிகாரிகள்தான். அந்த அதிகாரிகளை ஆட்டிவைத்து அவர்கள் செய்வது தவறா, அவர்கள் செய்வது சரியா என்று நிருவாகத்தை வழிநடத்தக் கூடியவர்கள் அமைச்சர்கள். ஆக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் திறமையற்ற அமைச்சர்கள் இருந்த காரணத்தினால், திறமையற்ற தலைவர்கள் இருந்த காரணத்தினால் இந்தத் தூர் வாரிய ஒரே பிரச்சினையில் ரூ. 23 கோடி அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இதுமாதிரி முழுவதும் நான் சொல்ல வேண்டுமென்றால் இந்தக் கூட்டத்தொடரில் உள்ள 45 நாட்களும் போதாது. மாண்புமிகு துரைமுருகன் அவர்களே, 12 மாத காலமும் தொடர்ந்து நடக்க வேண்டும். அதிலே பேசுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறபோது உங்களால் பதில் சொல்லவே முடியாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. துரைமுருகன்:** நான் எந்த உறுப்பினரையும், எந்த நேரத்திலும் வயது காரணமாகவோ, அனுபவம் இல்லையென்றோ குறைத்து மதிப்பிடுபவன் அல்ல. ஆனால், நான் அன்றைக்கு அந்தப் பிரச்சினையிலே உங்களுக்குப் போதாது என்று சொன்னேன்.

ஒவ்வோர் ஆட்சியிலும் இப்படித் தணிக்கைக் குழு ஓர் அறிக்கையைக் கொடுக்கிறது. அந்த ஆட்சி நடந்து முடிந்த பிறகு அந்த ஆட்சியிலே சில குறைபாடுகளை அவர்கள் கண்டபின் அதுவே உண்மையல்ல. அவர்கள் கண்டதை எடுத்துத் தருகிறார்கள். ஆனால், அதுதான் Final verdict அல்ல. அது, உங்கள் ஆட்சியில் தரப்பட்ட தணிக்கைக் குழு முன்பு அந்த Report மீது (குறுக்கீடு) wait a minute. (குறுக்கீடு) இல்லை, இல்லை (குறுக்கீடு) எங்கள் ஆட்சியைப் பற்றியும் சொல்லியிருப்பார்கள், அதேபோன்று நீங்கள் ஐந்து ஆண்டு காலம் இருந்தபோது அந்த ஆட்சியிலே தரப்பட்டதிலும் நிறைய இருக்கிறது. ஆகையினால், இது ஏதோ தி.மு.க.வுக்கு மட்டும்தான் சொல்லிவிட்டது என்று அல்ல. இரண்டாவது, இது ஏதோ அமைச்சர்கள் இருந்து செய்திருக்கிறார்கள் என்று சொல்கிறீர்களே, அங்கேதான் still you are an immature Politician.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசியாக திரு. துரைமுருகன் அவர்கள் சொன்ன ஆங்கிலம் எங்களுக்குப் புரியவில்லை. (சிரிப்பு)

2003 மார்ச் 25]

**திரு. சி. சிவசாமி:** அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் அல்ல. அவர் Foreign லிருந்து வந்தவர். அதனால், அவர் ஆங்கிலத்தில்தான் பேசுவார். நான் தமிழ்நாட்டுக்காரன், எனக்கு ஆங்கிலம் புரியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசாமி, உங்கள் கொங்கு தமிழிலிருந்து எங்கள் தமிழுக்கு வாருங்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் ஆங்கிலத்தில் சொல்லியதைப் பேரவைத் தலைவர் விரும்பாவிட்டால், அதை எடுத்து விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, புரியவில்லை என்றுதான் நான் சொன்னேன்.

**திரு. துரைமுருகன்:** கூடுமானவரையில் தமிழிலேயே பேச வேண்டும் என்று விரும்புகிறேன். உங்களுக்குப் புரியவில்லை என்றால் விட்டுவிடுங்கள்.

**திரு. சி. சிவசாமி:** எங்களுக்கும் ஆங்கிலம் புரியும். இருந்தாலும் தமிழகத்தில் வந்து தமிழிலே பேச வேண்டுமென்பதுதான் எங்களுக்கு இருக்கக்கூடிய ஆதங்கம். *(குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சியான ஒன்றைச் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே தமிழில்தான் பேச வேண்டுமென்று. இது எங்களுக்கு மட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும்தான். காரணம், அவர்கள் ஆங்கிலத்திலேயே ஆரம்பத்தில் இருந்தே படித்தவர்கள், அதனால் வரலாம். ஆகையினால், அவர்களுக்கும் இது பொருந்தும். ஆனால் தமிழிலேயே பேசக்கூடியவர்கள்தான். *(சிரிப்பு)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழும், ஆங்கிலமும், இரண்டும் பயன்படுத்த வேண்டுமென்பதுதான் பேரறிஞர் அண்ணாவின் கொள்கை என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். தமிழகத்தின் கொள்கை, பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த கொள்கை. அது இரு மொழிக் கொள்கை தமிழும், ஆங்கிலமும். ஆகவே, ஆங்கிலத்திலே பேசுவது எந்தத் தவறும் இல்லை. *(சிரிப்பு)*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுக்கும் பதிலளித்ததற்கு, முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றி!

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியது புரியவில்லை என்றுதான் பேரவைத் தலைவர் சொன்னாரே தவிர, தவறு என்று சொல்லவில்லை.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல் ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நேற்று நடைபெற்ற விவாதத்திலகூட மின்சாரத்திற்கு குடிசை வாழ் மக்களுக்கு 100 ரூபாய் என்று கூறியபோது, முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் ஒரு யூனிட் என்றால் இவ்வளவு ஆகுமென்று புள்ளிவிவரங்கள் தந்து, அந்த E.B.யில் ஒரு லைட் எரிந்தால் எவ்வளவு யூனிட் வருமென்று புள்ளிவிவரமாக அவருடைய கணக்கைச் சொன்னார். நேற்றைக்கு, அந்த லைட் சம்பந்தமாக இவர் புள்ளிவிவரங்களாகச் சொல்ல முற்பட்டதை இவருடைய ஆட்சிக் காலத்திலே அந்தப் போக்குவரத்து துறையிலே அந்தப் புள்ளிவிவரத்தை வைத்து அந்த Transport-ஐ correct-ஆக நிருவாகம் பண்ணியிருந்தால் அதிலே மாபெரும் இழப்பு ஏற்பட்டிருக்காது.

*பிற்பகல் 12-25*

பிரைவேட்டிலே இருக்கக்கூடிய ஒரு பஸ் ஆபரேட்டர் கிட்டத்தட்ட இரண்டு வருடத்திற்கு ஒரு முறை, 3 வருடத்திற்கு ஒருமுறை புது வண்டி மாற்ற வேண்டும். மாற்றவில்லையென்றால் அந்தப் பேருந்து இயக்குபவருக்கு மாபெரும் loss வரும். அப்படி இன்றைக்கு சாதாரணமாக ஒரு பஸ் வாங்கி ஓட்டக்கூடிய owner-க்கும் கூட ஒரு அனுபவம் இருக்கிறது. ஆனால், கடந்த கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் கிட்டத்தட்ட 1999 ஆம் ஆண்டு வரை 3,188 பேருந்துகள் புதுப்பிக்கப்படவில்லை. அரசாங்கமே என்ன சொல்கிறது என்றால்; 7 இலட்சம் கிலோ மீட்டர், இல்லையென்றால் 3 வருடம். அதே டவுன் சர்வீசாக இருந்தது என்றால் 7 இலட்சம் கிலோ மீட்டர், இல்லையென்றால் 6 வருடம்.

2003 மார்ச் 25] [திரு. சி. சிவசாமி]

இதற்குள்ளே புதிய வண்டி போட வேண்டும். இல்லையென்றால் maintenance costly-ஆகி expenditure ஜாஸ்தியாகி கூடுதல் செலவு ஆகும் என்று அரசாங்கமே கூறுகிறது. ஆனால், அரசாங்கம் சுட்டிக்காட்டியும்கூட தன்னுடைய நிர்வாகத் திறமையின்மையின் காரணமாக கடந்த காலத்திலே போக்குவரத்துத் துறையில் 3,188 பேருந்துகள் புதுப்பிக்கப்படவில்லை என்பதால் ரிப்பேர் செலவுக்காகக் கூடுதலாக 101 கோடி ரூபாய்; கூடுதலாக டீசல் செலவுக்காக 81 கோடி ரூபாய்; கூடுதலாக டயர் செலவுக்காக 19 கோடி ரூபாய் ஒட்டுமொத்தமாக வந்து..

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவசாமி, உட்காருங்கள். உட்காருங்கள். பொன்முடி, சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை ஏற்றுக்கொள்கிறபோது இதுபோன்று ஓடாமல் இருந்த பேருந்துகளினுடைய எண்ணிக்கை 6,000. அதை 3,600 ஆகக் குறைத்திருக்கிறோம். அதுதான் உண்மை. ஆகவே, அந்தக் காலத்திலே ஆட்சி சிறப்பாகவே நடைபெற்றது. பேருந்துக் கட்டணத்தை கிலோ மீட்டருக்கு 6 பைசா உயர்த்தியதற்குப் பிறகு, இந்த இரண்டு ஆண்டுகளில் நீங்கள் எத்தனை சதவிகிதம் புதிய பேருந்துகளை விட்டிருக்கிறீர்கள்? எத்தனை சதவிகித புதிய பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன? பழைய பேருந்துகள் எத்தனை மாற்றியிருக்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, அதாவது, அவர் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னால் அதன் மீது விளக்கத்தைச் சொல்லுங்கள். நீங்கள் மறுபடியும் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவதற்கு எல்லாம் வாய்ப்புக் கிடையாது. (குறுக்கீடு) அவர் ஆதாரத்தைக் கொடுத்துக் குற்றச்சாட்டைச் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவுடன் பழைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மாற்றப்பட வேண்டிய பழைய பேருந்துகளை மாற்றாததைக் கண்டித்து, அந்தச் சீர்கேட்டைச் சீரமைக்க வேண்டும் என்ற

எண்ணத்தோடு 1,550 புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்படி இன்று வரை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்படி 1,286 புதிய பேருந்துகள் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) வாங்கப்பட்டு, body கட்டப்பட்டு இன்றைக்கு ரோட்டிலே ஓடிக்கொண்டிருக்கின்றன. இன்னும் அடுத்த அறிவிப்பாக, 2,275 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு அறிவிப்பினைச் செய்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் இப்போது, புதிய பேருந்துகள் வாங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கத்தைச் சொல்லியதை ஏற்றுக்கொள்கிறேன். நாங்கள் ஆட்சியில் இருந்தபோது ஐந்து ஆண்டுகளிலே வாங்கப்பட்ட புதிய பேருந்துகளினுடைய எண்ணிக்கை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மானியக் கோரிக்கையில்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, ஒரு Point of Order என்று கேட்கிறீர்கள். அவர் ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார். அந்தக் குற்றச்சாட்டிற்கு விளக்கம் சொல்வதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) பொன்முடிக்குச் சொல்லிவிடுகிறேன்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர், பொதுவாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார். நிதி நெருக்கடி ஏன் ஏற்பட்டது என்பதற்கான விளக்கத்தைச் சொல்லி, அதற்கான குற்றச்சாட்டை அவர் சொல்கிறார். குற்றச்சாட்டுக்கு ஆதாரத்தை என்னிடத்தில் கொடுத்திருக்கிறார். நீங்கள் அது சம்பந்தமாக விளக்கம் சொல்வதாக இருந்தால் சொல்லலாமே தவிர, நீங்கள் மறுபடியும் ஒரு சிறப்புச் சொற்பொழிவை ஆற்றுவதற்கு இங்கே இடம் கொடுக்க முடியாது. சிவசாமி, பேசி முடியுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.

2003 மார்ச் 25]

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**திரு. இ. புகழேந்தி:** அமைச்சருக்குப் பதில் சொல்ல வேண்டும் அல்லவா? அவர் எப்படிப் பேசலாம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகனைப் பேச விடுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. சிவசாமி:** எல்லாம் தெரியும், எப்படிப் பேசுவது என்று. நீங்கள் ஒன்றும் கற்றுக்கொடுக்க வேண்டியது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மொத்தத்திலே தூர் வாருவதைப் பற்றி ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார். பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை என்பதற்காக அல்ல. இந்த அரசுக்கு ஏன் நிதி நெருக்கடி ஏற்பட்டது என்பதற்கான விளக்கத்தைச் சொல்கிறார். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே போட்டிருக்கிற அந்த மொசைக்கைப் பற்றிச் சொல்கிறார். ஒட்டுமொத்தமாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார். அதற்கு உங்கள் தரப்பிலே விளக்கம் சொல்வதற்கு நீங்கள் வாய்ப்புக் கேட்கிறீர்கள். வாய்ப்பைத் தருகிறேன். நீங்கள் அத்தோடு நிற்க வேண்டுமே தவிர, புதிய புதிய சிந்தனைகளுக்கு எல்லாம் போகக்கூடாது.

**திரு. துரைமுருகன்:** ஒரேயொரு விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கையில் எல்லா இலாகாக்களும் வருகிற காரணத்தால் எந்த இலாகாவைப் பற்றியும் பேசலாம். அதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், சிவபுண்ணியம் போலீசைப் பற்றி ஆரம்பித்தவுடனே அந்த இலாகாவில் பேசுங்கள், உட்காருங்கள் என்று சொல்லிவிட்டு, ஆளுங்கட்சிக்காரர்கள் மட்டும் அத்தனை இலாகாவிலேயும் பேசுவது என்ன நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவருடைய நேரம் முடிந்துவிட்டது. நேற்றையதினம் பேசினார். அன்றைக்கு அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த நேரம் முடிந்துவிட்டது. அதைச் சுட்டிக்காட்டித்தான் சொன்னேன். (குறுக்கீடுகள்) இல்லை. அவர் பேச வேண்டிய கருத்துகளை அதற்குப் பிறகு மானியக் கோரிக்கையிலே பேச வேண்டும் என்று தெரிவித்தேன். அதிலே ஒன்றும் தவறு இல்லை.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படியெல்லாம் கடந்த கால ஆட்சியில் நிர்வாகத்தினுடைய திறமையின்மை காரணமாக, ஒரு ரூபாய்க்கு 2 ரூபாய் செலவழித்து, ஒரு ரூபாய்க்கு 4 ரூபாய் செலவழித்து, இந்த அரசைக் கடுமையான நிதி நெருக்கடி என்ற இக்கட்டுக்கு ஆளாக்கிவிட்டுச் சென்ற அந்தச் சூழ்நிலையில், தமிழக மக்கள் இந்த நாட்டை வழி நடத்திச் செல்லக்கூடிய தகுதி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கே இருக்கிறது என்று கூறி ஆட்சியை அம்மா அவர்களுடைய கையிலே கொடுத்தார்கள், இந்த இரண்டு ஆண்டு காலத்தில் இன்றைக்கு அருமையான ஒரு நிதிநிலை அறிக்கையை, 7,000 கோடி ரூபாய்க்கு திட்டங்களை அறிவித்து இருக்கின்றார்கள்.

*பிற்பல் 12-30*

நேற்றைக்குப் பேசிய மாமன்ற உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், வெறும் அறிவிப்புகள்தானே, என்ன செய்திருக்கின்றார்கள் என்றுகூடக் கேட்டார்கள். நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திருப்பூர் நகருக்கு ஒருமுறை வருகை தந்தார். '1,300 கோடி தந்த வள்ளலின் வாரிசே வருக, வருக' என்று தட்டிக்கூட வைத்தார்கள். எதற்கு என்று கேட்டீர்கள் என்றால் திருப்பூருக்கு மூன்றாவது குடிநீர்த் திட்டத்திற்குப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொல்லிப்போட்டு தட்டி வைத்தார்கள். உண்மையான நிலவரம் என்னவென்றால், 1991-96ஆம் ஆண்டு தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பிலேயிருந்த மாண்புமிகு அம்மா அவர்கள் திருப்பூருக்கு இரண்டாவது குடிநீர்த் திட்டத்தைத் தந்தார்கள். அந்த இரண்டாவது குடிநீர்த் திட்டம் மட்டும் போதாது. வளர்ந்து வருகின்ற இந்தத் தொழில் நகரமான திருப்பூருக்கு மூன்றாவது குடிநீர்த் திட்டமும் தேவை என்று ஒரு புதிய திட்டத்தைத் தீட்டினார்கள். ஆனால் பிறகு வந்த ஆட்சியாளர்கள் அந்தத் திட்டத்தைக் கிடப்பிலே போட்டார்கள். வெறும் தட்டி மட்டும்தான் வைத்து வரவேற்புக் கொடுத்தார்கள்.

2003 மார்ச் 25] [திரு. சி. சிவசாமி]

நேற்றைக்கு ஒவ்வொன்றாக அறிவிக்கிறபோது இந்த அறிவிப்பு நடக்குதா, நடக்குதா என்று கேட்டார்கள் இல்லையா? 1,300 கோடி ரூபாய் என்று சொல்லி உங்களுக்கு வரவேற்பு வைத்தார்களே, அந்தத் திட்டம் உங்கள் காலத்திலே நடந்ததா? மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, ஆண்டிப்பட்டிக்கு அடுத்தபடியாக திருப்பூர் நகருக்கு வருகை தந்து, தனது திருக்கரங்களால் அந்த மூன்றாவது குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி இருக்கிறார்களே (மேசையைத் தட்டும் ஒலி) இது சாதனையாகத் தெரியவில்லையா? அந்தத் திட்டத்திற்காக 40.17 கோடி ரூபாய் இந்த நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதே இது சாதனையாக உங்களுக்குத் தெரியவில்லையா?

அதோடு மட்டுமா? அன்றையதினம் அந்தத் திருப்பூர் நகரிலே இருக்கக்கூடிய விவசாயிகளுடைய 300 ஏக்கர் நிலத்தை அரசினுடைய அடிமாட்டு விலைக்கு எடுத்து அங்கே தொழிற்சாலைக்குக் கொடுக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியாளர்கள் முயற்சி செய்தார்கள். இன்றைக்கு எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தோழர்கள் எல்லாம்கூட இணைந்து அந்த விவசாயிகளுக்கு உரிய விலை கொடுத்து அந்த நிலத்தை எடுக்க வேண்டுமே தவிர அந்த விவசாயிகளுடைய வயிற்றிலே அடித்து அந்த நிலத்தை எடுக்கக் கூடாது என்று போராடினார்கள். ஆனால் இப்போது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் திருப்பூர் நகரிலே ஒரு ஆயத்த ஆடைகள் பூங்கா Apparel Park அமைப்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டி இருக்கின்றார்களே, இது சாதனையாகப் படவில்லையா? அதற்காக அந்த விவசாயிகளுடைய நிலத்தை மார்க்கெட் விலை கொடுத்து வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். ஏதோ அடிமாட்டு விலைக்கு வாங்கவில்லை. அந்த அளவுக்குச் செய்து கொண்டிருக்கிறார்களே, அது ஒரு சாதனையாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியவில்லையா என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் அரியலூர் மாவட்டத்தையும், பெரம்பலூர் மாவட்டத்தையும் ஏன் இணைத்தார்கள் என்று கேட்டார்கள்? பிரிக்க வேண்டியதைப் பிரித்திருந்தால், இணைத்திருக்க வேண்டியதில்லை. வேண்டும் என்பதற்காக ஒரு காரைக் கொண்டுபோய் நிறுத்தி இந்த முனை பெரம்பலூர் மாவட்டம், அந்த முனை அரியலூர் மாவட்டம்

என்று சொல்லிக்கொண்டு, ஜனத்தொகை குறைந்த ஒரு சிறிய பகுதியை இரு மாவட்டங்களாகப் பிரித்தார்கள். இவர்களுக்கு இந்த கோயம்புத்தூர், தருமபுரி போன்ற பெரிய பெரிய மாவட்டங்கள் இருப்பதெல்லாம் கண்ணுக்குத் தெரியவில்லையா? அதைவிடப் பெரியதாகப் போய்விட்டதா பெரம்பலூரும், அரியலூரும்? இதை ஏன் பிரித்தீர்கள், அதை ஏன் இணைத்தீர்கள் எனக் கேட்டார்கள். சிறியதாக இருந்தது இணைத்தார்கள். பெரியதாக இருக்கிறதைப் பிரிப்பார்கள். ஏன் இப்போது பிரிக்கவில்லை என்று கேட்கிறார்கள். உங்களால் கஜானா காலி. இன்றைக்கு கொஞ்சம் பணம் வருகிறது. அடுத்த ஆண்டு பணம் வருகிறபோது கட்டாயமாக, தேவைப்படுகிற மாவட்டங்களைப் பிரிப்பார்கள் என்பதுகூட நமது மாமன்ற உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்குத் தெரியவில்லை என்றால் நான் என்ன என்று சுட்டிக்காட்டுவது?

அவர்கூட நேற்றைக்குப் பட்டியல் இட்டார்? சும்மா எடுத்து வைத்து, போன வருட பட்ஜெட், இந்த வருட பட்ஜெட் என்று சொல்லிப்போட்டு, அப்படியே ஒன்றாம் கிளாஸ் குழந்தைகள் ஒப்பிட்டுச் சொல்லுகிற மாதிரி அவர்பாட்டுக்குச் சொன்னார். நானும் சொல்கிறேன், 1991-96, நான் ஒட்டுமொத்தமாகச் சொல்லவில்லை. என்னுடைய தொகுதியிலே நடந்த சாதனைகளை மட்டும் சொல்கிறேன். ஒரு தொகுதியைச் சொன்னாலே இந்த மாநிலம் பூராவும் செய்ததாக அந்தச் சாதனை படைத்ததாக அர்த்தம். 1991-96, திருப்பூர் தொகுதிக்கு இரண்டாவது குடிநீர்த் திட்டத்தைத் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். திருப்பூர் நகருக்கு புதிய இரயில்வே மேம்பாலத்தைக் கொண்டு வந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். திருப்பூர் நகரிலே மங்களம் பாதையிலே, ஒரு மகளிர் கல்லூரியை கொண்டு வந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். திருப்பூர் நகரிலே ஒரு புதிய பேருந்து நிலையத்தை உருவாக்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். திருப்பூரிலே ஒரு புதிய தொழிற்பேட்டையை உருவாக்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். திருப்பூரிலே ஒரு புதிய துணை மின் நிலையத்தைக் கொண்டு வந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். திருப்பூர் நகரத்தைச் சுற்றி ஒரு புதிய ரிங் ரோட்டைக் கொண்டு வந்தது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு.

2003 மார்ச் 25]

பிற்பகல் 12-35

**திரு. துரைமுருகன்:** திருப்பூர் மேம்பாலம். 1989-ல் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது, நான் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்தபோதுதான் அந்தத் திட்டத்தை ஆரம்பித்தோம். அதற்குப் பிறகு இவர்கள் வந்து கட்டி முடித்தார்கள். ஆனால் வேலையைத் தொடங்கியது திராவிட முன்னேற்றக் கழகம், இப்போது எப்படி பலது, நாங்கள் கட்டி வைத்த அணைகளை எல்லாம் திறக்கிறார்களோ அப்படித்தான். அது தவறல்ல. ஒரு ஆட்சி, அவர்களே வந்து திறப்பார்கள் என்பதல்ல. ஒரு ஆட்சி தொடங்கும்; நாங்கள் தொடங்கினோம்; அடுத்து முடித்தார்கள். அதேபோன்று இப்போது உள்ள முதலமைச்சர் அவர்கள் அடவிநயினார், வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கங்களைத் திறந்தார்கள். நாங்கள் கட்டி முடித்தோம்; அவர்கள் திறந்திருக்கிறார்கள். அது தவறல்ல. யார் ஆட்சியில் இருக்கிறார்களோ அவர்கள்தான் செய்வார்கள். அது ஒன்றும் பெரிதல்ல. எனவே, இந்த மேம்பாலத்தைப் பொறுத்தவரையில் அது திராவிட முன்னேற்றக் கழகத்தால் தொடங்கப்பட்டது.

**திரு. சி. சிவசாமி:** மேம்பாலத்தைப் பொறுத்தவரையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயே முடிக்கப்பட்டதுதான். நீங்கள் சொன்னதற்கு ஒரு கருத்தைச் சொல்லலாம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, திருப்பூர் நகரைச் சுற்றி ஒரு ரிங் ரோடு கொண்டு வந்தார்கள். அந்த ரிங் ரோட்டிலே இரயில்வே பாதையைக் கடக்கின்ற இடமான கூலிபாளையம் இரயில்வே கேட் என்பது நொய்யலாற்றினுடைய பகுதி; காசிபாளையத்திற்கு அருகிலே இரண்டு மேம்பாலங்களைக் கட்டுவதற்கு அந்த ரிங் ரோடு திட்டத்திலே ஒரு திட்டத்தை இணைத்திருந்தார்கள். ஆனால் ரிங் ரோட்டினுடைய பணி முடிவடைகிறபோது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி பொறுப்புக்கு வந்தது. நீங்கள் வந்ததும் என்ன செய்தீர்கள்? இது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்த திட்டம் என்று சொல்லிப்போட்டு, அந்த ஸ்கீமை அப்படியே போட்டுவிட்டு அந்த இரண்டு பிரிட்ஜையும் கட்டவே இல்லை. தற்போது 8 வருடம் ஆகிவிட்டது. நான் என்ன என்று போய்க் கேட்டேன். அதற்கு என்ன சொன்னார்கள் என்றால், இது மத்திய அரசாங்கம் 50 சதவிகிதம், மாநில அரசாங்கம் 50 சதவிகிதமாகச் செய்வதாகப் போட்ட ஒப்பந்தம், இந்த 4 பிரிட்ஜ்-ம் Phase-II

திட்டத்திலே இடம் பெற்றிருந்தன. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு 100 சதவீதமும் மத்திய அரசாங்கமே போட்டுச் செய்ய வேண்டுமென்று சொன்னதனாலே, இந்தப் பாலத்தைக் கட்ட முடியவில்லை என்று சொல்லிப்போட்டு குற்றச்சாட்டாகச் சொன்னார்கள். ஆக மத்திய அரசாங்கம் பணம் கொடுத்தாலும்கூட, அதை வாங்கி பாலத்தைக் கட்டாமல் 5 வருடங்களாகப் பாழடித்தவர்கள் நீங்கள். ஆனால், நீங்கள் சொல்லுகிறீர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் கொண்டு வந்த திட்டம் என்று. அங்கே நீங்கள் கொண்டு வந்த திட்டம், அந்த ரிங் ரோட்டிலே மேம்பாலம்கூட இல்லாமல் இன்றைக்கு நாங்கள் அம்மாவிடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த நிலைமைக்கு ஆளாக்கியவர்கள் நீங்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, இதுவாவது 5 வருடம். இந்த 5 வருட சாதனையைச் சொன்னதற்கே மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் இந்த அளவுக்குப் பதறுகிறார் என்றால், இந்த இரண்டு வருடம்; இப்போது இரண்டு வருடம் ஆகிறது. இந்த இரண்டு வருடத்தில் திருப்பூரில் என்ன நடந்திருக்கிறது என்று சொல்கிறேன் கேட்டுக்கொள்ளுங்கள்.

மூன்றாவது குடிநீர்த் திட்டம், 1,026 கோடி ரூபாய்க்கு அடிக்கல் நாட்டப்பட்டுப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில் 45 இலட்சம் ரூபாயில் சுரங்க நடைபாதை, எம்.எல்.ஏ., ஃபண்டிலிருந்து கொடுத்துச் செய்தால், உங்கள் முன்னாள் திராவிட முன்னேற்றக் கழகச் சேர்மென், இப்போது நகரச் செயலாளராக இருக்கிற செல்வராஜ் சுரங்க நடைபாதை வரக்கூடாது என்று சொல்லிப்போட்டு, High Court-ல் stay வாங்குகிறார். ஆனால் stay கொடுக்கவில்லை. வேலை செய்வதற்கு நாங்கள் பணம் கொடுத்து, இதைச் செய்தால் இந்த அரசுக்கு நல்ல பெயர் வந்துவிடும் என்று சொல்லிப்போட்டு, சுரங்க நடைபாதை வரக்கூடாது என்று சொல்லிப்போட்டு, Court-ல் வழக்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுவல்லவா திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய சாதனை.

தற்போது புதிதாக திருப்பூரில் 50 Elementary Schools ஆரம்பித்திருக்கிறோம். வருகின்ற வருடம் 60 Schools open செய்யப் போகிறோம். இன்றைக்கு Apparel Park 300 ஏக்கரில், வேண்டுமென்றால்

2003 மார்ச் 25] [திரு. சி. சிவசாமி]

அந்த விழாவிற்கு மாண்புமிகு முன்னாள் அமைச்சர் துரைமுருகனை அவர்களைக்கூட வரச் சொல்லலாம். வந்து பார்க்கட்டும் இந்த ஆட்சியின் சாதனை திருப்பூரில் எப்படி இருக்கிறது என்று.

அதேபோல 5 புதிய துணை மின் நிலையங்கள் திருப்பூரிலே. நொய்யலாற்றின் குறுக்கே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய மேம்பாலம். பிரைவேட்டில் சென்று ஸ்கேன் எடுக்கப் போனால் 3,500 ரூபாய்—அரசு மருத்துவமனையில் 350 ரூபாயில் ஸ்கேன் என்று சொல்லிவிட்டு அம்மா திருப்பூர் வந்தபோது ஒரு கோடி ரூபாயில் C.T. Scan Machine அரசு மருத்துவமனைக்கு; 27 ரூட்டுகளில் புதிதாகப் பேருந்து, இதைவிட வேடிக்கை, 4 சதவீதமாக இருந்தது பனியன் C.S.T.; பனியனை வெளி மாநிலங்களுக்கு விற்கிறபோது 4 சதவீதம் விற்பனை வரி இருந்தது. அம்மாவிடம் வந்து சொன்னோம். 4 சதவீதத்தை ஒரு சதவீதமாகப் பனியனுக்குக் குறைத்துக் கொடுத்தார்கள். உங்கள் காலத்தில் என்ன ஆனது? பனியனுக்கு வரி எடுக்கிறோம் என்று சொல்லிவிட்டு சமச்சீர் வரிக்கு 4 சதவீதத்திற்குக் கையெழுத்து போட்டீர்கள் நீங்கள். இருந்த ஒரு சதவிகித வரியை எடுத்துவிட்டு இப்போது 4 சதவிகிதம் வரிக்கு வழிவிட்டவர்கள்தான் நீங்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு—பனியன் என்கிற காரணத்தால்—ஒரு கருத்தை என்னுடைய தொகுதியின் சார்பாக நான் முன்வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களே, இந்த பனியனிலே இரண்டு டைப் இருக்கிறது. ஒன்று T.Shirt—வெளிநாடுகளுக்குப் போவது; இன்னொன்று நாம் சட்டைக்குள் போட்டுக்கொள்ளக்கூடிய உள்ளாடை, பனியன், ஜட்டி; இது local production செய்யப்பட்டு தமிழ்நாட்டில் பாதி விற்கப்படுகிறது, பாதி வெளி மாநிலங்களுக்கு விற்கப்படுகிறது. வெளி மாநிலங்களுக்கு விற்கிறபோது ஒரு சதவிகிதம் C.S.T. போடுகிறோம். 4 சதவிகிதமாக இருந்ததை அம்மா அவர்கள் ஒரு சதவிகிதமாகக் குறைத்துக் கொடுத்தார்கள். ஒரு சதவிகிதம் என்று குறைத்தால் மாதம் ஒன்றுக்கு 14 இலட்சம் ரூபாய் என்று வந்துகொண்டிருந்த Sales Tax 80 இலட்சம் ரூபாய் வரை வந்தது. 80 இலட்சம் ரூபாய் வரி வந்துள்ளதில் இன்றைக்கு என்ன ஆனது என்று கேட்டால், மத்திய அரசாங்கம் 'C' Form வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். இந்த பனியனை வெளி மாநிலங்களில் வாங்குவது யார் என்று கேட்டால் சந்தைக் கடையில் போட்டு வியாபாரம் செய்பவர்கள், Platform-ல் போட்டு வியாபாரம்

[திரு. சி. சிவசாமி] [2003 மார்ச் 25

செய்கிற சிறிய, சிறிய வியாபாரிகள்தான். இவர்கள் எல்லாம் பதிவு பெற்ற Dealers கிடையாது. வெளி மாநிலத்தில் R.C.-யே கிடையாது. அவர்களிடம் 'C' Form கேட்டால் கிடைக்காது. ஆனால் தி.மு.க. அங்கம் வகிக்கிற அந்த மத்திய அரசாங்கத்தினுடைய நிபந்தனைப்படி 'C' Form இல்லையென்றால் 10 சதவிகிதம் வரி கட்டவேண்டும். ஒரு சதவிகிதம் கட்டினால் போதும் என்ற நிலைமை மாறி இன்றைக்கு 10 சதவிகிதம் கட்டவேண்டிய நிலைமை உருவாகிவிட்டது. இதனாலே என்ன ஏற்படுகிறது என்றால், மாதம் ஒன்றுக்கு 80 இலட்சம் ரூபாய் என்று இருந்த வரி, பழைய வரி பிரகாரம் 30 இலட்சத்திற்குப் போய்விட்டது. எனவே, நான் மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்வது, இந்த 10 சதவிகித வரியில் 8 சதவிகிதத்தை இந்த மக்களுக்குத் திருப்பி கொடுக்கின்றபோது, இதன் மூலமாக அரசுக்கு ஆண்டொன்றுக்கு 20 கோடி ரூபாய் திருப்பூர் நகரத்திலேயிருந்து வரியாக மட்டும் வர இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற ஒரே ஒரு பிரச்சினையை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரம் வளர்ந்து வருகின்ற ஒரு தொழில் நகரம். அங்கே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அனுப்பர்பாளையத்திலே இருக்கக்கூடிய உயர்நிலைப்பள்ளியை, மேல்நிலைப்பள்ளியாகச் சென்ற ஆண்டு உயர்த்திக்கொடுத்து இருக்கிறார்கள். சுமார் 1500 மாணவர்களுக்கு மேலே அந்தப் பள்ளியிலே பயின்று வருகின்றார்கள். அந்தப் பள்ளிக்கு இடம் இல்லாத காரணத்தினால், சந்தைக் கடையிலே தென்னங்கீற்றால் கூரை போட்டு அந்த ஸ்கூல் நடந்துகொண்டிருக்கிறது. அந்த ஸ்கூலுக்கு பக்கத்தில் அறநிலையத் துறையைச் சார்ந்த இடம் 8½ ஏக்கர் இருக்கிறது. அதேமாதிரி இடுவம்பாளையத்திலே இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளிக்கும் அருகிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசாமி, கோரிக்கைகளை எல்லாம் எழுதிக்கொடுத்து விடுங்கள்.

2003 மார்ச் 25]

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. இந்த இடத்திற்கு ஊர் ஜனங்கள் எல்லாம் சேர்ந்து நாங்கள் பணம் கொடுத்து விடுகிறோம். அறநிலையத் துறையின் இடத்தை எங்கள் பள்ளிக்கூடத்திற்குக் கொடுத்துவிடுங்கள் என்று மனு கொடுத்தோம். ஆனால், அரசாங்கத்திலேகூட அதிகாரிகள், சில கரும்புள்ளிகள் வந்து இன்றைக்கு அந்த நிலத்தினுடைய மதிப்பீட்டை ஏக்கராவிற்கு மதிப்பிடுவதற்குப் பதிலாக, சென்டுக்கு இவ்வளவு என்று வேல்யூ போட்டு ஏகப்பட்ட பணத்தைக் கேட்பதால் அந்த இடத்தை மாற்ற முடியாமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் கட்டாயமாக அந்த இடத்தை, அந்தப் பள்ளிக்கு எடுத்துத் தருவதற்கு முன்வரவேண்டும்.

அதேபோல, திருப்பூர் நகரத்திலே லாரிப்பேட்டை அமைப்பதற்கு அறநிலையத் துறையைச் சேர்ந்த 14 ஏக்கர் இடம் இருக்கின்றது. அதைக் கொடுத்தால், 14 ஏக்கரிலே லாரிப்பேட்டை அமைக்கின்றபோது அதற்குண்டான பணத்தை நாங்கள் நகராட்சியிலிருந்து கட்டிவிடுகிறோம். அப்படி அமைக்கின்றபோது திருப்பூர் நகராட்சியினுடைய போக்குவரத்து நெரிசல்கள் எல்லாம் தவிர்க்கப்படும் என்று நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இறுதியாக, ஒரே ஒரு கருத்தை மட்டும் கூறி நான் விடைபெற ஆசைப்படுகின்றேன். நமது மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் பேசுகின்றபோது, இங்கே சொன்னார்கள்; பசுமை வரி, அம்மாவிற்குப் பிடித்த பச்சை என்றார்கள். நான் கேட்கிறேன், எங்களது கிராமத்தில்கூட ஒரு கருத்தைச் சொல்வார்கள். மஞ்சள் என்றால் மஞ்சள் சீட்டு; மஞ்சள் சீட்டு என்றால் திவால் ஆனவர்கள் என்று. ஆக, இந்த அரசை நாங்கள் திவாலாக்கப் போகிறோம் என்பதற்காக, எடுத்துக்காட்டத்தான் உங்கள் தலைவர் மஞ்சள் துண்டை அணிந்தாரா? (மேசையைத் தட்டும் ஒலி). பச்சைக்கும், பசுமை வரிக்கும் இட்டுக்கட்டிப் பேசுகின்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல. நீங்கள் இட்டுக்கட்டுவதைப்போல நாங்களும் இட்டுக்கட்டிப் பேச முடியாதா? ஆனால் தரமும், தகுதியும் இல்லாமல் பேசக்கூடாது. தரமான

[திரு. சி. சிவசாமி] [2003 மார்ச் 25

வார்த்தைகளைத்தான் பேசவேண்டுமென்று எங்களது மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களுக்கு ஆணையிட்டிருக்கின்ற காரணத்தினால், நாங்கள் இன்னும் தடைகள் கடந்து பேசத் தயாராக இல்லை. எனவே, உங்களது பேச்சுகளுக்கு, உங்களது ஏளனமான பேச்சுகளுக்கு எல்லாம், நாங்கள் இன்றைக்கு பல்வேறு விதத்திலே பதில் அடி கொடுக்கத் தயாராக இருக்கிறோம். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களே, எங்களுக்கு திருப்பூர் பனியனுக்கு 'C' Form பிரச்சினையைத் தீர்த்து, அந்தப் பள்ளிகளுக்கு அறநிலையத் துறையினுடைய இடத்தையும் எடுத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களே, உங்கள் திருக்கரங்களால், நீங்கள் வருகின்ற காலகட்டத்தில் கோவை மாவட்டத்திற்கு வருகை தந்து, அவிநாசி-அத்திக்கடவு திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி, அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்கவேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2003-2004* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே பாராட்டவேண்டிய சில அம்சங்களாவது இல்லவே இல்லை என்று என்னால் சொல்லிவிட முடியாது. பாராட்ட வேண்டிய அம்சங்களும் இருக்கின்றன. அதேசமயத்தில் எங்களுக்குச் சில ஏமாற்றங்களை அளிக்கின்ற சில அம்சங்களும் இருக்கின்றன என்பதை நான் முதலிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறு தொழில் வளர்ச்சிக்காக, அதை ஊக்குவிக்கின்ற முறையிலே கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளை நிலை உயர்த்த *12* கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதை நான் மனதார வரவேற்கிறேன்.

அதேபோல, சென்னை மத்திய சிறையைப் புழலுக்கு மாற்றுவதற்காக *10* கோடி ரூபாய் செலவிடுவதை நான் வரவேற்கிறேன். இதேபோல, கோவை சிறையைக்கூட நீங்கள் புறநகருக்கு மாற்ற முன்வந்தால் அதை நான் பெரிதும் வரவேற்பேன் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் *12-45*

2003 மார்ச் 25] [திரு. வி.கே. லட்சுமணன்]

அரசு ஊழியர்களுக்கு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் 3 சதவீதம் கூடுதல் அகவிலைப்படி ரொக்கமாகக் கொடுக்க முன் வந்திருப்பதை நான் உண்மையாகவே வரவேற்கிறேன். ஆனால், நடுத்தர மக்களைப் பாதிக்கிற முறையிலே 430 கோடி ரூபாய்க்கு இங்கே வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. தொலைபேசி, செல்போன் வாடகைக்கு வரி, வீட்டு மின் கட்டணத்திற்கு 5 சதவீத விற்பனை வரி, கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்களுக்கு வரி, பழைய வாகனங்களுக்கு பசுமை வரி, பெட்ரோல், டீசல் ஆகியவற்றுக்கு வரி என்றெல்லாம் 430 கோடி ரூபாய்க்குப் புதிய வரிகள் விதிக்கப்பட்டிருப்பது குறிப்பாக நடுத்தர மக்களைப் பெரிதும் பாதிக்கும் என்று நான் நம்புகிறேன்.

பசுமை வரியைப் பொறுத்தமட்டிலே, அந்த நிறம் ஒரு பிரச்சினை அல்ல. ஆனால் அந்த வரியைப் போடுவதனாலேயே சுற்றுப்புறச் சூழல் கெடுவது எப்படித் தவிர்க்கப்படும் என்று எனக்குத் தெரியவில்லை. பணம் கட்டப்படுவதனாலேயே அந்த pollution தவிர்க்கப்படுமா என்று எனக்குப் புரியவில்லை. அதை நிதியமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Motor Vehicle Inspectors, R.T.O's மூலம் Pollution Control Board மூலம் அந்த மாசுக் கட்டுப்பாட்டு விதிகளை நடைமுறைப்படுத்தி, மாசினால் ஏற்படுகின்ற பின்விளைவுகளைத் தவிர்க்க தக்க நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது; எடுத்து வரும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** பொதுவாக நாங்கள் ஆளுநர் உரைக்கு வரும்போதெல்லாம் மிகுந்த கனவோடு வருவோம். இந்த ஆளுநர் உரையிலே நிறைய நீர்ப்பாசனம் பற்றி, பல பெரிய தொழிற்சாலைகள் பற்றித் திட்டங்கள் இருக்கும் என்ற கனவோடு வருவோம். ஒருவேளை அவை அதிலே குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால், எங்கள் ஊருக்குத் திரும்பிப் போகின்றபோது மக்களுக்குச் சொல்வோம், ஆளுநர் உரை மட்டும் தானா, பின்னாலேயே நிதிநிலை அறிக்கை வருகின்றது; அதிலே இவை எல்லாம் சொல்லப்படும் என்று சொல்லி அவர்களைச் சமாதானப்படுத்துவது வழக்கம். ஆனால், ஆளுநர் உரையிலேயும் இல்லாமல், சென்ற முறை தாங்கள் அளித்த பட்ஜெட்டிலேயும் இல்லாமல் ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத்

[திரு. வி.கே. லட்சுமணன்] [2003 மார்ச் 25

திட்டம்தான் நம்முடைய திருப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த அவிநாசி-அத்திக்கடவு குடிநீர் வழங்கல் திட்டம். அதற்கு 270 கோடி ரூபாய் ஒதுக்கப்படுவதாகச் சொல்லி, பிறகு சென்ற பட்ஜெட்டிலே பக்கம் 23-லே பத்தி 53-லே அது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்.

இது தவிரவும் நீர்ப் பாசனத்திற்காக நிறையத் திட்டங்கள்; தமிழ்நாட்டிலே நாம் மிகுந்த கவனத்தோடு நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள் இருக்கின்றன. அச்சன்கோவில்-பம்பாவைப் பற்றியோ, பாண்டியாறு-புன்னம்புழாவைப் பற்றியோ, மேல் பவானி பற்றியோ ஆளுநர் உரையிலேயும் இல்லை, இந்த நிதிநிலை அறிக்கையிலேயும் இல்லை என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவை அனைத்திற்கும் மேலாக, கோவை மாவட்டத்திற்கு ஏற்பட்டிருக்கிற மிகப் பெரிய பிரச்சினை, முக்காலி பிரச்சினை. அதாவது, மேல் பவானி நதியிலே சிற்றணை கட்டி, அந்தத் தண்ணீர் மேல் பவானியிலிருந்து பவானிசாகருக்கு வராமல் தடுப்பதற்கு கேரள அரசு முற்பட்டிருக்கிறது. அதைத் தடுத்து முதன்முதலாக--நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்--காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் தீர்மானம் போட்டிருக்கிறது. அந்தத் தீர்மானத்தை நான்தான் முன்மொழிந்தேன், எங்கள் அரசுக்கு எதிர்ப்பாக. ஆக, அந்தத் தீர்மானத்தைப் போட்ட பின்னால்கூட, தமிழக அரசு அந்தச் சிற்றணை கட்டுவதைத் தடுப்பதற்காக இதுவரை என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? அல்லது, பாண்டியாறு-புன்னம்புழா எப்போது...

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் கூறியபடி கேரள அரசு அட்டப்பாடி பள்ளத்தாக்கில், அதாவது மண்ணார்க்காடு தாலுகாவில், முக்காலி கிராமத்திற்குப் பக்கத்தில் வழிந்தோடி வந்து கொண்டிருக்கின்ற பவானி ஆற்றின் குறுக்கே 2.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பணியைச் செய்ய ஆரம்பித்தது. இச்செய்தியைக் கேள்விப்பட்ட உடனேயே இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 26-12-2002-ல் மத்திய அரசு தலையிட வேண்டுமென்று ஒரு கடிதத்தினை எழுதினார்கள். மீண்டும்

ALONE TRIUMPHS

தமிழக அரசின் சார்பாக 6-1-2003 அன்று காவிரி நடுவர் மன்றத்தின் முன், காவிரி நீரைப் பகிர்ந்து கொள்வது சம்பந்தமான வழக்கு நடுவர் மன்றத்தில் உள்ளதால், பவானி ஆற்றில் முக்காலி கிராமத்தில் கேரள அரசு தடுப்பணை கட்டும் திட்டப் பணிகளை நிறுத்தி வைக்குமாறு கோரி மனுதாக்கல் செய்யப்பட்டது. இம்மனுவை விசாரித்த காவிரி நடுவர் மன்றம் மீண்டும் 6-3-2003 அன்று கூடும் வரையில் மேலும் இப்பணியைத் தொடரக் கூடாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. மீண்டும் இவ்வழக்கினை காவிரி நடுவர் மன்றம் 7-3-2003 முதல் 13-3-2003 வரை விசாரித்திருக்கின்றது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட பிறகு, இவ்வழக்கிற்கான தீர்ப்பினை ஒத்திவைத்துள்ளது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இச்செய்தியைக் கேட்டவுடனேயே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தீவிர முயற்சியின் காரணமாகத்தான் அங்கே கேரள அரசின் தடுப்பணை கட்டுகின்ற திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-50

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முக்காலிக்குப் போயிருந்தேன். முக்காலி என்பது Silent Valley-யினுடைய அருகிலே இருக்கிற ஒரு பகுதியாகும். அந்த முக்காலியிலேதான் பவானி ஆறு ஓடிக்கொண்டிருக்கின்றது. நான் போய் பார்த்தபோது, ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய் அளவிற்கு செலவு செய்து அங்கே இருக்கிற கற்பாறைகளையெல்லாம் blast செய்து அவர்கள் கால்வாய் வெட்டிவிட்டார்கள். பருவ மழை தொடங்குவதற்கு முன்பாக அதைக் கட்டி முடித்துவிட வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே, இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா, இல்லையா என்பதைத் தயவுசெய்து நாம் கவனிக்க வேண்டும்.

நான் உங்களுக்குச் சான்றாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற முறை இதே முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, கூடலூருக்கு அருகிலே தேவாலா என்ற இடத்திலே தமிழக அரசுக்குத் தெரியாமல் கேரள அரசு ஒரு Test bore போடுவதற்கு டெண்டர் விட்டார்கள். அந்த எடுத்தவர் என்னிடத்திலே வந்தார். அந்த டெண்டர்

[திரு. வி.கே. லட்சுமணன்] [2003 மார்ச் 25

பாரத்திலே தலைப்பு என்ன குறிப்பிடப்பட்டிருந்தது என்று சொன்னால், Modified Pandiar—Punnambuzha Hydro-electric Scheme என்று குறிப்பிடப்பட்டிருந்தது. நான் உடனே இந்த டெண்டர்படி இந்த Test bore போடப்பட்டு, இது நிறைவேறும் என்று சொன்னால், நமக்குத் தண்ணீரும் கிடைக்காது, மின்சாரமும் கிடைக்காது என்று சட்டமன்றத்திலே கவன ஈர்ப்பு அறிவிப்பு கொண்டு வந்தபோது, அன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அதை நிறுத்தி வைத்தார்கள். ஆக, அதைப் போலவே இதுவும் ஒரு பெரிய ஆபத்து. இதை நாம் கண்டிப்பாகத் தடுக்கவில்லை என்று சொன்னால், பவானி ஆறு வற்றிவிடும். கோவை மாவட்டத்தைக் காட்டிலும் நம்முடைய ஈரோடு மாவட்டம்தான் பெரிய அளவிலே பாதிக்கப்படும் என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அண்மையிலே கோவையிலே இந்த சங்கனூர் பள்ளம்; சங்கனூர் பள்ளம் நீர் கோவை நகருக்குள்ளே புகுந்து ஏராளமான சேதத்தை விளைவித்து வருகிறது. ஆனால், இந்தப் பள்ளத்தின் நீரை சின்னவாடிப்பட்டு குளத்திற்குத் திருப்புவதற்கு மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே 5 கோடி ரூபாயிலே ஒரு குளம் வெட்டப்பட்டது. இன்று வரை அந்தக் குளம் முழுவதுமாக நிரம்பவில்லை. அது நிரம்ப வேண்டும் என்று சொன்னால் அந்தக் குளத்திற்கு வருகிற ஊற்றுக் கால்வாயின்—Supply canal—அகலத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று பொதுப்பணித் துறையை நான் பலமுறை கேட்டிருந்தேன். இருந்தும்கூட, அந்த அவர்கள் செய்யவில்லை. அது செய்யப்படும் என்று சொன்னால், ஒன்று அந்தக் குளம் நிரம்பும்; இரண்டாவதாக கோவை நகரத்திற்குள்ளே ஏற்படுகிற அந்தச் சேதம் தவிர்க்கப்படும் என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்ததாக, கிருஷ்ணா நீர் எந்த அளவிற்கு நமக்கு வந்திருக்கிறது. எவ்வளவு டி.எம்.சி. வந்திருக்கிறது என்ற இந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 மணித்துளிகளுக்குள் பேசி முடியுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** 5 நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். கிருஷ்ணா, வீராணம் அதைப் பற்றி எல்லாம் இதில் ஒன்றும் குறிப்பு இல்லை. அவை என்னவாயிற்று என்று சொன்னால் மட்டும் போதும். நான் குறையாகச் சொல்லவில்லை. இது தவிர, கோவையிலே வெடிகுண்டு வீசப்பட்டு...

2003 மார்ச் 25]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீராணம் திட்டம் என்னவாயிற்று, கிருஷ்ணா நதி நீர் திட்டம் என்னவாயிற்று என்று கேட்டார். வீராணம் திட்டத்திற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடந்த மாதம்தான் அந்தத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் வேகமாக நிறைவேறி வருகின்றன. கிருஷ்ணா நதி நீரைப் பொறுத்தவரை கடந்த முறை ஆளுநர் உரைக்காகக் கூட்டப்பட்ட சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே இதற்கான விளக்கத்தை நான் அளித்தேன். தற்போது ஆந்திராவிலேயே போதுமான தண்ணீர் இல்லை. அங்கே ஜூன், ஜூலை மாதங்களில் பருவ மழை பெய்து, அவர்களுக்குத் தண்ணீர் வந்தால்தான் அவர்கள் நமக்கு கிருஷ்ணா நதி நீரைக் கொடுக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் கண்டலேறுவிலிருந்து தண்ணீர் வரப் போகிறதா அல்லது நேரடியாக கிருஷ்ணாவிலிருந்து வரப்போகிறதா என்பதைத்தான் நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீசைலத்தில் தண்ணீர் இருந்தால்தான் அங்கேயிருந்து சோமசீலாவிற்கு தண்ணீர் வர முடியும். சோமசீலாவிற்குத் தண்ணீர் வந்தால்தான் அங்கேயிருந்து கண்டலேறுவிற்கு வர முடியும். கண்டலேறுவிற்குத் தண்ணீர் வந்தால்தான் இங்கே பூண்டிக்கு வர முடியும். இப்போது ஸ்ரீசைலத்திலேயே தண்ணீர் இல்லை. மழை பெய்தால்தான் வரும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நேரத்தின் அருமை கருதி நான் முக்கியமான ஒரு செய்தியை மட்டும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு முக்கியமாகப் பேசப்படுகிற பிரச்சினை இந்த மின்சாரப் பிரச்சினை. மின்சாரத்தைப் பொறுத்தமட்டிலே, முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், ஒட்டுமொத்தமாக, ஏறத்தாழ 16 இலட்சம் பேர் இலவச மின்சாரத்தை அனுபவித்து வருகிறார்கள். இதிலே 9 இலட்சம் பேர் சிறு மற்றும் குறு விவசாயிகள்; மீதமுள்ளவர்களை என்ன விவசாயிகள் என்று பெயரிடுவார்களோ எனக்குத் தெரியாது. ஆனால் என்னைப்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[திரு. வி.கே. லட்சுமணன்] [2003 மார்ச் 25

பொறுத்தமட்டிலே, தமிழ்நாட்டிலே 'சிறு'வும் கிடையாது; 'குறு'வும் கிடையாது. சிறு விவசாயி சிறிய கடன்காரன். குறு விவசாயி—பெரிய விவசாயி பெரிய கடன்காரன். அவ்வளவுதானேயொழிய தமிழ்நாட்டிலே அப்படி ஒரு விவசாயிப் பிரிவே இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும்கூட, நான் சொல்லிக்கொள்ள விரும்புவது எல்லாம், இந்த 9 இலட்சம் விவசாயிகளுக்கு 100 கோடி ரூபாயை, நீங்கள் அரசு சார்பிலே இந்தத் துறைக்குக் கொடுக்கின்றபோது, ஒட்டுமொத்தமாக எத்தனை கோடி செலவாகின்றது? விவசாயிகள் சங்கக் கணக்குப்படி, 250 கோடி ரூபாய் இருந்தால் போதும் என்று சொல்கிறார்கள். ஆனால் நீங்கள் சொல்கிறீர்கள் 2,600 கோடி ரூபாய் ஒட்டுமொத்தமாகச் செலவாகிறது என்று. நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்த 2,600 கோடி ரூபாயிலே 100 கோடி ரூபாயைக் கழித்துவிட்டால், 2,500 கோடி ரூபாய் இந்தப் பெரிய விவசாயிகளுக்கா? அதுதான் Cross subsidy. அப்படியில்லை என்று சொன்னால், Cross subsidy-யிலே என்னென்ன அடங்கும் என்பதைத் தாங்கள் விளக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோடு பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) திரு. வி.கே. லட்சுமணன், இதோடு பேசி முடித்துவிடுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Cross subsidy என்றால் என்ன, அதில் என்னென்ன அடங்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். மின்சார ஒழுங்குமுறை ஆணையம் சராசரி ஒரு யூனிட்டிற்கு ஏற்படக்கூடிய உற்பத்திச் செலவு 3 ரூபாய் 7 பைசா என்று குறிப்பிட்டுள்ளது. மின்சார ஒழுங்குமுறை ஆணையமே சில நுகர்வோர்களுக்கு இந்த உற்பத்திச் செலவைவிடக் குறைவாக நிர்ணயித்துள்ளது. அதேபோல், வேறு சில நுகர்வோர் பிரிவுகளுக்கு இந்த உற்பத்திச் செலவைவிடக் கூடுதலாக நிர்ணயித்துள்ளது. உற்பத்திச் செலவைவிடக் குறைவாக நிர்ணயிக்கப்பட்டுள்ள நுகர்வோர் பிரிவுகள் பின்வருமாறு அமைகின்றன:

அதாவது, விவசாய பம்ப் செட், இரண்டு மாதத்திற்கு 600 யூனிட் வரை பயன்படுத்தும் வீட்டு பயனீட்டாளர்கள், விசைத்தறிகள் போன்றவை. வேறு சில நுகர்வோர் பிரிவுகள், அதாவது, தொழில் துறை, வர்த்தகம் மற்றும் வணிக ரீதியில் செயல்படும் நுகர்வோர்

பிரிவுகளுக்கு உற்பத்திச் செலவைவிட சற்றுக் கூடுதலாகக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆகவே, சில நுகர்வோர்களிடம் இருந்து, உற்பத்திச் செலவைவிடக் கூடுதலாக வசூலிக்கப்பட்டு, வேறு சில நுகர்வோர்களிடம் இருந்து, உற்பத்திச் செலவைவிடக் குறைவாக வசூலிக்கப்படும் இழப்பு சரிக்கட்டப்படுகின்றது. இதையேதான் Cross subsidy என்று சொல்வார்கள். இதனை ஒழுங்குபடுத்த வேண்டிய பொறுப்பு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மட்டுமே உள்ளது. எந்த அளவிற்கு Cross subsidy இருக்க வேண்டும், அதனை எந்த அளவிற்குக் குறைக்க வேண்டும் என்பதை எல்லாம் ஒழுங்குமுறை ஆணையம்தான் நிர்ணயிக்க வேண்டும். அரசு இதில் தலையிட இயலாது. அரசு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு எந்தவிதமான சுமையும் ஏற்படாத வண்ணம் ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயிக்கும் கட்டணத்தை நேரடியாகவே அவர்களிடம் இனிமேல் செலுத்திவிடும்.

ஒழுங்குமுறை ஆணையம் மின்சார வாரியத்தின் செலவினங்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்றும் எடுத்துக் கூறியுள்ளது. இவை உற்பத்திச் செலவில் குறைப்பு, மின்சார விநியோகத்தில் ஏற்படும் இழப்பில் குறைப்பு, மற்றும் திருட்டு போன்றவற்றைத் தடுப்பதாகும். இதனை மின்சார வாரியம் முனைப்புடன் செயல்படுத்த வேண்டும். இதனை நாங்கள் கண்காணிப்போம்.

*பிற்பகல் 1-00*

**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை ஆணையம் கொடுத்திருக்கிற அறிக்கைக்கும் மின்சார வாரியம் கொடுத்திருக்கிற அறிக்கைக்கும் மிகுந்த வேறுபாடு இருக்கிறது. இந்த மீட்டர் பொருத்துகின்ற வரை இந்த காம்பவுண்டிங் சிஸ்டம் இருக்கும். மீட்டர் பொருத்தப்பட்ட பின்னாலே, ஒரு யூனிட்டுக்கு 20 பைசா என்ற முறைதான் கடைப்பிடிக்கப்படும் என்று தெளிவாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். நான் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புவது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் எந்த முரண்பாடும் இல்லை. மீட்டர் பொருத்தப்படும் வரை என்று குறிப்பிட்டிருப்பது சரிதான். இன்னும் மீட்டர் பொருத்தப்படவில்லையே?

**திரு. வி.கே. லட்சுமணன்:** கோவை மாநகராட்சியைப் பொறுத்தமட்டிலே, நீண்டகாலமாக இந்தக் கட்டட ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** கட்டட வரைமுறைச் சட்டம் என்பது அந்த மக்களைப் பெரிதும் பாதித்திருக்கிறது. அதனாலே மாநகராட்சிக்கு வருமானம் பெரிய அளவிலே குறைந்திருக்கிறது. எனவே, அந்தக் கட்டட வரைமுறைச் சட்டத்தை விரைவாகப் பரிசீலித்து ஒரு நல்ல முடிவை எடுப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை நகரக் காவல் துறை சார்ந்த சிறந்த காவலர்கள், வெடிகுண்டு வெடித்த காலத்திலே வீர தீரச் சாகசச் செயல் புரிந்திருக்கிறார்கள். அந்தக் காவலர்களுக்கு இதுவரை பதவி உயர்வும் இல்லை, அவர்களுக்கு எந்தவிதமான விருதுகளும் வழங்கப்படவில்லை. எனவே, அப்படிப்பட்ட காவலர்களைக் கண்டறிந்து அந்தக் காவலர்களுக்கு பதவி உயர்வும், விருதும் வழங்க அரசு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சோமனூர், திருப்பூர் போன்ற பகுதிகளிலே ஏராளமாக விசைத்தறிகள் இருக்கின்றன. Textile-க்காக 10 சதவீதம் கலால் வரி அதிகப்படுத்தப்பட்டிருக்கிற காரணத்தினாலே அந்தப் பகுதியிலே இருக்கிற விசைத்தறிகள் மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அந்தக் கலால் வரியைக் குறைப்பதற்கு மைய அரசோடு தொடர்பு கொண்டு, ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் எங்களுடைய கருத்துகளை எடுத்துக்கூற வாய்ப்பளித்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்களது இனமான காவலர், அரசியல் பேராசிரியர் டாக்டர் ஐயா அவர்களுக்கும், எங்களது சட்டமன்றத் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும் நன்றியைக் கூறி, இந்தப் பொது விவாதத்தில் என்னுடைய கருத்துகளைக் கூறுவது கடமை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் ஆய்வு அடிப்படையிலான Agri-clinical அணுகுமுறை மூலம் ஆதாயம் தரத்தக்க பொருளாதார நடவடிக்கைகளைக் கொண்டுவர வேண்டும் என்பது பாராட்டுக்குரியது.

அதேபோல, கிராம ஊராட்சிகளில் சிறு குளங்கள் மற்றும் 100 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டினைக் கொண்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலுள்ள ஏரிகள் ஆகியவற்றை தூர்வாரி மேம்படுத்த, வருமாண்டில் ரூபாய் 50 கோடி செலவிலான திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும் என்பதை வரவேற்கிறேன்.

இந்த நேரத்திலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரவு-செலவுத் திட்டத்தில் இதை இதைச் செய்வோம் என்று அதற்கான செலவுத் தொகை ஒதுக்கப்பட்டுள்ள விவரங்கள் தரப்படுவதற்குப் பதிலாக, பெரும்பாலானவை செயல்படுத்தி வருகிறோம்; எதிர்பார்க்கிறோம்; கருதுகிறோம்; முடிவு எடுக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. எதுவும் வரையறுத்துச் சொல்லப்படாமல் அறிவிப்புகளாக இருக்கிறது. வரையறுக்கப்பட்ட செயல் திட்டங்களாக பெரும்பாலானவை இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 385 ஒன்றியங்களில், ஒன்றியம் ஒவ்வொன்றிலும் ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் நிறைவேற்ற உள்ளோம் என்ற அறிவிப்பு இடம்பெற்றுள்ளது. 4 ஒன்றியங்களில் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும், 33 ஒன்றியங்களில் ஆய்வில் உள்ளதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு கடந்த ஆண்டு இவ்வளவு பெரிய அறிவிப்பே தேவையில்லை. அறிவிப்பை எதிர்பார்த்து மக்கள் ஏமாந்து போகும் நிலைதான் உருவாகியுள்ளது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையில் அளித்த விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் கவனமாகக் கேட்கவில்லை என்று தெரிகிறது. அவர் சொல்வதுபோல் 33 ஒன்றியங்களில் திட்டங்கள் ஆய்வில் இல்லை; 33 ஒன்றியங்களில் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுவிட்டது. அந்த 33-ல் 4 ஏற்கெனவே தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. 250 ஒன்றியங்களில் திட்டங்கள் ஆய்வில் இருக்கின்றன.

பிற்பகல் 1-05

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு 5 ஆண்டுகளுக்குண்டான மொத்த திட்ட ஒதுக்கீடு ரூ.40,000 கோடி என அறிவிக்கப்பட்டுள்ளது. அதில், 2001-2002ஆம் ஆண்டுக்கு ரூ.6,040 கோடி திட்ட ஒதுக்கீடு என்ற அரசின் ஒப்புதலை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை என்றும், அதனை ரூ.5,200 கோடி எனக் குறைக்க வேண்டிய கட்டாயத்திற்கு அரசு உள்ளாக்கப்பட்டது என்பதை உறுப்பினர்கள் நன்கு அறிவர் என்று பக்கம் II-ல் சொல்லப்பட்டிருக்கிறது. இது என்ன என்றும், ஏன் நிறைவேற்ற முடியவில்லை என்றும் தெளிவுபடுத்த வேண்டுகிறேன். மேலும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலமான முதல் 3 ஆண்டுகளில் ரூ.5,200 கோடி, ரூ.5,750 கோடி. . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் படிக்கின்றபோதே காரணத்தையும் படித்துவிட்டார். மைய அரசு போதிய நிதியினைத் தராத காரணத்தால் ஈடேற்ற முடியவில்லை என்று தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அதுதான் உண்மை நிலை.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** ஆக, 3 ஆண்டுகளில் 17,950 கோடி ரூபாய்தான் திட்ட முதலீடாகக் காட்டப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.22050 கோடி எஞ்சியிருக்கிற 2 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட வேண்டும். 3 ஆண்டுகளுக்கு 17,950 கோடி ரூபாய், 2 ஆண்டுகளுக்கு 22,050 கோடி ரூபாய் என்பது ஒரு சீரான போக்குமுறையைக் காட்டவில்லை. ஏன் இந்த நிலைமை என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, கம்பிவடத் தொலைக்காட்சி Cable TV இணைப்புகளுக்கு விதிக்கப்படும் வரியை உள்ளாட்சி அமைப்புகளே விதித்து வந்தன. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அரசே இனி இந்த வரியை வசூலிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வருவாய் ரூ.30 கோடி கிடைக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2002-2003 ஆம் ஆண்டில் பெறப்பட்ட, வரி வருவாய்க்கு நிகரான தொகை ஆண்டு மானியமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி என நான்கு வகைப் பிரிவுகளில்

2003 மார்ச் 25] [திரு. அ.இரா. மலையப்பசாமி]

எத்தனை பேர்கள் இணைப்புகளைத் தருபவர்கள் உள்ளார்கள்? அவர்களால் கிடைக்கப்பெறும் தொகை எவ்வளவு என்ற விவரங்கள் இந்த அவைக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இதனால், உள்ளாட்சிகளுக்கு இழப்பு என்றால், இது கைவிடப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்த மாமன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. எந்த அளவிற்கு வருமானம் உள்ளாட்சிகளுக்கு Cable TV மூலமாக வந்து கொண்டிருக்கிறதோ, அந்தப் பணத்தை உள்ளாட்சிகளுக்கே அரசு தந்துவிடும் எனத் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** நன்றி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூ.1,380.48 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது போதாது. உலக சுகாதார நிறுவனம்-World Health Organisation-சொல்லியுள்ள விவரப்படி, 600 நபர்களுக்கு ஒரு மருத்துவர் இருக்க வேண்டும். ஆனால் 6.20 கோடி மக்கள் தொகை கொண்ட தமிழகத்தில் சுமார் 8,719 மருத்துவர்கள் உள்ளதாக அரசு புள்ளி விவரம் சொல்கிறது. இதன்படி 6,900 நபர்களுக்கு ஒரு மருத்துவரே உள்ளார். இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உயர்த்தப்படவுள்ள தமிழகம் World Health Organisation தரத்திற்குச் சென்றடைய வேண்டும்.

அதேபோல தமிழகம் முழுவதும் உணவுப் பூங்கா அமைக்கப்பட வேண்டும் என்று சென்ற கூட்டத் தொடரிலே விவசாயத் துறை மானியக் கோரிக்கையின்போது தமிழக அரசுக்கு சட்டமன்றத்தின் மூலமாக வேண்டியிருந்தேன். அதற்கேற்ப உணவுப் பூங்காக்கள் ஏற்படுத்த உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், அதற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கும், விநியோகிக்கப்படும் மின்சாரத்திற்கும் இடையில் கணக்கில் வராமல், காணாமல் போகும் சுமார் 8,750 மெகா யூனிட் மின்சாரத் திருட்டை கண்டுபிடித்து, மின் வாரியத்தின் நஷ்டத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ.இரா. மலையப்பசாமி] [2003 மார்ச் 25

2000ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறை அறிக்கையின்படி, இலவச மின்சாரம் வழங்குவதற்குத் தகுதியற்றவர்கள் என்று 504 பேரைக் கண்டறிந்தார்கள். அவர்கள் பயன்படுத்தி வந்த மின்சாரத்திற்கான தொகை மட்டும் 7.98 கோடி ரூபாய். அந்தத் தகுதியற்றவர்கள் யாரென்றால், பெரிய நிலச்சுவான்தாரர்களும், தனியார் அமைப்புகளும்தான். இதுபோன்ற நஷ்டங்களைத் தவிர்க்க இந்த அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவில் தேசிய இயற்கை இடர்ப்பாடு நிதி அமைக்கப்பட்டுள்ளது போல, மாநில அளவில் தமிழக இயற்கைச் சீற்ற நிவாரண நிதி Tamil Nadu Natural Calamity Relief Fund ஒன்று உருவாக்கப்பட்டு, மத்திய அரசிடமிருந்து குறிப்பிட்ட சதவீதத்தை ஒவ்வோர் ஆண்டும் பெறவேண்டும். அதேபோல மாநில அரசு தனது நடப்புச் செலவில் 2 சதவீதத்தை இந்த இயற்கைச் சீற்ற நிதிக்குப் பங்களிக்க வேண்டும். இதில் கிடைக்கும் தொகை வறட்சி நிவாரணப் பணிகளுக்காகச் செலவிடப்பட வேண்டும் என்று இந்த நோக்திலே எனது கோரிக்கையாக வைத்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அதைப்போல மொத்தமுள்ள 1.59 இலட்சம் பயன்படுத்தப்படாத கிணறுகள் மழை நீர்ச் சேகரிப்பிற்காகப் பயன்படுத்தப்படும் என்ற திட்டத்தை வரவேற்கின்றேன். இந்த நோக்திலே தூர் வாரப்படாமல் உள்ள ஏரி, குளங்களில் உள்ள வண்டல் மண்ணை அகற்றுவதற்காக, அப்பகுதி மக்களே தேவைக்கேற்ப அள்ளிக்கொள்ள அரசு அனுமதியளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில், மாநில அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு, தனது சொந்த வருவாயில் அளிக்கும் சதவீதம் கர்நாடகாவில் 34, கேரளாவில் 40, மேற்கு வங்காளத்தில் 50 ஆக உள்ளது. வளர்ந்து வரும் இந்தச் சூழலில் நமது அரசு 25 சதவீதமாக அதை உயர்த்த வேண்டும்.

மத்திய அரசு இரயில்வே துறைக்குத் தனியாக வரவு-செலவுத் திட்ட அறிக்கை கொடுப்பது போல தமிழக அரசு முதன்மைத் துறையான வேளாண்மைத் துறைக்குத் தனியாக ஒரு நிதிநிலை அறிக்கை தாக்கல்

செய்ய வேண்டும் என்ற புரட்சிகரமான ஒரு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப் பற்றாக்குறையுள்ள நிலையில் குறைந்தளவு நீர் மட்டுமே தேவைப்படும் கூடுதல் விலை மதிப்புள்ள வணிகப் பயிர்களைப் பயிரிட விவசாயிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித் துளிகளுக்குள் பேசி முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** குளிரூட்டப்பட்ட கிடங்கு வசதிகளைக் கிராமங்கள்தோறும் அமைத்து, காய்கறிகள், பழங்களுக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் உதவியோடு செயல்படுத்தப்படும் நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டம்-2-ஐத் தொடங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 5.2 மில்லியன் செம்மறி ஆடுகளும், 6.2 மில்லியன் வெள்ளாடுகளும் உள்ளன. உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்படும் ஆடுகள் எளிதில் நோய்வாய்ப்பட வாய்ப்புள்ளதால், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் முனைப்புடன் நோய்த் தடுப்புமுறைகள் செயல்படுத்தப்பட வேண்டும்.

அதைப்போல மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க அரசு பல நல்ல திட்டங்களை நிறைவேற்றி வருகின்ற வேளையில், ஏரி, குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளைக் கட்சிப் பாகுபாடின்றி அகற்றிட ஆவன செய்ய வேண்டும்.

மழைநீர்ச் சேகரிப்புத் திட்டத்தை அமல்படுத்திவரும் தமிழக அரசு நகர பொதுக் கட்டடங்கள், வீடுகள் அனைத்திலும் எதிர் சவ்வூடுமுறை மூலம் நீரைச் செறிவூட்டும் செயல்முறைக்கலன்கள் Reverse Osmosis Plants அமைக்க திட்டங்கள் வரையப்பட வேண்டும்.

அதைப்போல, உடல் ஊனமுற்றோருக்குத் தமிழக அரசு கொடுக்கின்ற வேலை வாய்ப்பில் 1 சதவீதம் ஒதுக்கீடு கட்டாயப்படுத்தப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக எனது கபிலர்மலை தொகுதியில் உள்ள கபிலர்மலை ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும்.

நாமக்கல் மாவட்டத்திற்கும் கரூர் மாவட்டத்திற்கும் இடையில் உள்ள காவிரி ஆற்றுப் பாலத்தில் மின் விளக்கு வசதி இல்லாத காரணத்தால் விபத்துகளில் மாதம் இரண்டு உயிர்ச் சேதங்கள் ஏற்படுகின்றன. இதற்கு மின் விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். ஜேடர்பாளையம்-வேலூர் மோகனூர் சாலையைச் செப்பனிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கோரியும் இதுவரை எந்த வேலையும் நடைபெறவில்லை.

காவிரி பாலம், இரண்டு மாவட்ட காவல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதை, ஒரு மாவட்ட கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட வேண்டும்.

கரூர், காந்தி கிராமத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் 1989 ஆம் ஆண்டு ரூ.1,00,000-க்கு ஒதுக்கப்பட்ட H.I.G. பிரிவு வீடுகள் மாதம் 1,250 வீதம் 14 ஆண்டுகள் கட்டி முடிக்கப்பட்ட பின்பும் தற்சமயம் மீண்டும் சுமார் 2.5 இலட்சம் கட்டினால் மட்டுமே வீட்டின் பத்திரம் கிடைக்கக்கூடிய சூழ்நிலை உள்ளது. இதுபற்றி ஆய்ந்து நல்ல முடிவை எடுத்துவிட்டு ஒதுக்கீட்டுதாரர்களுக்குப் பத்திரம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

• **திரு. அ.இரா. மலையப்பசாமி:** ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசி வாக்கியத்தைச் சொல்லி முடியுங்கள்.

2003 மார்ச் 25]

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** முடித்துவிடுகிறேன். இறுதியாக,

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்;
பயிற்றுப் பல கலை—கல்விதந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்;
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்—
கனவு மெய்ப்பட வேண்டும்;
கைவசமானது விரைவில் வேண்டும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மலையப்பசாமி, பாரதியார் பாடலையாவது ஒழுங்காகப் படித்துவந்து சொல்ல வேண்டாமா?

**திரு. அ.இரா. மலையப்பசாமி:**

தனமு மின்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்

என்ற பாரதியின் விருப்பங்கள் நிறைவேறும் வகையில் வரவு-செலவுத் திட்டம் அமைய வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

பிற்பகல் 1-15

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் என்பது கொஞ்சம்தான் இருக்கிறது. சற்று நேரம்கூட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 மணித்துளிகள்தான் எல்லோருக்கும். இதனால், இப்போது பேசி முடியுங்கள். இன்னும் நிறைய நேரம் இருக்கிறது உங்களுக்கு.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரவு-செலவுத் திட்டம் என்பது ஒரு கடுமையான வறட்சியான காலகட்டத்திலேயிருந்து வந்திருக்கிற வரவு-செலவுத் திட்டம். அந்த வறட்சியின் தாக்கம் இந்தத் திட்டத்திலும் உண்டு என்பதை முதலில் நான் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. டி. மணி] [2003 மார்ச் 25

இரண்டாவது, நம்முடைய மத்திய அரசிடமிருந்து நிறைய நிதியைக் கேட்டோம். அதுகுறித்து எல்லோரும் பேசிவிட்டார்கள். அவர்கள் தந்தது கொஞ்சம். ஆனால், மத்திய அரசுக்கு நம்முடைய மாநிலத்திலிருந்து நாம் எந்த வகையிலே நிதியை உண்டாக்கிக் கொடுக்கிறோம் என்பதற்கு ஒன்றிரண்டு உதாரணங்கள். ஒன்று, நம்முடைய மணல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்றது. அதிலே, மத்திய அரசுக்கு எவ்வளவு நிதி நம்மாலே கிடைக்கிறது என்ற விவரங்கள் வேண்டும். இரண்டாவது, ஏறத்தாழ தமிழ்நாட்டில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான முந்திரித் தொழிலாளர்கள் முந்திரியை இன்று உற்பத்தி செய்து வருகிறார்கள். அதனுடைய பருப்பை வெளிநாடுகளுக்கு நாம் ஏற்றுமதி செய்கின்றோம். அதுவும் நம்முடைய தூத்துக்குடி ஹார்பர் மூலமாகக் கொஞ்சம் போகிறது; அப்புறம் கொச்சின் ஹார்பர் மூலமாகப் போகின்றது. அதிலே எவ்வளவு நிதி நம்முடைய மத்திய அரசாங்கத்திற்கு நம்மாலே கிடைக்கின்றது என்ற விவரம் நமக்குத் தேவை. ஏனென்றால், மத்திய அரசிடம் நமக்கு அதிகப்படியான நிதி வேண்டுமென்று கேட்டால், நிதிப் பற்றாக்குறை என்று பல காரணங்களைச் சொல்லித் தட்டிக் கழித்துவருகிறார்கள். எனவே, தமிழ்நாட்டுக்கான அதிகப்படியான நிதியை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கான ஏற்பாடுகள் எந்த வகையிலே செய்யப்படுகின்றன? இப்போது ஏற்றுமதி ஆகின்ற துணி; தையல் ஆடைகள், பின்னல் ஆடைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்றன. இதிலே எவ்வளவு வருகின்றது என்பதையும் கண்டறிவது, நம்முடைய மாநிலத்தினுடைய உரிமையைப் பெறுவதற்கு ஒரு நல்ல உதாரணமாக இருக்கும் என்பதை நான் இங்கே கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல, நான் இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றைச் சொன்னார்கள். 50 இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். அதிலே நாங்கள் அன்றைக்கு எங்களுடைய கருத்தைச் சொன்னோம். 10 ஏக்கர், 5 ஏக்கர் என்று சாதாரண ஏழை விவசாயிக்குக் கொடுத்தோமேயானால், 20 ஆயிரத்திற்கும் அதிகமான விவசாயிகள், ஏழை விவசாயிகளை நாம பாதுகாத்துக்கொள்ள முடியும். இப்போது இந்த அறிக்கையிலே இந்த நிலங்களைக் கொடுப்பது பற்றி வந்திருக்கிறது. 25 கோடி ரூபாய் நாம் கொடுப்பதாகக் கூறியிருக்கிறோம். இந்த 25 கோடி ரூபாயைச் சாமானிய விவசாயிகளுக்கு, ஏழை விவசாயிகளுக்கு நாம் கொடுத்து உதவுவோமேயானால், சுமார் 20 ஆயிரம் விவசாயிகளின்பால் நாம் வேறு கவலைகொள்ள வேண்டியது இல்லை.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் 25 கோடி ரூபாய் என்பது, சாதாரண ஏழை விவசாயிகளுக்குத்தான் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி. ஆனால், அந்தவகையிலே நாங்கள் வைத்திருக்கிற கோரிக்கை 10 ஏக்கர் ஒரு குடும்பத்திற்கு, 5 ஏக்கர் ஒரு குடும்பத்திற்கு என்ற வகையில் ஒரு போகம், இரு போகம் சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு நாம் இந்த உதவியையும் செய்து, இந்த நிலத்தையும் கொடுத்தால் ஏறத்தாழ 20 ஆயிரத்திற்கும் அதிகமான விவசாயிகள் பயன்பெறுவார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் இதுவரை பயன்படுத்தப்படாமலேயே இருந்தன. கிட்டத்தட்ட 56,000 ஏக்கருக்கும் மேற்பட்ட அரசு நிலங்களும் இதுவரை பயன்படுத்தப்படாமல் இருந்தன. ஆக, அந்த நிலங்களையெல்லாம் மேம்படுத்துவதற்காகத்தான் இந்தத் திட்டம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன விவரங்களுக்கு நன்றி. ஆனால், இன்னொன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புவது; தமிழ்நாட்டிலே நிலச் சீர்திருத்த மசோதா ஒன்றைப் பெருந்தலைவர் காமராஜருடைய காலத்திலே கொண்டு வந்தார்கள். அது அரைகுறையாக நிறைவேற்றப்பட்டது. ஆனால், அதற்குப் பின்னால் வந்த அரசுகள் இதுவரையிலும் அந்தத் துறையைப் பார்த்துக் கவனிக்கவில்லை. எனவேதான், அந்த நிலச் சீர்திருத்த மசோதா மூலமாக மீதி நிலங்களைக் கண்டறிவதன் மூலமாக சாமானிய விவசாயிகளை, விவசாயத் தொழிலாளிகளை, சிறு விவசாயிகளை நாம் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தரிசாக இருக்கின்ற நிலங்களை மேம்படுத்துவதற்காக எந்தத் தனி நபர்களுக்கும் இந்த நிலத்தைக் கொடுப்பதில்லை என்று ஏற்கெனவே ஒரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஏழையெளிய விவசாயிகளாக இருந்தால், அவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பினால், அவர்கள் சுய உதவிக் குழுக்களை அமைக்கலாம். சுய உதவிக் குழுக்கள் எல்லாம் சேர்ந்து ஒரு இணையம் அமைத்தால் அவர்களுக்கு இந்த நிலங்களை வழங்குவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை.

பிற்பகல் 1-20

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும், இந்த சுய உதவிக் குழுக்கள் என்று சொன்னால், நான் அதற்குள்ளே வருவதற்கு நேரமும் போதுமானதாக இல்லை. இந்த நேரத்தை நான் அதற்காகப் பயன்படுத்தவில்லை. என்னைப் பொறுத்தமட்டில், நான் தெரிந்துகொண்ட வரையில், அதை வேறுவிதமாகப் பயன்படுத்துகின்ற ஒரு சம்பிரதாயம் தமிழ்நாட்டில் இருக்கிறது. குறிப்பாக, நான் கண்டறிந்த உண்மை; ஒரு சுய உதவிக் குழு; தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்வதற்கென்று ஒரு யூனிட்டை வைத்திருக்கிறார்கள். ஆனால், அதை நடத்துவது யார் என்று கேட்டால் ஒரு தனி நபர். அவர்களுக்கு இதில் சம்பந்தமேயில்லை. அப்படி நிறைய முறைகேடுகள் அதற்குள்ளே இருக்கின்றன. அந்த விவரங்களுக்குள் நான் வரவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் இப்போதுதான் தொடங்கப்பட்டு இருக்கிறது. அதற்குள்ளாக முறைகேடுகள் நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை. மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், அவர்களுடைய தொகுதியிலேயே ஏழையெளிய விவசாயிகளை இணைத்து—ஆண்கள்கூட இதில் சேரலாம்—சுய உதவிக் குழுக்களை அமைத்து, பல சுய உதவிக் குழுக்களை ஒன்றாக இணைத்து ஒரு Federation அமைத்தால் அவர்களுக்கு நிச்சயமாக இந்தத் தரிசு நிலங்கள் வழங்கப்படும் என்ற உத்தரவாதம் அளிக்கிறேன்.

2003 மார்ச் 25]

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த விளக்கத்திற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் சுய உதவிக் குழுக்கள் சில மாதங்களுக்கு முன்னாலே பல பகுதிகளிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதை வைத்துக்கொண்டுதான் நான் இந்தத் தகவலைச் சொன்னேன்.

நம்முடைய அரசாங்க ஊழியர்களுடைய பிரச்சினை. அதில் அவர்களுக்குத் தர வேண்டிய பாக்கி அல்லது கொடுக்க வேண்டிய வகைகளைக் கொடுத்து, எந்த முறையிலே அவர்களைப் பாதுகாக்க வேண்டுமோ அந்த வகையிலே அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவேதான், தலைமைச் செயலகத்திலேயே நம்முடைய ஊழியர்கள் அரசுக்கு முன்னாலே இன்றைக்குப் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். எனவே, இவற்றைப் பரிவோடு அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய சாலைகளைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே 12 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்துவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். நம்முடைய ஒன்றியங்களை எடுத்துக்கொண்டால் அந்த ஒன்றியங்களிலே இருக்கின்ற சாலைகளை யாரும் பராமரிப்பது இல்லை. அதேநேரத்திலே ஒன்றியங்களிலே இருக்கின்ற சாலையானாலும் சரி, நெடுஞ்சாலையானாலும் சரி, அந்தச் சாலைகளிலே வரக்கூடிய பழுதுகளைப் போக்குவதற்கு நம்மிடம் 10 ஆயிரம் ஊழியர்கள் இருந்தார்கள். அவர்களை வெளியேற்றி விட்டீர்கள். இந்த நிலையில் நம்முடைய ஒன்றியங்களில் இந்தச் சாலைகளை ஒப்படைப்பதன் மூலமாக முழுமையாக அந்தப் பணிகள் நடக்குமா என்ற ஒரு சந்தேகம் ஏற்படுகின்றது. ஏனென்றால்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள அந்த அரசு முன்வராததால் உலக வங்கி தமிழ்நாட்டையே புறக்கணித்தது. இப்போது நாம் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைச் செயல்படுத்தி வருவதால், உலக வங்கியின் பார்வை மீண்டும் தமிழகத்தின்மீது விழுந்திருக்கிறது. இந்தப் பக்கம் திரும்பியிருக்கிறது. Road Sector Project என்று ஏற்கெனவே ஒன்று வகுக்கப்பட்டு உலக வங்கியின் நிதி கிடைக்காததால் அது கிடப்பில் போடப்பட்டது. இப்போது மீண்டும்

செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 மார்ச் 25

அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு உள்ளது. இந்த Road Sector Project-க்கு நிதி வழங்க உலக வங்கி முன்வந்துள்ளது. ஆகவே, இன்னும் சில..மாதங்களில் அந்த நிதியுதவி கிடைக்கும். சாலைகளை எல்லாம் செப்பனிடும் பணி வேகமாக நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தச் சாலைகள் சம்பந்தமாக உலக வங்கியினுடைய கடன் நமக்குக் கிடைக்கும், அதனால் நாம் நம்முடைய கிராமங்களைப் பூராவும் பாதுகாத்துக்கொள்ளலாம் என்ற நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கின்றோம். ஆனால், எத்தனை காலம் நாம் உலக வங்கியை நாடியிருப்பது? இன்றைக்கு ஏற்கெனவே சொன்னார்கள்....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு என்ன வழி இருக்கிறது தமிழ்நாட்டிற்கு? வேறு வழியிருந்தால், தாராளமாக மாண்புமிகு உறுப்பினர் கூறலாம்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரங்களைச் சொல்வதற்கு நம்முடைய இந்த நேரம், எனக்கு ஒதுக்கியிருக்கின்ற நேரம் போதுமானதாக இல்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசுக்கு ஆலோசனை கூறவேண்டுமென்பதற்காக பாட்டாளி மக்கள் கட்சியில் அவர்களாகவே, தனியாக ஒரு நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்து வைத்து இருக்கிறார்கள். அதைப்போல மாண்புமிகு உறுப்பினரின் கட்சியும் தனியாக ஒரு நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்து எங்களுக்கு வழங்கலாம்.

*பிற்பகல் 1-25*

**செல்வி க. பாலபாரதி:** எங்களுக்கு நேரம் இருந்தால், நிச்சயமாக வழியும் சொல்வோம், உறுதியாக.

**திரு. டி. மணி:** எங்களுடைய இயக்கத்தின் சார்பாக, எங்களுடைய கட்சியின் சார்பாக, இந்தியாவினுடைய பொருளாதாரம், தமிழகத்தினுடைய பொருளாதாரம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்காக எங்களுடைய வழிகாட்டுதல் அல்லது யோசனைகளை எல்லாம், இதற்கு முன்னாலே நாங்கள் சொல்லியிருக்கிறோம். எனவே, இப்போது இருக்கின்ற பிரச்சினை அதுவல்ல. உலகமயம்,

தாராளமயம், தனியார்மயம்; ஏற்கெனவே, இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் இந்த தேசத்தை ஆண்டுவந்த நேரத்தில்தான், தனியார் துறையிலே இருந்த வங்கிகளைத் தேசவுடைமையாக்கி, நாட்டுடைமையாக்கி, அதன்மூலமாக நம்முடைய மத்திய அரசுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் இலாபம் வருகின்ற ஒரு நடவடிக்கையை மேற்கொண்டார்கள். ஆனால், கடந்தகால ஆட்சி -- கடந்தகாலம் என்று சொல்லும்போது, மத்தியிலே இருக்கின்ற ஆட்சி -- அது பொறுப்பேற்றதற்குப் பின்னால், இலாபகரமாக இருக்கின்ற அந்தத் தொழில்களைக்கூட --முதலிலே நஷ்டம் என்று சொன்னார்கள்; விற்பனை செய்தார்கள்; இப்போது இலாபத்திலே வருவதைக்கூட --விற்பதற்கு முயலுகின்ற ஒரு நிலைமை இருக்கிறது. எனவேதான் இந்த தாராளமயம், உலகமயம், தனியார்மயம் என்று கூறி இந்திய தேசத்தினுடைய எதிர்காலத்தை, தமிழ்நாட்டினுடைய எதிர்காலத்தை, வளர்ச்சிப் பாதைக்கு இழுத்துச் செல்ல முடியாது என்ற கருத்து உடையவர்கள் நாங்கள். அடுத்து.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராளமயம், உலகமயம், தேசியமயம், இவையெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். நாம், புள்ளிவிவரங்களை எடுத்துப் பார்த்தோமானால், இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலேயே, நம்முடைய மொத்த ரெவின்யூ செலவு, ஏறக்குறைய 26 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிறது. நம்முடைய ரெவின்யூ வருவாய் -- Revenue receipt -- என்று எடுத்துக்கொண்டால், இத்தனை வரிகளையும் போட்டு, உங்கள் கண்டனத்தைப் பெற்றும்கூட -- புதிய வரிகளைப் போட்டும்கூட --ஏறக்குறைய 22 ஆயிரம் கோடி ரூபாய்தான் திரட்டமுடிகிறது. இதிலேயே துண்டு விழுகிறது. மத்திய அரசிடம் நிதியுதவி கேட்டால், அவர்கள் தரமாட்டோம் என்கிறார்கள். இந்த நிலையில், உலக வங்கி போன்ற வங்கிகளில் நிதியுதவியை நாடிப் பெறுவதைத் தவிர, இந்த மாநில அரசுக்கு வேறு என்ன வழி இருக்கிறது? நான் ஏற்கெனவே இந்த அவையில் தெளிவாகத் தெரிவித்ததைப்போல, நம்முடைய வருவாய், மொத்த வருவாய் -- Revenue receipt -- 22 ஆயிரம் கோடி ரூபாய் என்றால், அதில் பெரும்பகுதி 96 சதவீதம், அரசு ஊழியர்களுக்கே போய்விடுகிறதே, சம்பளம் வழங்குவதற்கும், பென்ஷன் வழங்குவதற்கும். பின், சாலை போடவேண்டும் என்கிறீர்கள்; பள்ளிக்கூடம் கட்ட வேண்டும் என்கிறீர்கள்; பாலம் கட்டவேண்டும் என்கிறீர்கள்; குளங்களை, ஏரிகளைத் தூர்வார

வேண்டும் என்கிறீர்கள். இதற்கெல்லாம் நிதிக்கு எங்கே போவது? ஆகவே, உலக வங்கியைத் தவிர, எங்களுக்கு வேறு வழி இல்லை. அவர்களை நாடித்தான் தீரவேண்டும். (குறுக்கீடு)

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசு, மாநில அரசுக்குக் கொடுக்க வேண்டிய நிதியினை வழங்கவில்லை; பல நல்ல திட்டங்களை எதிர்க்கட்சிகள் கேட்டுக்கொண்டிருக்கின்றன; அதை எப்படிச் செய்வது? உலக வங்கியைத்தான் நாட வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். அது உண்மை. ஆனால், உலக வங்கியினுடைய உத்தரவு எப்படியிருக்கிறது என்று சொன்னால், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள், விவசாயிகள்மீது வரிகளைச் சுமத்துவதற்கு உத்தரவிடுகிறது. அதை ஏற்றுக்கொண்டுதான் நீங்கள் நலத் திட்டங்களை ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கிறார். இப்போது, இந்தியா முழுவதும் மதிப்புக் கூட்டு வரி, அதாவது, Value Added Tax-VAT - என்ற முறைக்கு மாறிக் கொண்டிருக்கிறது. ஆகவே, எல்லா மாநிலங்களிலும், இனிமேல் ஒரேவிதமான பொருள்களுக்கு ஒரேவிதமான வரிதான் விதிக்கப்படும். இப்போது, கூடுதலாக வரிகள் போட்டு, நாம் 430 கோடி ரூபாய் ஈட்டுகிறோம் என்று சொன்னால், வறட்சிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை; விவசாயிகளுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை; நாம் போட்டிருக்கிற புதிய வரிகள் மிகவும் மென்மையானவை; கடுமை இல்லாதவை; இவை, ஏழையெளிய மக்கள், விவசாயிகள் ஆகியோரைப் பாதிக்காத வகையில்தான், அவர்கள் பயன்படுத்தாத அயிட்டங்களின்மீதுதான் இந்த வரிகளைப் போட்டிருக்கிறோம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் பார்த்தால், உண்மையிலேயே ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி நடக்கிறதா? அல்லது உலக வங்கியும், நபார்டு வங்கியும் சொல்கிற அந்த அளவுக்குத்தான் இன்றைக்கு ஆட்சி நடக்கிறதா? உத்தரவுகள் மின்சார வாரியத் திட்டத்திலிருந்து நாட்டிற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. மின்சார வாரியம் கடன் பெறுவதற்காக வேண்டி, அதனுடைய

ஆணையத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டும், இலவச மின்சாரம் கொடுக்கக்கூடாது என்று அப்படிச் சொல்வதற்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்காகக் கட்டணத்தை நாம் உயர்த்திவிட்டு, வேறுவழியிலே நாம் அவர்களுக்கு உதவி செய்கிறோம் என்று சொல்கிறபோது....(குறுக்கீடு)

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடிய விடிய இராமாயணத்தைக் கேட்டுவிட்டு இராமருக்கும் சீதைக்கும் என்ன உறவு என்று ஒருவர் கேட்டாராம். அதுபோல இருக்கிறது மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி பேசுவது. ஏற்கெனவே தெளிவாகப் பல முறை இங்கே சொல்லியாகிவிட்டது. இதனால், விதிக்கப்பட்டிருக்கின்ற புதிய கட்டணங்களால் ஏழை எளிய சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. அவர்களுக்கு ஒரு கட்டணம் என்று விதிக்கப்பட்டு இருக்கிறதே தவிர, அந்தக் கட்டணச் செலவு முழுவதையும் இந்த அரசே ஏற்றுக்கொள்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, நாளைக்கு நீங்கள் பேச்சைத் தொடருங்கள்; *5* மணித்துளிகள் தருகிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(26-3-2003)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1-30* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*46. 2001-2002-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

2003 மார்ச் 25] [திரு. ஜி. பழனிசாமி]

